"Coming to taxation, we have to adopt big standards against the background of a socialistic pattern of society. But what we find today is that even food articles are being taxed and by a perversity of logic it is contended that because food articles are taxed the other articles of consumption of the poor man should also be taxed. Reading through the speech of the Hon. the Minister for Finance we will find that the justification for taxing tobacco is that where practically every commodity including foodstuffs and cloth is subject to sales tax, there is no justification for exempting tobacco. I would like to humbly ask, if one wrong thing has been done and is being perpetuated, why should another wrong be done? Can two wrongs make one right thing? Here, in this country, we find that food is being taxed. It is an atrocious thing that the poverty-stricken teeming millions have still got to pay a tax on foodstuffs because of the Sales Tax Act. What is much worse is that the two new imposts in this Budget also touch the pockets of the poor. The ordinary man who uses tobacco will have to pay a tax on it because it is ultimately the consumer who pays the sales tax. So far as the flat surcharge of 2 annas in the rupee on land revenue is concerned, this will also touch the poor man because the rich man who pays two or three thousand rupees as land revenue has got the resources and he can easily afford to pay this surcharge. But the small pattadar could ill-afford to bear this additional burden. These two new imposts do really go counter to the professions of socialism.

10–30 a.m. "I am sure there are other resources available in this country and it is not as if these are the only two resources available. For instance, we have still got the death duties to be exploited. The death duties that have been taken credit so far are only what has been assigned by the Centre and as far as the death duty on agricultural land is concerned, the resolution still remains to be passed. I do not understand why there is some dilatoriness in this matter. If this resolution is passed, it will bring us larger resources."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"A resolution to that effect has already been passed in the Council."

SRI V. R. KRISHNA AYYAR :—"I am happy to hear from the Hon. the Minister for Finance that already a resolution to that effect had been passed in the other House. I do not know when that resolution will come before us here . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"Long before, it has been included in our agenda also . . ."

SRI V. R. KRISHNA AYYAR :—"I am glad that the Hon. the Minister for Finance is enlightening me on things that were taking place during my absence. Sir, from that new source of

revenue, the Government will be able to derive a large portion of revenue. Again, the Hon. the Minister for Finance can consider the possibility of taxing foreign liquor. I do not wish to speak how the policy of Prohibition is being implemented now. Although I am an ardent prohibitionist in the sense that poorer classes should be weaned from the drink evil, still I feel that the richer classes—the luxury hunters—could be taxed to the hilt and for that purpose foreign liquor could be taxed heavily. By doing so, the coffers of the State may be augmented considerably.

" While joining in the chorus of criticism offered by a number of critics, I am quite aware of the fact that the caravan will pass. But all the same, I hope that the Hon. the Minister for Finance will bear in mind the criticisms that are made by the Members from the Opposition Benches and try to change his policy.

" In conclusion, I wish to refer to one particular matter which has been repeated by hon. Members from Malabar. The people in the Western districts, i.e., the people living in the West Coast have been suffering from a longstanding discrimination. Not only that. So far as Malabar is concerned, it is almost given a Cinderella treatment. We find that the building programme for the Kozhikode Hospital which is to be the basis for a Medical College in Kerala or in Malabar in particular is going slow and is remaining in a stunted state. Relief is being denied on many a matter on which we thought the Government would give it. The Prime Minister of India defined the other day the socialistic society in the Parliament as a distant picture of happy society with equal opportunity for all. Instead of allowing that picture being kept distant and ever more distant, let us bring it near and still nearer by giving helpful and constructive suggestions. I hope the Hon. Minister will accept them and bring the picture nearer and nearer. That is our cherished hope, Sir."

* **Sri K. ARANGANATHAN** :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கிராம மக்கள் நலனையே மனதில் வைத்து செம்மையாக, சிறப்பாக 1955–56-வது ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரித்த கனம் நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களை முதலில் பாராட்டாமல் இருக்கமுடியாது. வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும்பொழுது கிராமத்தின் மீது அரசாங்கத்தின் கண்ணோட்டத்தைத் திருப்பிய நமது முதல் அமைச்சர் அவர்களையும் பாராட்டுகிறேன். கிராம பகுதிகளில் உள்ள சிறு நீர்ப்பாசன ஏரி குளங்களை செப்பனிடுவதற்காக 1955–56-ல் 125 லட்ச ரூபாய் ஒதுக்கி இருப்பது, கிராம மக்களை மனதில் வைத்து தயாரித்த வரவு செலவாக காட்சி அளிக்கிறது.

" நகரங்களைப் போலவே நாட்டுப்புறங்களிலும் மின்சாரத்தை பரப்புவதற்காக எல்லா ஆண்டுகளைக் காட்டிலும் அதிகமாகவே இவ்வாண்டில் பணம் ஒதுக்கி இருக்கிறது. அதை கிராம மக்கள் வரவேற்காமல், போற்றாமல் இருக்க முடியாது. இதுவரையில் 2,200 கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்த நடைமுறை ஆண்டிலேயே இன்னும் 300 கிராமங்களுக்கு மின்சாரத்தை பரப்பி, இவ்வாண்டோடு 2,500 கிராமத்திற்கு மின்சாரத்தை பரப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றால் இந்த நிலையை யார் தான் வரவேற்காமல் இருக்க முடியும் ? கிராமங்களுக்கு மின்சாரத்தை பரப்புவதற்கு மட்டில் வரவு செலவில் 764 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[Sri K. Aranganathan] [3rd March 1955

இதை எல்லாம் பார்க்கும்போழுது உண்மையிலேயே சுதந்திரம் பெற்ற பலனை அடைந்துவிட்டோம் என்று எண்ணம் உதித்து நம் ஆட்சியின் சாதனையை எண்ணிப்பார்த்து பெருமிதம் அடைகிறோம்.

"இதுவரையில் தேசிய விஸ்தரிப்பு திட்டம் 48 ப்ளாக்குகளில் பரப்பப் பட்டிருக்கிறது. சமுதாய நலத்திட்டம் 21 ப்ளாக்குகளில் நடைமுறையில் இருக்கிறது. ராஜ்யத்தில் நாலில் ஒரு பங்கு தேசிய விஸ்தரிப்பின் பயனை இப்பொழுது அடைகிறது. 1955–56-ல் மீண்டும் 36 ப்ளாக்குகளை புதிதாக ஏற்படுத்தப்போகிறார்கள் என்ற செய்தி மனதிற்கு மகிழ்ச்சியையும், சாந்தி யையும் தருகிறது. புதிய ப்ளாக்குகளுக்கு வேண்டிய சிப்பந்திகளுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன என்ற செய்தி, நமது மாகாணத்திற்கும், மக்களுக்கும் நல்லது செய்ய நம் அமைச்சர்கள் எவ்வளவு ஆர்வத்துடனும், உணர்ச்சியுடனும் வேலைசெய்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

"கிராமக் குழந்தைகளின் கல்வியில் இதுவரையிலும், இந்த மந்திரி சபை காட்டுகிற அக்கறை இதற்கு முன்பெல்லாம் இருந்த எந்த மந்திரி சபையும் காட்டியதில்லை என்பதை தைரியமாகச் சொல்கிறேன். பள்ளிக் கூடங்கள் இல்லாத ஊர்களில் நடைமுறை ஆண்டில் 2,800 புதிய எலி மெண்டரி பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். மீண்டும் 1,500 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும், இப்பள்ளிக் கூடங்களைப் பலப்படுத்த மீண்டும் 1,000 ஆசிரியர்களை நியமிக்க தக்க ஏற்பாடுகள் செய்துள்ளது நமது அரசாங்கம் என்ற செய்தியைக் கேட்டு நாம் எப்படித்தான் இந்த மந்திரி சபையை பாராட்டாமல் இருக்க முடியும் ?

"தவிர, மூன்றும் படிவம் வரையில் எல்லோருக்கும் இலவச படிப்பு என்பதைப்போன்ற சிறந்த செயல் எந்த மந்திரி சபை இதுவரையில் செய்தது ? இதைக்கண்டு யார்தான் பெருமிதம் அடையாமல் இருக்க முடியும் ?

"பிற்பட்ட இனமாணவர்களுக்கு ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப்பிற்காக அதிகமாக பணம் 1955–56-ல் வரவு செலவில் ஒதுக்கி இருக்கிறார்கள். பிற்பட்ட இனத்திற்காக இதையாகிலும் செய்து இருக்கிறதே இந்த அரசாங் கம் என்று சந்தோஷப்படவேண்டி இருக்கிறது.

"கிராமத்தின் போக்கு வரத்து வசதிக்காக ரோடுகளைப் போடுவதற்காக அரசாங்கம் ஜில்லா போர்டிற்கும் பஞ்சாயத்து போர்டுகளுக்கும் 75 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. சென்னை நகருக்கும் அரசாங்கம் ஐந்து லட்சம் ரூபாய் ரோடுகளுக்காக ஒதுக்கி இருப்பது சென்னைவாசிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

"எண்பது லட்சம் ரூபாய் செலவில் நெய்வேலி பூர்வாங்க சோதனைத் திட்டம் முடிவடைந்து இருக்கிறது. இந்த நெய்வேலி திட்டத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டு நிகர லாபத்தில் நான்கில் ஒரு பங்கைத்தான் நமக்குக் கொடுப்பதாகச் சொல்வது எனக்கு திருப்தியை அளிக்கவில்லை. எனது கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையில் கனம் மந்திரி அவர்கள் பல உபயோககரமான சாமான்கள் செய்யும் பொருள்கள் பழுப்பு நிலக் கரியை எடுக்க ஏற்பாடுகள் செய்யும்பொழுதே கிடைப்பதாகச் சொன்னார் கள். இவ்வளவு பொருள்களை எல்லாம் நமது அரசாங்கமே எடுத்து தக்க தொழிற்சாலைகளை ஏற்படுத்தி சாமான்களை எல்லாம் அரசாங்கமே செய்யவேண்டும் என்று அரசாங்கத்திற்கு எனது யோசனையை சொல்லு கிறேன். இதனால் அரசாங்கத்திற்கு ஒரு வருஷத்தில் கோடிக் கணக்கான ரூபாய் இலாபம் கிடைக்கும்.

"கொஞ்ச நேரத்திற்கு முன்பு பேசிய எனது நண்பர் கனம் சுவாமி சகஜானந்தா அவர்கள் சில குறைகளை தெரிவித்தார்கள். இப்படி குறை களை சபையில் தெரிவித்து மீண்டும் சில குறைகள் ஏற்பட இடம் கொடுக்கக் கூடாது. சுவாமி சகஜானந்தா பேச்சு குறைகள் ஏற்பட இடம் கொடுத்து விட்டதைக் கண்டு வருந்துகிறேன்.

3rd March 1955] [Sri K. Aranganathan]

" சட்ட சபை அங்கத்தினராக கனம் சகஜானந்தா இருப்பதால், சபையில் பேசுகிற பேச்சு எல்லாம் தினசரி ஏடுகள் அச்சிட்டு பிரசுரிக்கின்றன. அதை பொதுமக்கள் பொறுப்போடு வாங்கி படிக்கின்றனர் என்ற ஒரு தனி வாய்ப்பு இருக்கிற காரணத்தினுல், நடந்ததை மிகைப்படுத்தி நடக்காததைச் சேர்த்து இச்சபையில் பேசி கிராமத்திலே அமைதியும் நல்ல எண்ணமும் நிலவுகிற இடத்தில், கலகத்தையும், விரோதத்தையும் உண்டாக்குகிற வகையில் பேசிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

" ஒரு தனி மனிதன் தனது தவறுல் செய்த ஒரு குற்றத்தை அவன் பிறந்த சமூகமே செய்தது என்று சபையில் பேசியது இரண்டு பெரிய சமூகங்களிடையே விரோதத்தையும், கலகத்தையும் உண்டாக்க வேண்டும் என்ற விஷம மனப்பான்மையோடு பேசிவிட்டார் கனம் சகஜானந்தா. நாம் அனைவரும் மக்களிடத்தில் அமைதியையும் நல்ல எண்ணத்தையும் மேலும், மேலும் வளரச் செய்யத்தான் வந்திருக்கிறோமே ஒழிய கலகத்தை உண்டுபண்ண வரவில்லை என்பதை கனம் சகஜானந்தா மறந்து பேசி விட்டார் என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

" ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங்களை இழிவாக நடத்துகிருர்கள் என்பது நமது நண்பர் கனம் சுவாமி சகஜானந்தாவின் குற்றச்சாட்டு. இது ஓரள விற்கு உண்மைதான். இல்லை என்று சொல்லவில்லை. தன்னிடத்தில் உள்ள குறையை போக்கிவிட்ட பிறகுதான் மற்றவரிடத்தில் உள்ள குறையைச் சொல்லவேண்டும். நண்பர் சுவாமி சகஜானந்தா தொகுதியும், நந்தனர் கல்வி கழகத்தை நிறுவிய தாலூக்காவான சிதம்பரம் தாலுக்கா வில் உயர்ந்த ஜாதி என்று தன்னை நினைத்துக்கொண்டிருக்கும் ஒரு பறையன் அவர்களிலே உள்ள தாழ்ந்த ஜாதி என்று கருதப்படும் பற வண்ணாத்தி தனது துணியை உடுத்திக்கொண்டாள் என்பதற்காக பற வண்ணாத்தியை நடுத் தெருவில் உதைத்தான்—அவமானப்படுத்தினுன். பறையர்களுக்குள்ளே மேல்ஜாதி—கீழ்ஜாதி. இதை தடுக்க—ஒழிக்க சுவாமி சகஜானந்தா என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார் என்றுதான் கேட் கிறேன். மற்றவர்களிடத்தில் குறைகளைக் காண்பதற்கு முன்பு தன்னிடத் தில் உள்ள குறைகளைப் போக்கிக்கொள்ள வேண்டும். அப்படி குறைகளை கனம் சுவாமி சகஜானந்தா போக்கிக் கொண்டாரா என்பது எனது கேள்வி. கனம் சுவாமி சகஜானந்தா பவுண்டர் சூப்பர்வைசராக இருக்கும் நந்தனர் கழக நிலையைப்பற்றி நான் விளக்கிச் சொன்னுல், அவரது நடவடிக்கைகள் இங்குள்ள அங்கத்தினர்களுக்கு தெரியும். நந்தனர் கல்வி கழகம் சம்பந்த மாக இந்த சபையில் நான் கேள்விகள் கேட்கும்பொழுதெல்லாம், இப்படி எல்லாம் கேள்விகள் கேட்க வேண்டாம் என்று பல தடவைகள் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிருர். (சிரிப்பு.) தங்களுடைய குற்றங் குறைகளை முதலில் உணர்ந்துகொண்டு மற்றவர்கள் குற்றங்களைப்பற்றி சபையில் பேசுவது நல்லது.

" நந்தனர் கல்வி கழகத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று உண்டு. இந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளி காம்பவுண்டுக்குள்தான் சுவாமி சகஜானந்தா தங்கும் ஆசிரமம் இருக்கிறது. அங்கே இன்னும் மற்றொரு மடம் இருக்கிறது. இந்த மடத்திற்கு எந்த நேரத்திலும் எவர் வேண்டுமென்ருலும் வரலாம் என்றும், ஏதேதோ நடப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவைகள் யாவும் முன்னுள் ஹரிஜன அமைச்சராக இருந்த கனம் வி. சி. பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். இதனுலேயே என் இந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியை வேறு ஒரு இடத்திற்கு மாற்றக்கூடாது என்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். தொடர்ந்து மந்திரியாக இருந்திருந்தால் கட்டாயம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்றி இருப்பார்.

" கடந்த முப்பது ஆண்டுகளாக சட்ட சபையில் அங்கத்தினராக இருக் கிருர், வயதில் முதிர்ந்தவர், அனுபவமுள்ளவர், ஹரிஜன வகுப்பின் ஹரிஜனங்களுக்காக பாடுபடுபவர் என்று முந்தியே ஏற்றுக்கொண்டதாக, இருப்பது காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் ஹரிஜனங்கள் முன்னேற்றத்திற்கு

பாடு படுகிறது என்பதற்காக, தான் பழைய காங்கிரஸ்காரர், தன் மனம் அறிந்து மந்திரி சபை நடந்துகொள்ளும் என்ற எண்ணம் சகஜானந்தாவிற்கு இருக்கிற காரணத்தினால் மக்களிடத்தில் நிலவி வரும் நல்லெண்ணமும் அமைதியையும் குலைத்து விரோதத்தையும் கலகத்தையும் உண்டுபண்ணுகிற அளவிற்கு இந்த சபையில் பேசிவிட்டார். இதை என் போன்றார்கள் இந்த சபையில் கண்டிக்காமல் இருக்க முடியாது. தென்னாற்காடு வடாற்காடு ஜில்லா ஏரியா கமிட்டி அங்கத்தினராக இருந்து கொண்டு கோயில்களுக்கு ட்ரஸ்டி நியமிப்பதில் கையாளும் முறை மிகக் கேவலமானது. ஆதலால் கோயில் நிர்வாகம் எப்படி ஒழுங்காக இருக்க முடியும் ? ஊழல்களும் குறைகளும் மலிந்து கிடக்கின்றன.

" தனக்குள்ள செல்வாக்கைக் கொண்டு முறை தவறிய வழிகளில் பல காரியங்களைச் சாதித்துக்கொள்கிறார். நந்தனார் கல்வி கழகம் ஒரு மடத்தில் இருக்கிறது. அந்த மடத்தை ரூ. 1,200-க்கு வாங்கினார். இந்த மடத்திற்கு வாடகைக்கு விண்ணப்பித்துக் கொண்டார். அப்பொழுதிருந்த டிரஷரி டிப்டி கலெக்டர் வீடு வாங்கிய கிரைய பத்திரத்தைத் தாக்கல் செய்தால்தான் மாத வாடகை நிர்ணயிக்க முடியுமென்று சொல்லி விட்டார். அதன் பிறகு தான் எப்பொழுதும் வழக்கமாகப் போட்டுக் கொண்டிருக்கும் குரங்கு குல்லாவைப் போட்டுக்கொண்டு கலெக்டர் முன் சென்று மாத வாடகை ரூ. 100 என்று நிர்ணயித்துக்கொண்டு வந்து விட்டார். ஒரே ஆண்டில் அந்த வீட்டின் கிரையம் வாடகையாக கிடைத்து விட்டது. தான் சட்ட சபை அங்கத்தினராக இருக்கும் சூழ்நிலையைதான் சுயநலத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்வதாகக் கேள்விப்படுகிறோம். அரசாங்கம் தனக்கு சலுகை செய்கிறது என்பதற்காக இப்படிப்பட்ட பல காரியங்களை சாதித்துக்கொள்வதாகக் கேள்விப் படுகிறேன். இந்த நிலையை தொடரவோ, வளரவோ விடக்கூடாது."

Sri D. DASARATHAN :—" Point of order, Sir."

Sri S. DAIVASIGAMONEY :—" Point of order, Sir."

Sri V. BALAKRISHNAN :—" On a point of order, Sir. Let the hon. Member Sri Dasarathan not make a speech."

DEPUTY SPEAKER :—" Let him finish his point."

DEPUTY SPEAKER :—" Is it a point of order? The hon. Member can reply afterwards in his speech."

Sri M. NARAYANA KURUP :—" It is a point of order, Sir, inasmuch as one hon. Member may not indulge in unrestricted personal attack against another hon. Member. It is clearly a point of order."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" I do agree that it may not be desirable that one hon. Member should make a personal attack on another hon. Member of the House. But there is no point of order, because it is open to any member to criticise any other member; as it is open to any member to criticise an Hon. Minister, so also other hon. Members are entitled to speak about some other member. But we have to consider the desirability and propriety of not doing so. It is for the hon. Member speaking to consider whether he cannot refrain from saying such things. Anyway it does not amount to a point of order. In the interests of all, I would appeal to the hon. Member Sri Aranganathan not to speak

3rd March 1955] [Sri C. Subramaniam]

in such terms. It will be fair also that a personal attack is not made on the hon. member Sri Sahajananda, for, he only brought those things to the notice of the Government.''

*SRI K. ARANGANATHAN :—" சட்ட சபையில் எதை வேண்டு மென்றாலும் பேசலாம் என்கிற உரிமை இருக்கிறது என்பதால் நாட்டிலே குழப்பத்தையும், கலவரத்தையும் உண்டாக்கும் வகையில் ஸ்ரீ சுவாமி சகஜானந்தா பேசிவிட்டார் என்பதை இச்சபைக்குச் சுட்டி காட்டவே நான் இந்த அளவுக்கு பேசினேனே ஒழிய வேறு எந்த காரணத் திற்காகவும் அல்ல. மக்கள் மனதை குழப்பும் முறையில் நாம் இங்கே பேசக்கூடாது என்பதற்காகவே இந்த வருந்தத்தக்க சூழ்நிலையை உண்டாக்குகிறேன்.

" இன்னும் ஒரு விஷயம் உள்ளது. நந்தனார் கல்வி கழகம் நடத்தும் மூன்று பள்ளிக்கூடங்களைப் பராமரிப்பதற்காகவே அரசாங்கம் சிதம்பரம் தாலூகாவில் 50 ஏக்கர் நிலத்தை எலினேட் செய்துள்ளார்கள். இப் பள்ளிக்கூடங்களை எல்லாம் 1939-ல் அரசாங்கம் மேற்கொண்டு விட்டது. அதற்கு பிறகு இந்த நிலத்திலிருந்து வருகிற வருமானத்தை நந்தனார் கல்வி கழகத்தார் என்ன செய்தார்கள் என்பதும் இப்பொழுது கர்நாடக சங்கீத பாடசாலைக்கு இவ்வளவு எண்டோமெண்ட் அவசியமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். இந்த நிலம் ஒரு குறிப்பிட்ட செலவிற்காக கொடுக்கப்பட்டது என்பதும் அரசாங்கத்தின் நினைவுக்கு கொண்டுவருகிறேன்.

" கடைசியாக கிராம மக்களுக்கு நன்மை தரும் வகையில் 1955–56-வது ஆண்டு வரவு செலவு திட்டம் தயாரித்ததற்காக மீண்டும் நிதி அமைச்சரைப் பாராட்டுகிறேன். திறம்பட பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருவதற்கு இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். இந்த மந்திரி சபையே தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொண்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.''

*SRI C. KANDASAMY :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது நம் முன் விவாதத்திலிருக்கும் பட்ஜெட்டைப் பற்றி பொது வாகச் சில வார்த்தைகள் சொல்லப்பட்டன. பல அங்கத்தினர்கள் பட் ஜெட்டை ஆதரித்திருந்தபோதிலும் கூட, அவரவர்கள் சம்பந்தப்பட்ட ஜில்லாவைப் பற்றியோ, அல்லது சமூகத்தைப்பற்றியோ, அல்லது குறிப் பிட்ட இலாக்காவைப் பற்றியோ குறையிருக்கிறது என்று தான் ஒவ்வொரு அங்கத்தினரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது, எல்லா அங்கத்தினர்கள் பேச்சிலிருந்தும், நமது ராஜ்யத்தின் நிலைமை பெரிய அளவுக்கு முன்னேறவில்லை என்ற முறையில் தான் இந்தக் குறைகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன என்பது என் அபிப் பிராயம். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் ஏதோ கணக்கு ஒப்பிப் பதைப் போலத் தானிருக்கிறது. சென்ற ஒரு வருட காலத்தில் க்ஷேம நல சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்கார் ஜனங்களின் சுபிட்சத்திற்காக என்ன செய்திருக்கிறார்கள், ஜனங்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறதா, நமது நாட்டின் பொருளாதார நிலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. சென்ற வருடத்துப் பட்ஜெட்டைப் படித்தேன். அந்த பட்ஜெட் பிரசங்கத்தில் நிதி மந்திரி அவர்கள் சில விஷயங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.

" சென்ற வருஷ பட்ஜெட் பிரசங்கத்தைப் படித்தேன். இந்த வருஷ பட்ஜெட் பிரசங்கத்தையும் படித்தேன். இந்த வருஷ பட்ஜெட் பிரசங்கத் தில் கனம் நிதி மந்திரி அவர்கள் சில விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அதையும் சென்ற வருஷ பட்ஜெட் பிரசங்கத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தேன் ஏதாகிலும் மாறுதல் இருக்கிறதா என்று. ஒன்றும் தெரியவில்லை. ஆனால் விற்பனை வரியைப்பற்றி சென்ற வருஷம் ஒன்று குறிப்பிட்டிருக்கி றார். இந்த வருஷத்தில் விற்பனை வரியிலிருந்து வரக்கூடிய வருமானம் 10–50 a.m.

வீழ்ந்துகொண்டு வருகிறது. அதனுல் அரசாங்கத்தின் வருமானமும் வீழ்ந்துவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறூர். அதனுல் வாங்கும் சக்தியும் நாளுக்கு நாள் வீழ்ந்துகொண்டு வருகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறூர். அதற்கு ஏதாகிலும் பரிகாரம் தேடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறூர்களா என்றுல் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லே.

"சென்ற பட்ஜெட்டில் விற்பனைவரி மூலம் எதிர்பார்த்த வருமானம் 1,071 லட்சம் ரூபாய், ரிவைஸ்ட் எஸ்டிமேட்டின்படி எதிர்பார்த்த வருமானம் 909 லட்சம் ரூபாய். இந்த வருஷ வருமானம் வந்தது 875 லட்சம் ரூபாய். ஆக மொத்தம் சுமார் 196 லட்சம் ரூபாய் பற்றுக்குறையாகிவிட்டது. சுமார் 20 சத விகிதம் குறைந்து விட்டது என்று அவர் கணக்குக் கொடுத்திருக்கிறூர். அதனுல் வாங்கும் சக்தியும் குறைந்து விட்டது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறூர். அதாவது ஐந்தில் ஒரு பங்கு இப்பொழுது வாங்கும் சக்தி குறைந்து விட்டது. இதை எல்லோரும் புரிந்துகொள்ள முடியும். போன வருஷ பட்ஜெட்டில் வாங்கும் சக்தியைப்பற்றி குறிப்பிட்டிருந்தார். இந்த வருஷ பட்ஜெட்டில் ஜனங்களுடைய சுபிட்சத்தைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லே. தலைப்புகளைப் பார்த்தால் ஐந்து வருஷ திட்டத்தைப்பற்றியும், தேசீய அபிவிருத்தி திட்டத்தைப்பற்றியும், சமுதாய அபிவிருத்தி திட்டத்தைப்பற்றியும், இந்த மாதிரியான சில விஷயங்களைப்பற்றிதான் குறிப்பிட்டிருக்கிறூர். மொத்தமாக இந்த ராஜ்யத்தின் ரிவினியூ என்ன, அதனுடைய செலவு என்ன, அபிவிருத்தி வேலைகளுக்கு எவ்வளவு செலவிடப் போகிறூர்கள், இவைகளைப்பற்றிதான் சொல்லியிருக்கிறூர். ஜனங்களிடத்திலுள்ள வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய திட்டம் இருக்கிறதா என்றுல் அதைப்பற்றி ஒன்றுமே இல்லே. தொழில் அபிவிருத்திக்கு ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா என்றுல் அதுவும் இல்லே. தொழில் வளர்ச்சி சம்பந்தமாக "அப்ரீஷியபிள்," என்று குறிப்பிட்டிருக்கிறூர். எந்த அளவில் சௌகர்யம் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லே. மிச்சம் எந்த அளவில் ஏற்பட்டு மக்களுக்கு அதனுல் லாபம் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய புள்ளி விவரங்கள் அதில் இல்லே. எந்த விஷயத்தில் மாகாண மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது, எந்த அளவில் மாகாண மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்ற விஷயங்களே இந்த பட்ஜெட் பிரசங்கத்தில் காணவில்லே.

"இன்றையதினம் விலேவாசி வீழ்ச்சியைப்பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறூர்கள். போன வருஷம் பட்ஜெட் பிரசங்கத்தில் பண வீக்கத்தை சமாளிப்பதற்கு சர்க்காருக்கு பெரிதும் வேலேயாக இருந்தது என்று குறிப்பிட்டார். அதைப்பற்றி அப்பொழுது குறிப்பிட்டிருந்தார். ஆனுல் இந்த வருஷ பிரசங்கத்தைப் பார்த்தால் வாங்கும் சக்தி குறைந்து விட்டது, விலேவாசி வீழ்ச்சி அடைந்து விட்டது அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறூர். விலேவாசி வீழ்ச்சியை எப்படி கட்டுப்படுத்துவது என்று கவலேயாக இருக்கிறது என்றும் சொல்லுயிருக்கிறூர். மூன்று வருஷங்களாக விலேவாசி வீழ்ச்சிக்கும் வாங்கும் சக்தி குறைந்திருப்பதற்கும் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறூர்கள்? இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலேமையையும் அப்பொழுது ஏற்பட்டிருந்த நிலேமையையும் பார்க்கவேண்டும். இந்த விஷயங்களே கவனித்துப் பார்க்கவேண்டும். விலேவாசி வீழ்ச்சியைப்பற்றி எதிர்க்கட்சி அங்கத்தினர் கூட குறிப்பிட்டிருக்கிறூர். எதிர்க்கட்சி அங்கத்தினர் கனம் வி. கே. பழனிசாமி கௌண்டர் அவர்கள் பேசும்போதுகூட பெரிய நிலச்சுவாந்தார்கள்கூட இந்த விலேவாசி வீழ்ச்சியினுல் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறூர்கள் என்று இந்த சட்டசபையின் கவனத்திற்குக்கொண்டு வந்திருக்கிறூர். கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லும்போது ஒன்றைக் குறிப்பிடுகிறூர்; 'கொஞ்சம் விலே இறங்கி இருக்கிறது; உற்பத்தி அதிகரித்திருப்பதால்தான் அந்த விலே குறைந்திருக்கிறது; அதை நிரந்தரமான வீழ்ச்சி என்று எடுத்துக்கொள்ளக் கூடாது அதை ஆராய்ச்சி செய்து முடிவு செய்வதற்கு சில காலம் பிடிக்

3rd March 1955] [Sri C. Kandasamy]

கும், ஆகவே கொஞ்சம் நாள் காத்திருந்து பார்க்கவேண்டியதாக இருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் சொல்வதைக் கண்டு நான் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. கனம் நிதி மந்திரிக்கு அதிக பொறுப்பு உண்டு. பொருளாதார சாஸ்திரத்தை அவர் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார். விலைவாசியின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன வென்று அவர் கண்டு பிடிக்கவேண்டும். அதை கண்காணிப்பது அவருடைய பொறுப்பு. இறக்குமதி கொள்கைக்கும் ஏற்றுமதிக் கொள்கைக்கும் சம்பந்தம் உண்டு என்பது அவருக்கு நன்ருகத் தெரியும். சிலருக்கு ஏற்றுமதி இறக்குமதியில் ஏகபோக உரிமை கொடுப்பதால்தான் இப்படிப்பட்ட விலைவாசி வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது. அரசாங்கம் விலைவாசி வீழ்ந்திருருக்கிறது என்று தட்டிக்கழிப்பதில் சிறிதும் அர்த்தமில்லை. அதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிருர்கள் என்பதைத்தான் பார்க்கவேண்டும். அதைப்பற்றி பட்ஜெட் பிரசங்கத்தில் ஒன்றுமே இல்லை.

" எல்லா பொருள்களின் விலையும் குறைந்த பட்சம் 50 சத விகிதமும் 75 சத விகிதமும் குறைந்து விட்டது. நாளுக்கு நாள் இறங்கிக்கொண்டு வருகிறது. இதை ஒருவரும் மறுக்க முடியாது. நெல் விலையை எடுத்துக் கொண்டால் மூட்டை ஒன்று 20 அல்லது 22 ரூபாய் என்று விற்றவை இப்பொழுது ரூ. 12–8–0-க்கு குறைந்து விட்டது. இப்படி குறைந்த விலையில் அதை விற்பனை செய்திருக்கிருர்கள். கடலை விலை ஒரேயடியாக சரிந்திருக்கிறது. ஏற்கெனவே அதிகப்படியான அளவில் குறைந்து விட்டது. அதனுல் அனேகம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். புகையிலை விலையை எடுத்துக்கொண்டாலும் அதுவும் அதிகப்படியாக விலை குறைந்து விட்டது. ஒரு பாரம் விலை ஏற்கெனவே ரூ. 350-க்கும் 500க்கும் விற்கப்பட்டது. இப்பொழுது ரூ. 150-க்கும் 250-க்கும் குறைந்து விட்டது. சர்க்கரையைப் பார்த்தால் நம் நாட்டில் 16 லட்சம் டன் உற்பத்தியாக முடியும். இந்த நாட்டின் உற்பத்தியோ பத்து லட்சம் டன். வெளி நாட்டிலிருந்து 6 டன் வரவழைக்கப்படுகிறது. ஆக மொத்தம் 16 லட்சம் டன் நம் நாட்டில் செலாவணியாகிறது. இப்பொழுது கரும்பின் விலையும் குறைந்து விட்டது. கரும்பு உற்பத்தியாளர்களுக்கு விலை குறைந்து விட்டாலும் பெரிய முதலாளிகளுக்கு அதிக லாபம் கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. இதனுல் ராஜ்ய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். ராஜ்ய வாழ்க்கையே பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். பட்ஜெட்டைப் பார்த்தால் ஒரே கணக்காகத்தான் இருக்கிறது. வருமானம் இவ்வளவு செலவு இவ்வளவு என்றுதான் இருக்கிறது. மற்றும் கம்யூனிட்டி ப்ராஜெக்டுக்கும் இவ்வளவு என்றும், தேசிய விஸ்தரிப்புத்திட்டத்திற்கு இவ்வளவு என்றும், மின்சாரத்திற்கு இவ்வளவு என்றும், தண்ணீர் சப்ளைக்கு இவ்வளவு என்றும் முதலிய கணக்குகள் தான் பட்ஜெட் பிரசங்கத்தில் இருக்கின்றன. இந்தப் புள்ளிவிவரங்களை மட்டும் கொடுத்து விட்டால் மக்களுக்கு நன்மை செய்ததாகாது.

" வேலையில்லா திண்டாட்டத்தைப் பற்றி போன வருஷம் வெகு அழகாக பேசியிருக்கிருர். $7\frac{1}{2}$ லட்சம் பேர்களை ரிஜிஸ்ட்டர் செய்திருப்பதாகவும் பட்டதாரிகள் இவ்வளவு பேர்கள் இருக்கிருர்கள் என்றும் புள்ளி விவரம் கூறுகிறது. ரயில்வே பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு மனுக்கள் அனுப்பும்படி கேட்டால் 1,500 காலி ஸ்தானங்களுக்கு லட்சத்தி இருபத்தி ஐயாயிரம் மனுக்கள் வருகின்றன. இதை சபையின் கவனத்திற்கு எடுத்து காட்ட விரும்புகிறேன்.

" இந்த அளவில் நாட்டில் நகரங்களிலும் கிராமங்களிலும் வேலையில்லா திண்டாட்டம் பரவிக்கொண்டு வருகிறது. விற்பனை வரியில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றுல் மக்களிடத்தில் வாங்கும் சக்தி அந்த அளவில் குறைந்து விட்டது என்பதை கவனிக்க வேண்டும். அவர்களுடைய கணக்குப்படி 20 சத விகிதம் குறைந்து விட்டது. இதைக் காட்டாது பட்ஜெட் பிரசங்கத்தை சமர்ப்பித்திருப்பதைக் காணும்போது ஆச்சர்யமாக இருக்கிறது.

[Sri C. Kandasamy] [3rd March 1955

"பிரசங்கத்தைப் பார்த்தால் ரோடு போடப்படுகிறது என்றும் ஸ்பெஷல் டிபார்ட்மெண்டை அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், போக்குவரத்து சாதனங்கள் செய்யப்பட்டிருக்கிறது என்றும், மின்சார அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றும் கிணறுகள் வெட்டப்படுகின்றன வென்றும், ஸ்தல வேலைகளை எடுத்துக்கொண்டு நடத்தப்படுகிறது என்றும் தான் சொல்லப்படுகிறது. அவைகளினுல் எந்த அளவிற்கு வேலையில்லா திண்டாட்டம் நீங்கியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். சமுதாய அபிவிருத்திக்கு ஊக்கம் அளித்திருக்கிருர்கள் என்றுல் அதனுல் வேலையில்லா திண்டாட்டம் நீங்கி இருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். பவானி திட்டத்தை முடித்திருக்கிறேம் என்று சொல்லுகிருர்கள். அதனுல் இரண்டு லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடிக்கு வரலாம். அதனுல் உற்பத்தி அதிகரித்திருக்கும். ஆனுல் வேலையில்லா திண்டாட்டம் நீங்கிவிட்டதா என்பதைப் பார்க்க வேண்டும். தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ரசாயன உரத்தைக் கொடுக்கிருர்கள், அதனுல் உற்பத்தி ஓரளவு பெருகிவரலாம். அதனுல் வேலையில்லா திண்டாட்டம் நீங்கிவிடவில்லை. பணம் வைத்துகொண்டிருக்கக் கூடியவர்கள் அந்த ரசாயன உரத்தை வாங்கி உற்பத்தியை பெருக்கிக் கொள்ளுகிருர்கள். ஆனுல் வேலை யில்லா திண்டாட்டம் நீங்குவது இல்லை. தொழில் அபிவிருத்தி செய்கிறேம். அதனுல் உற்பத்தி பெருகுகிறது. ஆனுல் வேலை இல்லா திண்டாட்டம் நீங்கவில்லை. அரசாங்கத்தின் ரிவினியூ பெருகியிருக்கலாம். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஏதாகிலும் நன்மை இருக்கிறதா என்றுல் மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை. வாங்கும் சக்திதான் குறைந்து வருகிறது. மூன்று அவுன்ஸ் சாப்பிடுகிறவன் இன்று இரண்டு அவுன்சுகள்தான் சாப்பிடுகிருன். ஒரு அவுன்ஸ் குறைவாக சாப்பிட்டு தன்னுடைய வாழ்க்கையை நடத்துகிருன். சமுதாய மாறுதல் ஏதாகிலும் ஏற்பட்டிருக்கிறதா என்று நிதி மந்திரி காட்டவில்லை. போன வருஷம் பொருளாதாரத்தைப் பற்றியும் தொழில் வளர்ச்சியைப்பற்றியும் பேசிய கனம் நிதி மந்திரி அவர்கள் இன்று மௌனம் சாதித்திருக்கிருர்.

11 a.m. "நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தைப்பற்றி பலர் பேசி இருக்கிருர்கள். இத்திட்டத்திற்கு சுமார் 60 கோடி ரூபாய் செலவாகும் என்றும் இத்தொகை முழுவதையும் மத்திய அரசாங்கமே தரும் என்றும் இத்தொழில் திட்டத்தின் நிகர லாபத்தில் கால்பங்கு நம் ராஜ்ய அரசாங்கத்திற்கு கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது. ஏறக்குறைய 80 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்ட பூர்வாங்க சோதனைத் திட்டம் பூர்த்தியடையும் தருவாயில் உள்ளதென்றும் இத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும் என்றும் ஹேஷ்யம் செய்யப்படுகிறது பல விஷயங்களில் ராஜ்ய சர்க்கார்கள் தப்பித்துக்கொள்வதற்கான ஒரு வழி என்னவென்றுல், 'தொழில் விஷயங்களில் மத்திய சர்க்காரைச் சேர்ந்த ஒரு விஷயம், ராஜ்ய சர்க்காரைச் சேர்ந்ததல்ல, எங்களுக்குப் பிடிப்பு கிடையாது, இந்த வருஷத்தில் எங்களுக்கு சிறிதளவுகூட செலவு இல்லவே இல்லை என்று சொல்லலாம்' என்று அவர் குறிப்பிட்டிருக்கிருர். இது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதுபோல் இருக்கிறது. இம்மாதிரி ஏதாவது எக்கச்செக்கமான நிலைமை வரும்போது இதைப்பற்றி நாங்கள் தலையிடமுடியாது, மத்திய சர்க்கார் இலாகா என்று சொல்லப்படுகின்றது. தொழில் வளர்ச்சி விஷயம் மத்திய சர்க்கார் கையில் வைத்திருப்பதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனுல் நாடு ஒட்டுமொத்தமாக முன்னேற வேண்டுமென்று சொன்னுல் மாகாண சர்க்காருடைய அபிப்பிராயத்தையும் கணக்கிலெடுத்துக்கொண்டுதான் மத்திய சர்க்கார் முடிவு எடுக்கவேண்டும். அப்படியானுல் நெய்வேலித் திட்ட விஷயத்தில் மாகாண சர்க்கார் கொடுத்த யோசனை என்ன ? அவர்கள் கொடுத்த பதில் என்ன ? நிகர லாபத்தில் கால் பங்கு ராஜ்ய சர்க்காருக்கு போதும் என்று மாகாண சர்க்கார் ஒத்துக்கொண்டிருக்கிருர்களா ? மற்ற மாகாணங்களிலுள்ள தொழிலபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளும்போது நிகர லாபத்தில் இம்மாதிரி பெரும்பகுதியை எடுத்துக்கொள்ளுகிருர்களா என்பதையும் நமது சர்க்கார் கவனிக்கவேண்டும். நெய்வேலித் திட்டம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு கேந்தி

3rd March 1955] [Sri C. Kandasamy]

ரமான ஒரு திட்டமாகும். பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு நெய்வேலி திட்டம் அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது என்று தமிழ் நாடு பூராவும் நம்பிக்கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய சர்க்காரோடு சண்டைபோட்டு எந்த அளவுக்கு அதிகப் பலன் பெறவேண்டுமோ அதை மத்திய சர்க்காரிட மிருந்து வாங்குவதற்கு நம்முடைய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்துகின்றேன்.

"தொழில் உற்பத்தி என்று சொல்லும்பொழுது அது மத்திய சர்க் காரைச் சேர்ந்த ஒரு விஷயம் என்று நம்முடைய சர்க்கார் தட்டிக் கழிப்பது போல் சொல்வது பிரிவினை மனப்பான்மைக்கு மறைமுகமாக தூபம் போடுவதுபோல் ஆகிறது. பிரிவினை மனப்பான்மையை எதிர்த்துப்போராடு வோம் என்று சர்க்கார் தரப்பில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நடைமுறையைப் பார்க்கும்பொழுது பிரிவினைக்கு அஸ்திவாரம் போடுபவர்களும் பிரிவினை மனப்பான்மைக்கு ஆக்கம் அளிப்பவர்களும் மறைமுகமாக ஆதரித்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கூட்டமே ஆளும் கட்சியாக இருக்கிறது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஏன் அம் மாதிரி நான் சொல்லுகிறேன் என்றால் அவர்கள் சொல்லக்கூடிய பதில் தான் அதற்குக் காரணமாக இருக்கிறது என்றுதான் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

"1955–56-ம் வருஷத்தில் ஐந்து வருஷத் திட்டத்தை நிறைவேற்று வதற்காக 25 கோடி ரூபாய் செலவழித்தாகவேண்டுமென்று சொல்லப்படு கிறது. மூன்று வருஷகாலமாக மிகக் குறைவாகத்தான் நிறைவேற்றப் பட்டு வருகிறது என்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஐந்து வருஷத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டால் அமோகமான அளவுக்கு முன்னேற்றம் அடைந்து விடும் என்று சொல்லும்போது அதன் இறுதியில் அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் தயாரிப்பதற்கான அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது என்றும் சொல்லுகிறார். இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் எவ்விதம் இருக்கும் என்று நிதி மந்திரி அவர்கள் குறிப்பிடுவதை தோண்டித் துருவிப் பார்த்தாலுங்கூட தேச முன்னேற்றத்திற்கு மிக பெரிய அளவுக்கு ஏற் படுத்தும் என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. ஜில்லா கவுன்ஸில் களுக்கு இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் கொடுக்கப்படும், அதிலுள்ள கிராமத்தார்கள் இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் போடவேண்டும், எல்லாவற்றையும் சேர்த்தால் பத்து அல்லது பதினைந்துகோடி ரூபாய் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரியான திட்டத்தைப் பார்க்கும்போது சர்க்காருக்கு திட்டவட்டமாக ஒரு கொள்கை இருக்கிற தென்று சொல்லமுடியவில்லை. திட்டத்தைப்பற்றி தெளிவான ஒரு விளக் கம் தருவதற்கு சர்க்கார் தயாராயில்லை என்றுதான் இதிலிருந்து தெரி கிறது. கிணற்றில் கண்ணைமூடிக்கொண்டு இறங்குவதுபோல்தான் இவர் களது ஐந்து வருஷத்திட்டம் இருக்கிறது. ஐந்து வருஷத் திட்டத் தினால் வரப்போகின்ற பலனைப்பற்றி திட்ட கர்த்தாக்களுக்கே தெரியுமோ என்பது எனக்கு விளங்கவில்லை.

"கிராமப் புறங்களுக்கு குடிதண்ணீர் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். கிராமப் புறங்களிலுள்ள எல்லா ஜனங் களுக்கும் குடிதண்ணீர் வசதி ஏற்படவேண்டும், காலரா போன்ற தொத்து நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு சுகாதாரமான குடிதண்ணீர் அவசியம். ஐந்து வருஷத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய அபிவிருத்தி அத்த னைக்கும் இது முக்கியமாகும். கிராம ஜனங்கள் தங்களுடைய பகுதிப் பணத்தை ரொக்கமாகவோ உழைப்பின் மூலமாகவோ தரவேண்டுமென்று சொல்லப்படுகின்றது. எந்த நியாயத்தை வைத்துக்கொண்டு கிராம ஜனங் களிடத்திலிருந்து இவர்கள் பணம் கேட்கிறார்கள். டெல்டாப் பிரதேசத்தில் கூட 50 பர்சன்ட் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றது. அது சரியல்ல.

"ஐந்து வருஷத் திட்டம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து சகல பகுதியினருக்கும் நன்மை அளிக்கக்கூடிய முறையில் சட்டங்களைக் கொணர்ந்து ஜனங்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

[Sri C. Kandasamy] [3rd March 1955

திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பாதிப் பணம் மக்களிடமிருந்து கோருவது சரியல்ல. கிராமங்களுக்கு ரோடு போட வேண்டுமானாலும், கிராமங்களுக்குப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தவேண்டுமானாலும், குடி தண்ணீர் திட்டம் போடவேண்டுமானாலும், ஜனங்களிடமிருந்து பாதிப் பணம் கோருவதென்பது வியாபார ரீதியாகத்தான் இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். எப்படிப் பார்த்தாலும் கிராம மக்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை.

" ஒரு கிராமத்தில் 500 ஏக்கர் நிலம் இருக்குமானால் 300 ஏக்கர்களுக்கு சொந்தக்காரராக நிலப்பிரப்புக்கள் சிலர் இருப்பார்கள். பாக்கி 200 ஏக்கருக்கு 150 பட்டாதார்கள் இருப்பார்கள். அந்த 150 பட்டாதார்களில் 10 ரூபாய்க்குக் குறைந்த கிஸ்தி செலுத்துபவர்கள் 100 பேர் இருப்பார்கள். நிலம் இல்லாதவர்கள் 200 பேர்கள். நிலமில்லாத 200 பேர்கள் தங்களுடைய உடல் உழைப்பும் பட்டாதார்கள் சகட்டு மேனிக்குப் பணமும் கொடுக்கவேண்டும். இப்படி வசூல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படும் திட்டத்தில் பணம் ஒரு சிலருக்குத்தான் ஏற்படுகிறது. ஒரு புதிய பாசன வசதி, ஒரு புதிய பாலம், ஒரு புதிய ரோடு இவைகளினால் இந்த கிராமத்திலுள்ள நிலச்சொந்தக்காரர்கள்தான் அதிக பலனடைவார்களே யொழிய ஒரு அங்குல நிலம்கூட இல்லாத விவசாயி, குத்தகைவாரத்திற்கு நிலத்தைப் பயிரிடும் விவசாயி ஒரு பலனையும் அனுபவிக்கப்போவதில்லை. ஊர் ஊராகச் சென்று நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து தன் உழைப்பைக்கொண்டு உடல் வளர்க்கக்கூடிய ஒரு விவசாயிக்கு அவன் ஏதோ தற்செயலாக ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் பிறந்தான் என்பதைத் தவிர இந்த நாட்டுக்கும் அவனுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. தனக்குச் சொந்தமாக நிலம் இல்லாத ஒரு விவசாயிக்கு புதிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தன்னுடைய உடல் உழைப்பைத்தருவதற்கு என்ன உற்சாகம் ஏற்படும் என்பதை சர்க்கார் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். திட்டத்தினால் ஏற்படக்கூடிய பலனை அவன் கிஞ்சித்தும் அனுபவிக்கமுடியாத நிலையில் அவனுடைய உடலுழைப்பை தரவேண்டுமென்று கோருவது எந்தவகையில் நியாயம் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

" ஆகவேதான் நாங்கள் கூறுகிறோம், பொது ஜனங்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும், விலைவாசி வீழ்ச்சியைத் தடுப்பதற்கும், வெறும் அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக பலன் வரமுடியாது. இன்று நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வந்தாலல்லாது எத்தனை திட்டங்கள் கடன்வாங்கி நிறைவேற்றப்பட்டாலும் புதிய வரிகளைப் போட்டாலும் பலன்தரப்போவதில்லை. நாங்கள் குறிப்பிட்டபடி இங்கு இருக்கக்கூடிய சமுதாயத்திற்குத் தேவைப்படக்கூடிய ஒரு முக்கியமான மாறுதலாகிய நிலச் சீர்திருத்தத்தைக்கொண்டுவரவேண்டும். சோஷலிசபாணியில் சமுதாயத்தை அமைக்கப்போகிறோம் என்று ஆவடியில் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றிவிட்டால் மட்டும் போதாது. இந்த நாட்டின் நிலைமையைப் பார்த்து, மக்களுடைய வாங்கும் சக்தியைக் கணக்கில் எடுத்துகொண்டு எந்த அளவுக்கு அவசியமான மாறுதல் செய்யப்படவேண்டும் என்று நிர்ணயித்து ஒரு நிலச்சீர்திருத்தம் கொண்டுவரவேண்டும் என்றுதான் நாங்கள் வற்புறுத்தி வருகின்றோம். இதைச் செய்யாவிட்டால் நாட்டுக்கு விமோசனம் ஏற்படப் போவதில்லையென்பதே எங்களுடைய அபிப்பிராயமாகும்.

" நிலவரிக்கு அடுத்தபடியாக விற்பனைவரிதான் சர்க்காருக்கு மிக முக்கியமான ஒரு வருமானம் என்று சொல்லிக்கொண்டுவந்தார்கள். விற்பனை வரி காமதேனுக்கு ஒப்பாக சர்க்கார் கருதிவந்தார்கள். இன்றைய தினம் மக்களுடைய வாங்கும் சக்தி குறையும்போது காமதேனு படுத்துவிட்டது. இனி சகட்டு மேனிக்கு விவசாயிகள் வரி கொடுக்கவேண்டுமென்று சொல்லுவது மிக அநியாயமாகும். வரிகொடுக்கச் சக்தியுள்ளவர்கள் மீது போடாமல் மேலும் மேலும் விவசாயிகளின்மீது வரியைச் சுமத்துவது அநீதியாகும். சென்ற மூன்று வருஷ காலமாக நானும் பார்த்துக்கொண்டு வருகிறேன் விவசாயியைப் பாதிக்காத ஒரு பட்ஜெட்டும்

3rd March 1955] [Sri C. Kandasamy]

கொண்டுவரப்படவில்லை. எல்லா விவசாயிகளும் சகட்டுமேனிக்கு நிலவரியின் அடிப்படையில் ரூபாய்க்கு இரண்டு அணா வரிகொடுக்க வேண்டுமென்று சொல்வது மிக ஆபத்தான போக்கு என்று மட்டும் சொல்லிக்கொண்டு பாக்கி விஷயங்களைப்பற்றி வெட்டுப் பிரேரணைகள் விவாதத்திற்கு வரும்போது பேசிக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். இந்த பட்ஜெட்டினால் வெகு ஜனங்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் தரப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.''

DEPUTY SPEAKER :—'' I wish to draw attention to rule 66 of the Madras Assembly Rules, which says— 11-10 a.m.

' A member, while speaking, must not—

(i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending ;

(ii) make a personal charge against a Member ; '

etc. I hope hon. Members will strictly adhere to the rule.''

* RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD :—'' Mr. Deputy Speaker, Sir, budget preparation by a State Finance Minister has become rather difficult in these days. In the context of the proposals contained in the Central Budget, I am tempted to congratulate the Madras Finance Minister on not launching upon more taxes than what he has proposed, though I may not agree with all the taxes. As is usual with our Finance Minister, he has given a very lucid picture of the financial position of this State. While some may not agree to some of the proposed taxes, I do not think anybody need doubt the bona fide intention of the Government for advancing the welfare of the State. That the budget under discussion is a great improvement on last year's budget is clear. I cannot define the reason why it is an improvement and I leave it to the hon. Members to judge for themselves. It looks as if the Government will be able to do much more good if only they had more money. But more money by levying additional taxes is a thing which neither the hon. Members nor the country will approve of. But I think he has tried to do his best in the situation in which he finds himself.

'' First of all, I must congratulate the Finance Minister and the Government on the bold step that they have taken in exempting from the payment of school fees up to and inclusive of Form III all children whose parents derive an annual income of less than Rs. 1,200. This is a step in the right direction and I hope the schools will be run well.

'' While I am speaking generally about the budget, I may be permitted to mention that the Government could have easily avoided the levy of surcharge on lands. The Congress is just becoming popular in this country and I hope that this levy will not act as a damper. According to me, a surcharge of two annas in the rupee on land revenue may not be a big burden. But we have got to look at the sentimental aspect. The people in this State are not accustomed to rise in land tax. On grounds of sentiment, the surcharge is opposed and I personally wish that the Government had not

resorted to it. Our country is more fitted only for indirect taxation, as such taxation is spread over a larger number of people. But the only difficulty is that the merchants, who have to collect the indirect taxes, are put to the trouble of having to maintain accounts and submit them for inspection and scrutiny by the inspecting authorities. But the Government can force the work on the merchants.

" Sir, this two-anna surcharge on land revenue will affect the general public in the country and particularly the persons who own patta lands. This tax might augment the resources of the Government but there is a way to do it. This country is already heading towards indirect taxation and it is uniformly suited to the whole country. The Central Finance Minister has proposed, in his Budget proposals, a number of direct taxes, which will only increase the cost of living of the middle class people. This direct taxation is very widespread. The tax on income has been raised. This will affect only a few thousand people, mostly businessmen. Of course, it may be argued that the Judges of the High Court are getting more than Rs. 4,000 and they may also be taxed. But we cannot afford to do without them and they must be paid a high salary. So, all people must have a certain standard of living but this surcharge on land revenue is an unpopular tax. Generally, direct taxation is unpopular and the agriculturist will be in the position of an income-tax assessee. But we must remember that the agriculturist is a powerful man at the time of elections. If I had anything to do with the shaping of the policy of the Government, I would certainly, at least from the point of view of tactics, have advised against this surcharge on land revenue. It would be rather better to have a deficit of another Rs. 75 lakhs on that account. I am very happy to see that the hon. Members sitting on this side of the House are also in favour of my suggestion. Sir, we are here only with the support of the people who had voted us to this House. We must do some good to the country and the people. Otherwise, we will not get the vote of the people and be returned to this House again. After all, we have introduced adult franchise in the country and we cannot afford to ignore the interests of the people. Therefore, I do feel that this surcharge is a burdensome tax which might have been avoided by the Government.

" Sir, I now come to education. While I congratulate the Government on their decision to exempt all poor children from the payment of school fees up to III Form, I would be happy if they provide more funds for school buildings. They must revise the old rule by which a grant of Rs. 35,000 is given to a school and Rs. 75,000 to a college. I hope the Hon. Minister for Education will consider this aspect of the matter and increase this grant to educational institutions and also consider each application either from a school or a college on its merit.

" The Hon. Minister for Finance also referred, in his Budget speech, to the National Cadet Corps. I can say, from personal experience, that the National Cadet Corps is a very useful institution. It is a very popular institution. The Government must

grant more money to this institution. I understand the Government of India would contribute an amount equal to the one given by the Government of Madras. Therefore, this Government should come forward to grant more money, so that we can get as much money from the Government of India. After all, it is worthwhile spending money on this institution which is inculcating a sense of discipline among the young students. We want that our young men should be trained in discipline so that when necessity arises they can join the army. It is only by encouraging and helping such an institution which trains our young men in discipline and makes them fit for army career that we will be making our contribution to the defence of the country. This is an essential thing and I do hope that the Hon. Minister will grant more money to this useful institution.

"Sir, the Hon. Minister for Finance has also touched upon the First Five-Year Plan and how it has worked and how he is thinking of the Second Five-Year Plan. He also said that this House will have an opportunity of discussing the broad outlines of the Second Five-Year Plan before they are finalized and forwarded to the Planning Commission. I would like to take this opportunity to suggest that the Second Five-Year Plan should be more dynamic than the First Five-Year Plan itself. The First Five-Year Plan came to the light of the public only at the end of the second year. While we are glad that the amount allocated to be spent on the First Five-Year Plan would be fully used by the end of the fifth year, let us hope that the proposals for the Second Five-Year Plan would be really dynamic in character. During the First Five-Year Plan period, we have had many schemes like the National Extension Services, the Community Projects and the Local Development Works. There is a feeling that there has not been a proper allocation or proper choice of the areas in the matter of executing these schemes. The attitude of the Government in this matter savours of favouritism. That is certainly my honest criticism which should not be taken amiss. If the Government have got enough money, they can extend these schemes throughout the State. If they have not got so much to spend for them, let them choose poverty-stricken places or places with drought conditions or dry places. I think, a bit of canvassing is done in the matter of the allocation of these schemes—I am sorry to say it—by a member of the Assembly or a Member of the Parliament or the local Collector who happens to have some influence with the Director of Community Projects or the concerned authorities. I understand that this scheme is extended to other taluks if they are contiguous to the taluk where it is in operation. The whole idea behind this scheme is wrong and even though a taluk may not be a contiguous one, it should be included in the scheme provided it is a dry taluk and not a flourishing one. I shall not develop upon it any more but, I think, it is time that the Hon. Minister in charge of it, Sri Bhaktavatsalam, should have the

courage to say openly in this House. ' these are the facts. We have proposed to extend these schemes to certain taluks which need them most urgently. We do not propose to extend them to some other taluks for want of finance.' After consulting the House and getting its opinion, the Hon. Minister can come to his own judgment in respect of this matter. My point is that his judgment should not be the only judgment. The first judgment should come from this House. Then only his judgment should come which should be tempered with the advice of the Members of this House. Sir, I hope that I shall not be called parochial in outlook if I say that certain areas in the Ramanathapuram district have not been chosen for the execution of these schemes. For instance, backward and dry areas like Tirupattur, Sivaganga and Thiruvadanai have not been included for the execution of these schemes. I hope they will be included at least in the Second Five-Year Plan. On the whole, I am not satisfied with the way in which these schemes are allotted. I am saying this not because I happen to represent Tirupattur. I am sure that the members of my constituency are not going to vote me down and that they will vote me back. I am speaking from the point of view of giving priority and I am referring to three taluks which are not represented by me but by my hon. Friends Sri R. V. Swaminathan and Sri P. Chellathurai. 11–20 a.m. These areas are worse than the constituency that I represent. I do not think that a taluk like Tiruvadanai will ever be thought of in connection with even the Second Five-Year Plan while areas which are in a better position have been included. I hope that other hon. Members will also bring more such instances for the consideration of the Hon. Minister for Agriculture.

" I find from the Hon. the Finance Minister's speech that he is almost satisfied with the development of irrigation in Tamilnad. I am very sorry for such an inference. I can understand it if he has said so about the Andhra area. Irrigation under the Cauvery is almost an eaten-up scheme and there are many other big schemes. I find that in the Second Five-Year Plan only Rs. 25 crores have been provided. It really ought to be Rs. 250 crores and the Hon. the Finance Minister will not be far wrong if he has put it at this figure. Though we have lost the official Rayalaseema, the Tamilnad Rayalaseema with all the characteristics of Rayalaseema is with us comprising a bit of Coimbatore, most of Salem and North Arcot districts, half of South Arcot and Tiruchirappalli districts, and three-fourths of Ramanathapuram district and a part of Tanjore."

SRI K. VINAYAKAM :—" Chingleput also."

* RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD :—" Yes, I would include Chingleput also. The Hon. the Finance Minister should take a serious view of all these things. I am sorry the Hon. the Minister for Public Works is not here. Though the Hon. the Minister for Finance is expected to reply to the general discussion, I wish that all the Hon. Ministers are here. All the Hon.

Ministers are no doubt likely to reply to the general discussion in the Upper House because no Demands are to be moved there and we have to take our chance here when the Demands are moved of hearing the replies of the other Hon. Ministers.

" Coming back to the subject of irrigation, let me mention a very big scheme, the dream of one of our Engineers Sri Ayyadorai Ayyar who later became the Chief Engineer of Rajkot. I also mentioned this about six or seven months ago to the Hon. the Finance Minister. Many a dream does come true. The irrigation project in the Bombay State about 38 miles from Poona which was approved during the Governorship of Sir S. V. Ramamurty has now come into fruition. Similarly, the waters from the Coorg are now running to waste. As in Periyar, they must be harnessed and tunnelled to flow into the Cauvery and the day must come when we should have three or four dams on the Cauvery like the Mettur Dam, so that water may be available for irrigating all the districts that I have mentioned. The whole scheme may cost about Rs. 125 crores. The headworks alone may cost about Rs. 20 crores and the four or five dams may each cost about Rs. 20 to Rs. 30 crores. If this work is taken on hand it will come to fruition within another ten or fifteen years. It will be a great mistake if this generation does not undertake this scheme. As compared with the vast amounts contributed by the Centre for the various parts of India, this sum of about Rs. 200 crores will be nothing. To-day because of the strong sentiments expressed on the floor of this House, the Government of India are now paying more attention to Tamilnad.

" Sir, I am very happy to say that when the Union Finance Minister Sri C. D. Deshmukh was here I mentioned about this scheme and he said that he would certainly consider it. Till now my talk about this has been only casual and there must be some seriousness about it and that is why I am now officially mentioning it here. I am told that this Engineer, Sri Ayyadorai Ayyar, was sent for and that the matter was discussed with him by the Hon. the Chief Minister, the Hon. Sri M. Bhaktavatsalam and the Hon. the Minister for Public Works. I think the Hon. Sri C. Subramaniam was also present. They should give serious consideration to this scheme and include it in the Second Five-Year Plan. Then the estimated expenditure under the Second Five-Year Plan will not be Rs. 25 crores but Rs. 250 crores.

" Then there is also another scheme somewhere near Rajapalayam about which Sri P. S. Kumaraswami Raja, the present Governor of Orissa, has also made mention. I do not know the name of the project."

SRI S. THINAKARASAMI THEVAR :—" Pambiar."

* RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD :—" I am very grateful to the hon. Member coming from that part for suggesting the name. I hope that the Government will start investigation

[Raja Muthiah Chettiar of Chettinad] [3rd March 1955

of this scheme at least during this year. I am very glad that the Hon. the Finance Minister has mentioned in his speech about another scheme in the Tiruchirappalli district which is somewhere near Kottampatti and costing about Rs. 2 crores. It was said that gauge levels were being taken but as there has not been much of rain during the last four or five years, I hope the investigation will be further continued.

"I believe that in regard to electricity we have made rapid developments. I do hope that the grid system will be expanded. It was said that the grid would be expanded to include Melur and Tirupathur but nothing has happened. I do hope that the Government would mean real business by extending electricity supply to these places also.

"As stated by the Hon. the Minister for Finance, it is necessary to exploit the sub-soil water and for this purpose tube wells should be constructed. I do hope that at least a few thousands of tube wells will be put up throughout our State just as they have done in the North in the Punjab.

"Mr. Deputy Speaker, Sir, nothing has been mentioned in the Budget speech about the industrialization of this State and I would like to mention that industrialization in this State is very much behind the times. We must have regionalization and we must have industries in the various districts and round about the lignite project area. I do hope that the State Government will persuade the Government of India to give the best help they could in the matter. Because I have not got much time I have only made a reference to regionalization and industrialization and though I want to speak about the different uses to which lignite could be put, I have not got time to do so.

"The next point is that the Government should start a number of multi-purpose schools in every taluk in every district instead of talking about basic education and other kinds of education. Then there will be a lesser number of students seeking admission to the colleges. Really we are in short supply of ordinary overseers. The people who pass the L.C.E. and L.M.E. are promoted as Assistant Engineers if they pass the A.M.I.E. What I really mean is that boys who have passed the III Form should be enabled to join such multi-purpose schools and become good qualified overseers. This is my earnest suggestion.

"Another important matter which I want to mention is in regard to making Pudukkottai the headquarters of a district. I do not know whether the District Administration Reorganisation Committee has gone into this question. I am told it is outside their terms of reference. But, I want the Government to seriously consider the question of putting into use the buildings that are available in Pudukkottai. All the members coming from the Ramanathapuram district including the Hon. the Chief Minister are

3rd March 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

agreed that Pudukkottai can become the headquarters of a district. I am not worried about the allocation of taluks nor do I want to enter into any controversial topic as to which taluks are to be added. My submission is, let a district be started with Pudukkottai as its headquarters.

"I wish to refer to one other point. The Government have allotted only Rs. 1·77 lakhs as against Rs. 2·5 lakhs allotted last year by way of loans to the City Improvement Trust. The City Improvement Trust has been doing a very important work and will not be able to do anything unless sufficient funds are given to it. The Government of India have been spending crores and crores of rupees towards housing programmes in various parts of the country. The Madras Government must press the Central Government to provide Rs. 25 to Rs. 30 lakhs to the City Improvement Trust to enable it to do its work well. This Government must also give the usual advance of Rs. 2·5 lakhs to it and not Rs. 1·77 lakhs as has been provided for in this Budget, in addition to getting more money from the Government of India. 11-30 a.m.

"Lastly I wish to say a few words with regard to the Government's policy towards the Public Service Commission. I was very distressed to read in the newspapers a few days ago that there was an alleged attempt to diminish the powers of the Public Service Commission. After all, Sir, the Government which is composed of the representatives of the electorate lay down the rules for the working of the Commission. Once they lay down the rules, they must not interfere with the working of the Commission. The Public Service Commission in Madras which was first started under the Chairmanship of Sir Marjoriebanks has a very high reputation and it has done very useful service. Let not its integrity, efficiency and usefulness be diminished. After all the Government may disagree with one or two of the several recommendations which the Commission are making. It does not matter very much and the world is not going to come down if in one or two aspects the Government's views are not accepted by the Public Service Commission. We have got the High Court and several other Tribunals and on several occasions they have delivered judgments which went against the views of the Government. If the Government want to change the discretion, the scope and the work of the Public Service Commission, let them come before the Assembly but that should not be resorted to frequently. The Public Service Commission are composed of Members who may not seek employment again and again. The Government have themselves chosen them. After their terms are over and if the Government do not want them to continue, they can appoint fresh Members. My earnest prayer to the Cabinet is that they should see that the reputation of the Madras Public Service Commission is maintained and must not interfere with the working of it. The Public Service Commission is a sacred body. It is a sacred asset of the Government. More

than young unemployed persons, the persons who are in service require the help of the Public Service Commission as a sort of security measure. After all, Sir, we are proud of the Madras Services. We have got quite a good service. Our Madras people are not only doing excellent service here in Madras but also in Delhi and other places. They should not have a feeling of insecurity. They must feel that the Public Service Commission is there to protect their rights. I do wish to appeal to the Hon. the Minister for Finance—he is a lawyer and a jurist and has become a greater jurist by being here during the last three years—to give serious consideration to my suggestion. I am not mentioning this as a criticism of his policy. The Public Service Commission has done much good to the people. The Madras Public Service Commission has a fine tradition and similar Commissions in other States are looking up to the traditions built by our Commission. If at all the Government can do anything in the matter it is that they must strengthen the hands of the Members of the Public Service Commission.

"Let me once again congratulate the Hon. the Finance Minister and the Government on the excellent way they have attempted to solve the problems facing them and I wish them good luck in the coming year."

11–35 a.m. *SRI M. P. SUBRAMANYAM :—"கனம் தலைவர் அவர்களே, 1955–56 ஆண்டு வரவு செலவு திட்டத்தை சபையில் அறிவித்து நிதி யமைச்சர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவில் பெரிதும் முதல் ஐந்து ஆண்டு திட்டத்தின் சொல்லே தேங்கி நிற்கிறது. நாட்டில் இருக்கும் சீர்கேடுகள் அனைத்திற்கும் ஐந்து ஆண்டு திட்டமே நோயைத் தீர்க்கும் மருந்தென மக்களிடத்தில் கடந்த நான்கு ஆண்டு பறை சாற்றி வரும் அரசாங்கம் சட்ட சபையில் வரவு செலவு திட்டத்திலும் பெரிதும் குறிப்பிடப்பட்டிருப்பது ஆச்சரியத்திற்குறியதல்ல. அதிலும் முதல் ஐந்து ஆண்டு திட்ட இறுதியாண்டின் ஆரம்பத்தில் உள்ளோம். நிதி அமைச்சர் அவர்கள் தன் உரையின் முதன் மூன்று பாராக்களில் திட்டம் என்றால் என்ன, திட்டச் செலவு என்றால் என்ன என்பதைப்பற்றி யெல்லாம் கூறியுள்ளார்கள். இதில் ஒன்றை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். முதல் ஆண்டு திட்டத்தில் நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட இந்த நிலையிலும் கோடிக் கணக்கில் செலவழிக்கப்பட்டும்கூட நாட்டின் பொருளாதார நிலையில் குறிப்பிட்ட மாறுதல் எதுவும் ஏற்படவில்லை என்பதையும் நிதியமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்கள். முதல் ஐந்து ஆண்டு திட்டம் வெற்றியுறவில்லை என்பதை நிதி யமைச்சர் ஒப்புக்கொள்கிறார் என்பதைத் தான் இது குறிக்கிறது.

"பல துறைகளிலும் திட்டப் பொருளாதாரத்தின் மூலமாக மேன்மை காண விரும்பும் அரசாங்கம் திட்டப் பொருளாதாரத்தின் அடிப்படையை உணரவில்லை என்றுதான் தெரியவருகிறது. வரிகளின் மூலமாகவோ அல்லது வெளிநாடுகளிலிருந்து டாலர்களாகவும், ஸ்டர்லிங்களாகவும் கோடிக் கணக்கில் பணம் எழுப்பி செலவிட்டு விட்டால் திட்டம் வெற்றியுறுமென நினைப்பது தவறு. திட்டம் வெற்றியுற வேண்டுமானால் மக்களுடைய ஒத்துழைப்பு மிக அவசியம். அதுவும் இந்தியா போன்ற பின்தங்கிய பிற்போக்கான நாடுகளில் மக்கள் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். ஆனால் மக்கள் ஒத்துழைப்பு எப்பொழுது கிடைக்கும்? எந்தக் காரியத்திற்கு கிடைக்கும்? எந்தக் காரியத்திற்காக மக்களுடைய ஒத்துழைப்பைக் கோருகிறோமோ அந்தக் காரியம் முடிவுற்றால் அதனால்

3rd March 1955] [Sri M. P. Subramanyam]

உண்டாகும் பலன் ஒத்துழைப்பு கொடுக்கும் மக்களுக்கு உடன் கிடைக்கும் படி அந்த காரியம் இருக்க வேண்டும். பலன் கிடைக்கும் என்ற எண்ணம் முதலில் ஏற்படவேண்டும். அம்மாதிரியான ஏற்ற சூழ்நிலை திட்ட காலத்திற்கு முன்பு அல்லது பிறகாவது இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டும். தங்கள் வாழ்க்கையில் பசியை போக்குவதற்கு தன் உடலுழைப்பைத் தவிர வேறு ஒரு பொருளேயும் தன் சொந்தமாகக் கொள்ளாத மக்கள் பெரும் பகுதியாயுள்ள நம் நாட்டில் உள்ள வளங்கள் பெருகுவதால் அந்த கூலிக்கு என்ன நேரிடை பலன் கிடைக்கப் போகிறது ? வளமடையும் பொருளுக்கு உரிமையுள்ளவன் எவனோ அவனுக்கே தன் முழு பலன் போய் சேரும். அவனுடைய வாழ்க்கையின் மேன்மையை அவன் காண முடிவதில்லை. உதாரணமாக இப்பொழுது நாட்டில் உணவுக் கட்டுப்பாடு நீங்கி மக்கள் வாங்கும் சக்தி அளவுக்கு மேலும் உணவு உற்பத்தி பெருகி அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உணவு நிலை இருப்பதாக மத்திய மாகாண அரசாங்கங்கள் திருப்தி அடைகின்றன. ஆனல் அதே நேரத்தில் பல நாட்கள் பட்டினியின் காரணத்தால் தான் பெற்ற குழந்தையை கழுத்தை நெறித்து கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்ய எத்தனித்த குற்றத்திற்காக உயர்நீதி மன்றத்தில் குற்றவாளியாக நின்றான் என்ற சம்பவம், பசி தாங்க முடியாமல் பல நாட்கள் பொறுத்தும் வழி வகை இல்லாத காரணத்தால் தன் வயது முதிர்ந்த தாயை கொலை செய்து தானும் தற்கொலை செய்துகொள்ள விரும்பியும் முடியாமல் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டான் என்ற சம்பவமும் நிகழ்ந்துகொண்டு தானிருக்கின்றன. இந்தக் காலத்தில் ஒரு பக்கம் தேவைக்கு மேல் உணவு பெருக்கம். மற்றொரு பக்கம் பட்டினியால் கொலை, தற்கொலை. இவை இரண்டையும் ஒரே நாட்டில் நிகழும் காட்சிகளாக என்னல் நினைக்க முடியவில்லை. ஆனல் நிகழ்ந்தது, நிகழ்கிறது, இந்த நிலைமை நாட்டில். ஆள்பவர்களோ சமதர்ம அடிப்படையில் அமையும் சமுதாயந்தான் எங்கள் குறிக்கோள் என ஆவடியில் தீர்மானம் செய்திருக்கிறார்கள். வேடிக்கையாக இருக்கிறது. பட்டினியால் தற்கொலை செய்துகொள்ளும் நிலையிலுள்ள மக்கள் மிகுதியாக உள்ள இந்நாட்டில் பெரும்பாலானவர்களின் ஒத்துழைப்பு எப்படி கிடைக்கும்.

" மற்றும் ஒன்று. திட்டப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாதது பொருள்களின் விலைவாசிகள் பெருத்த மாறுதலுக்கு உட்படாமலிருத்தல், அதோடு ஆலைப்பொருள்களின் விலைக்கும் விளைப்பொருள்களின் விலைக்கும் நியாயமான நீடித்த உறவு நிலை ஏற்படுத்தப்படவேண்டும். இவை இரண்டும் இல்லையானல் திட்டத்தின் மதிப்பீடு மாறுவதோடு எதிர்பார்த்த விளைவுகள் ஏற்படாமல் போய்விடும். அதுவும் விவசாயத்தையே வாழ்க்கை முறையாகவும் வழியாகவும் நம்பி வாழும் 100-க்கு மக்கள் 70-க்கு மேற்பட்டுள்ள நம் நாட்டில் இத்தகைய விலைவாசிகளின் ஸ்திரத் தன்மை மிக அவசியம். ஏனென்றால் விலைவாசிகள் ஏறுங்காலத்தில் முதலில் இந்த ஏற்றம் ஆலைப்பொருள்களில்தான் காண முடியும். இறங்கும்போது விவசாயப் பொருள்களில்தான் திடீர் விலை சரிவதை காணலாம். இரண்டிலும் பாதிக்கப்படக் கூடியவர்கள் விவசாயிகளே. ஏனெனில் பண்டங்களின் உற்பத்தியை ஆலைப்பொருள்கள் விஷயத்தில் கட்டுப்படுத்த முடியும். அதன் மூலமாய் விலையையும் ஓரளவு கட்டுப்படுத்த முடிகிறது. ஆனல் விவசாயப் பொருள்களின் உற்பத்தி மனித சக்தியினல் மட்டும் இப்பொழுது இல்லை. இதனல் விலைகளேயும் கட்டுப்படுத்தும் சக்தியற்றவனாக விவசாயி இருக்கிறான். இப்பொழுது விளைப்பொருள்களின் விலைவாசிகள் செங்குத்தாக சரிந்துவிட்டது. அரசாங்கம் இதை நிறுத்தி கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. இது மாதிரி நிகழும் என தான் நினைக்க வில்லை எனவும் அதற்காக தயாராக எந்த ஏற்பாடும் இல்லை எனவும் குற்றத்தை நிதியமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஆனல் அதே சமயத்தில் பயப்படவேண்டியதில்லை, பொறுத்திருந்து பார்ப்போமெனவும் கூறுகிறார். ஒன்றுக்கொன்றுப் பொறுத்தமற்றதாக இருக்கிறது. இதுதான் திட்டப் பொருளாதாரம்.

[Sri M. P. Subramanyam] [3rd March 1955

"முதல் ஐந்து ஆண்டு திட்டத்தையே எடுத்துக்கொண்டாலும் நம் மாகாணத்தைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சி யளிக்கக்கூடியதாக இல்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இந்தியா முழுமைக்கும் 2,300 கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது முதலில். ஆனால் ரூ. 2,000 கோடிதான் செலவு செய்ய முடியுமென இப்பொழுது மத்திய அரசாங்க நிதியமைச்சர் அறிவிக்கிறார். ரூ. 2,000 கோடி செலவு செய்யப்படும் இந்த முதல் ஐந்தாண்டு திட்டத்தில் நம் சென்னை மாகாணத்தில் செலவிடப்படக்கூடியது ரூ. 92 கோடிதான். அதுவும் இறுதியாண்டான 1955–56-ல் நிதியமைச்சர் அவர்கள் நம்புவது போல் 25 கோடி ரூபாய் திட்டங்களுக்கு செலவு செய்யப்பட வேண்டும். இந்தியாவின் மொத்த ஜனத்தொகையான 36 கோடியில் ஏறக்குறைய மூன்றரைக் கோடி அதாவது பத்து சத விகித மக்கள் சென்னை ராஜ்யத்தில் வாழ்கிறார்கள். பத்து சத விகிதம் மக்கள் தொகையை கொண்ட நம் ராஜ்யத்திற்கு திட்டச் செலவில் பத்தில் ஒரு பகுதி அதாவது 200 கோடி ரூபாயாவது செலவிடப்படவேண்டும். அதுவும் நம் ராஜ்யம் மற்ற பகுதிகளைவிட மிகவும் பிற்போக்கானது. ஒரு நாடோ அல்லது ஒரு பகுதி பிற்போக்கான நிலையில் உள்ளதா அல்லது முற்போக்கில் உள்ளதா என அறிய அந்த நாட்டில் அல்லது பகுதியில் வாழும் மக்களில் எத்தனை சதவிகித மக்கள் விவசாயத்தை மட்டும் நம்பி வாழ்கிறார்கள் என தெரிந்துக்கொண்டால் போதுமானது. உதாரணமாக பதினேழு (17%) சதவிகித மக்கள் அமெரிக்காவில் தங்கள் தேவைக்கும், வெளிநாடுளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கும் உணவு உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் இந்தியாவில் எழுபது (70%) சத விகித மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தும் நமக்கு போதிய உணவுக்கூட உற்பத்தி செய்ய முடியவில்லை. இது எதை குறிக்கிறதென்றால் இந்தியா அமெரிக்காவைவிட மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ளது என்பதைத்தான் குறிக்கிறது. அண்மையில் மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழு தன் அறிக்கையில் தென் இந்தியாவில்தான் வட இந்தியாவை விட விவசாயத்தை மட்டும் நம்பி வாழும் மக்கள் சத விகிதம் அதிகம் என கூறியுள்ளது. இது தென்னிந்தியா வட இந்தியாவை விட பிற்போக்கில் உள்ளது என்பதைத்தான் குறிப்பிடுகிறது. அப்படியானால் எந்தத் திட்டத்திலும் தென்னிந்தியாவிற்கு **weightage** சலுகை தரப்படவேண்டும். ஆகவே ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு கிடைக்கவேண்டிய 200 கோடி ரூபாயுடன் மேலும் ஒதுக்கப்படவேண்டும். ஆனால் ஒதுக்கப்பட்ட 92 கோடியே உரித்த பங்கில் பாதியும் கூட இல்லை. இது தென்னாட்டை மத்திய அரசாங்கம் புறக்கணிக்கிறது என்பதை குறிக்கவில்லையா ? இதை திராவிட இயக்கம் சுட்டிக் காட்டி திராவிட நாடு தனி நாடானால்தான் நமக்கு முன்னேற வழியுண்டு என்று கூறினால் இதை காங்கிரஸ் நண்பர்களும் பொது உடைமை நண்பர்களும் குறுகிய மனப்பான்மையென குற்றசாட்டை சுமத்துகிறார்கள். உண்மை நிலையை உணரவேண்டும்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டதைப்பற்றியும் தன்னுடைய உரையில் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்கள். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் 10 முதல் 15 கோடி வரை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்படலாமெனவும் கூறுகிறார். அப்படியானாலும் நம் ராஜ்யத்திற்கு சுமார் நூற்று ஐம்பது கோடிக்குமேல் கிடைக்காதென தெரியவருகிறது. ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 5,500 ஐயாயிரத்து ஐந்நூறு கோடி ரூபாய் செலவழிக்கப்படுமெனச் சொல்லப்படுகிறது. இதிலும் சென்னைக்கு நிதி கிடைக்காது என இப்பொழுதே திட்டமாகத் தெரியவருகிறது.

"முதல் ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பெரிய திட்டங்கள் யாவும் வடநாட்டிலேதான். தென்னிந்தியாவில் மிகப் பெரிய திட்டமென கருதக்கூடிய அளவில் இதுவரை ஒன்றும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தென்னாற்காட்டில் நெய்வேலியில் புதைந்திருக்கும் பழுப்பு நிலக்கரியில்தான் தென்னிந்தியாவின் எதிர்காலம் இருக்கிறது. ஆனால் இந்த பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுத்து பயன்படுத்த எட்டு ஆண்டுகளாக

3rd March 1955] [Sri M. P. Subramanyam]

பரிசீலனை செய்துவருகிறது இந்த அரசாங்கம். இப்பொழுதும் இத்திட்டம் வெற்றியுறுமா இல்லையா என்பதை திட்டவட்டமாக அரசாங்கம் அறிவிக்க அல்லது ஒப்புக்கொள்ள மறுக்கிறது. இதனால் சேலத்தில் புதைந்து கிடக்கும் இரும்பை உபயோகப்படுத்தி எந்த விதமான திட்டத்தையும் தீட்ட சென்னை அரசாங்கம் மறுக்கிறது. இதற்குச் சொல்லும் காரணங்கள் ஒப்புக் கொள்ளக்கூடியதாய் இல்லை. பழுப்பு நிலக்கரியின் உபயோகமும், எவ் வளவு கிடைக்குமென்பதும் ஏற்கனவே தெரிந்துவிட்டன. இப்பொழுது திட்டம் வெற்றியாக நடத்த தடையாக உள்ளது சுரங்கத்தில் எதிர்படும் தண்ணீர்தான். இந்தத் தண்ணீரை இந்தியாவிலுள்ள யந்திர சாதனங் களைக்கொண்டு வெளியே இறைக்க முடியாத காரணத்தால் வெளிநாடு களிலிருந்து தகுந்த யந்திரங்களை வரவழைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறதென்றும் அறிவிக்கப்படுகிறது. ஆக விளைவுகள் எதிர் பார்த்ததிற்கு மாறாக இருக்குமென ஐயப்படுவதற்கு ஆதாரம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியானால் சேலத்தில் இருக்கும் இரும்புக் கனிகளை வெட்டி எடுக்க அரசாங்கம் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை ? பழுப்பு நிலக்கரியை பரிசீலனை செய்து வெட்டி எடுக்க எட்டு ஆண்டுகள் இந்த அரசாங்கத்திற்கு வேண்டியிருந்ததென்றால் சேலத்தின் இரும்பை பரிசீலித்து தோண்டி எடுக்க மேலும் எட்டு ஆண்டு செலவழிக்க அரசாங்கம் உத்தேசிக்கிறதா ? நிலக்கரி கிடைத்தும் எட்டு ஆண்டு களுக்கு எந்த விதமான இரும்புத் தொழிற்சாலையும் ஏற்படுத்த முடியாத நிலையைதான் இந்த அரசாங்கம் உண்டுபண்ணுகிறது. ஆகவே இப்பொழு தாவது சேலத்தில் இருக்கும் இரும்பை வெட்டி எடுக்க ஒரு **pilot plant** ஒன்று ஏற்படுத்த முன்வர வேண்டும். மற்ற நாடுகள் மின்னல் வேகத்தில் முன்னேறிக்கொண்டிருப்பதைப் பார்த்தால் நம் மாகாணம் பிற்போக்காக இருக்கும் இந்நிலையில் பல நூற்றாண்டுகள் பின்தங்க நேரிடும் என்பதை உணர வேண்டும் இந்த அரசாங்கம். இதில் மத்திய அரசாங்கம் எண்ணியும் பாராமல் மேலும் இரண்டு இரும்புத் தொழிற்சாலைகள் வடநாட்டில் ஏற் படுத்தி இருப்பது தென்னாட்டை வடநாடு புறக்கணிக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. தவிர இந்த திட்டத்தை மத்திய அரசாங்கம் எடுத்து நடத்துவதைவிட நம் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும். செலவாகும் தொகையை மத்திய அரசாங்கம் இனமாக அளிக்க முன்வராவிட்டால் கடனாகவாவது கொடுக்கலாம். இருபது, முப்பது ஆண்டு தவணைகளில் ராஜ்ய சர்க்கார் திருப்பிக் கொடுத்துவிடலாம். இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

“இந்த வரவு செலவு திட்டத்தில் 2½ கோடி ரூபாய் துண்டு விழும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு சில புதிய வரிகளையும் போட அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது வரையில் பல மாகாணங்கள் இவ்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தை சட்ட சபையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 20 கோடி ரூபாய் துண்டு விழும் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்த மேற்கு வங்காளத்தில்கூட புதிய வரிகள்போட உத்தேசிக்கவில்லை. வேறு எந்த மாகாணமும் புதிய வரிப் போட துணிவு கொள்ளவில்லை. இந்த 2½ கோடி துண்டை சரிக்கட்ட நம் நிதி அமைச்சர் அவர்கள் வரிபோட உத்தேசித்துள்ளார். **Deficit financing** இப்போதைய நிலையில் ஆபத்தில்லையென மத்திய நிதி அமைச்சர் ஸ்ரீ தேஷ்முக் அவர்களும் அறிவித்துள்ளார்கள். அப்படி இருக்கும்போது இந்த சிறிய பற்றாக்குறையை சரிக்கட்ட புது வரிகள் போடத் தேவையில்லை என்று நான் நம்புகிறேன்.

“வரிகளை பார்ப்போம். முதலாவதாக நில வரியில் ரூபாய்க்கு இரண் டணா வீதம் உயர்த்த உத்தேசித்துள்ளார்கள். ஏற்கனவே விவசாயி ஒரு ரூபாய்க்கு 5½ அணா செஸ் வரியாக சேர்த்துக்கொடுத்து வருகிறான். கிராமப் புறங்களில் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழும் சமுதாய நல திட்டத்தின் கீழும் பல வேலைகள் செய்வதற்கு விவசாயிகளிடமிருந்து **Contribution** கேட்கிறார்கள். நீர்ப்பாசன அபிவிருத்தி வரி வேறு. கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டி நிபந்தனைகள். இந்த நிலைமையில் விளைப்பொருள்களின் விலை திடீரென சரிந்துவிட்டன. இப்பொழுது விவசாயிகளுக்கு வரிச்

[Sri M. P. Subramanyam] [3rd March 1955

சுமையை அதிகரிப்பது சரியல்ல எனக் கூறிக் கொள்கிறேன். ரூபாய்க்கு இரண்டணா என்றால் சிறிய விவசாயிகளை பெரிதும் பாதிக்காது என வாதிக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் வருமானத்தில் நூறு ரூபாய் எடுத்தால் எவ்வளவு பாரமாக இருக்குமோ அதைவிட பத்து ரூபாய் வருமானத்தில் ஒரு ரூபாய் எடுத்தால் பன்மடங்கு பாரமாக இருக்கும் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

" அடுத்தது புகையிலையின்மேல் வரி. புகையிலையைப் பொறுத்த வரையில் ஏற்கனவே பல வரிகள் போடப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக ஒரு விவசாயி புகையிலை பயிரிடவேண்டுமென்றால் புகையிலை இன்ஸ்பெக்டரிடத்தில் முன்னதாகவே அனுமதிப் பெறவேண்டும். பிறகு அறுவடை செய்வதற்கு முன்பும், பின்பும், விற்பதற்கு முன்பும் இன்ஸ்பெக்டரிடத்தில் தெரிவிக்க வேண்டி பலத் தொல்லைகளை விவசாயி அனுபவிக்கிறான். அத்தோடு ஒரு ராத்தல் புகையிலைக்கு ஆறு அணா எக்சைஸ் வரி மத்திய அரசாங்கத்திற்கு கட்டி வருகிறான். இதோடு சில சந்தர்ப்பங்களில் புகையிலையை முழுவதும் விற்றால் இந்த வரி கட்டவும் போதியதாக இல்லை. சென்ற ஆண்டு உயர்ந்த ரக சிகரெட்டுகளுக்கு வரிப் போட்டார்கள். ஏழைகள் உபயோகிக்கும் மட்ட ரக சிகரெட்டுகளுக்கு வரிப் போடுவதில்லை என்று முன்பு கூறினார்கள். ஆனால் இப்பொழுது மட்டரக புகையிலைக்கும் சிகரெட்டுகளுக்கும் வரிப்போடுவது மத்தியதர வர்க்கத்தையும் ஏழைகளையும்தான் பெரிதும் பாதிக்கும். மத்திய அரசாங்கம் வேறு வரிகள் போட உத்தேசித்திருக்கிறது. இந்தக் காரணங்களால் இந்த வரிகள் யாவையும் விட்டுவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக சர்க்கார் மூன்றாவது பாரம் வரை படிக்கும் எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவச படிப்பு கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதை வரவேற்கிறோம். ஆனால் இது ஒரு பெரிய நன்மையென கூறிவிட முடியாது. ஏனென்றால் கிராமப் புறங்களில் ஹைஸ்கூல்களைவிட 8-வது வகுப்பு வரை உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்கள்தான் அதிகம். அவைகளில் இப்பொழுது எல்லோருக்கும் இலவசக் கல்விதான் தரப்பட்டிருக்கிறது. இது வரி போடுவதற்குமுன்பாக சலுகைகள் செய்கிறோம் என மக்களிடம் கூறுவதற்கு பயன்படுமே தவிர, வேறு பெரிய நன்மையென கூறுவதற்கில்லை.

" கடைசியாக இந்த வரவு செலவு திட்டம் அண்மையில் ஆவடியில் நிறைவேறிய சோஷியலிஸத் தீர்மானத்தை எந்த விதத்திலும் செயல்படுத்துவதற்கு பயன்படுவதாக இல்லை. சமதர்ம அடிப்படையை கருத்தில் கொண்டு இந்த வரவு செலவு திட்டம் அமையவில்லை. வரவேற்கக்கூடிய அம்சங்கள் குறிப்பிடத் தக்கவகையில் இல்லாமலிருப்பதோடு மட்டுமல்லாமல் உத்தேச வரிகள் ஏழைகளையும் மத்தியதர வர்க்கத்தையும் பெரிதும் பாதிக்கும் அளவில் உள்ளது எனக் கூறி முடித்துக்கொள்கிறேன்."

11-50 a.m. * Sri J. L. P. ROCHE VICTORIA :—" Mr. Deputy Speaker, Sir, with regard to the Budget proposals, I wish to make some general remarks upon some of the more important aspects of it. All our attention, energies and moneys are at present turned towards formation of a strong Welfare State. In vain do we build a Welfare State unless the builder himself is made fit to build it properly. It is admitted on all hands that the people should be properly educated and informed of what is going all round in the country. Otherwise the crores of rupees that are being spent now will not give us the expected return. That is why I consider education as the very foundation and the most important among all our activities in the country. There are one or two proposals in the Budget in that direction, namely, giving of free education to our youngsters up to III Form if their parents' income falls below a

3rd March 1955] [Sri J. L. P. Roche Victoria]

certain amount and also there are proposals for encouraging education by opening schools in villages and groups of villages. But at the same time, I wish to emphasise that with a view to expedite education of the people, in general we have to carry on the fight against illiteracy and against ignorance in all fronts, not only at the elementary stage, but also at the secondary and collegiate stages. Education should be made easily accessible and easily available for the poor especially the Harijans. I am sorry that even now there is some discrimination against Harijan Christians with regard to educational fees allowed to poor students. I think it is high time that all discrimination against a student on account of his religion should be completely wiped out. Recently there has been passed an order by the Government abolishing all the Adult Education centres in the districts, except certain areas where we have got Community Projects and National Extension Service going on. It is all right that we have taken up certain areas in every district for special development and so many things are carried on and adult education is proposed to be carried on vigorously in those areas. But at the same time we should not forget that the centres of adult education and schools which were built in the last so many years with great difficulty, were supported mostly from local supporters, either private institutions, or individuals. They were formerly receiving a meagre grant from the Government. They had to be closed down because even this meagre grant which was given by the Government was refused from last October. The real implications of this change over has not been fully realised by the Government and other educational authorities. But we who have been in the adult education field for some years past do feel that it is really a set back in the education field and unless something is done to further adult education not only in those Community Project areas, but throughout the State by giving some encouragement by way of grants or some such help, I think we cannot progress as we expect to do. I therefore request the Hon. Education Minister to bestow some little attention and invite opinion on these matters and try to restore what was available to the adults formerly. After all we are now trying to provide some facilities to youngsters by free education; it is very well that we should do so. But at the same time, we should not forget that the facilities that were available some years ago to adults is stopped. Because of that, we have now in our midst so many people who have not learnt their three R's. To refuse changes of learning to these people is, I think, not proper. After all, we are only making restitution and making some compensation or other for the denial of privileges to adults when they were young. Unless we give them that privilege now and provide them facilities, it will not be a proper thing and we will not be doing justice to the elders especially those who are willing to go round and pick up the three R's, to learn something about the progress of the country and to join wholeheartedly in the different schemes. Unless they are properly educated and informed about the different schemes which are going all round them, I think our schemes will

not yield that much benefit which we all expect from them. I would therefore again appeal to the Hon. Education Minister that some attention, more attention, be given to adult education.

" That brings me to the question of selection of areas for the Community Projects and also for the National Extension Services. The hon. Member, Raja of Chettinad, pointed out that they were not properly selected and so on. Well, I am not prepared to say that much. But I should like to say that whatever is done in these areas, should be done in the proper way, with proper supervision. Because, I find that a lot of money is being spent on these centres and some of those private agencies which were in existence long before the Community Projects were introduced, had to stop for want of funds and that is not a thing which is going to help our State. Our State has taken up some backward areas. It is all very well. But at the same time there are backward areas in other parts also, outside the Project areas. If in these areas, some help is forthcoming from existing institutions, private institutions and missionary schools, then proper help should be given to them so that they may also carry on the good work they had been carrying on for years past. With great regret, I have to say that some of these institutions have been refused the grant which they expected and their work is naturally very much handicapped for want of some encouragement from Government. I think the Government should take a proper survey of the state of affairs in other districts and not only try to carry on intensive work in those Community Project areas, but even in other areas in the districts where similar work could easily be carried out at much less expense with the aid of private agencies. I think that also
12 noon. will receive the attention of the Government. We in this State are really fortunate in that people belonging to various castes, creeds and communities are getting on peacefully. But in recent times there have been here and there attacks against Christian missionaries and Christian activities. I think it is merely a propaganda which has been imported somewhere from the North. The South has been enjoying for centuries the benefits conferred by Christian missionaries and Christian agencies. I hope that the Government will put down any opposition to the activities of Christian missionaries and will give them all possible help to continue the good work which they have been doing in this State.

" Coming to taxation, taxes are necessary for carrying on the administration of the State and the execution of the various schemes that have been taken up. But the only precaution we should take is that the tax we levy should not retard production or discourage people who are engaged in the production of food. Production should be encouraged on all hands. Unless we produce more and more food and thereby increase the national wealth of the country, it is not possible to create a welfare State. The Government should examine whether any of the proposed taxes will in any way interfere with, or retard, production and take necessary steps to ensure that production does not suffer on any account.

3rd March 1955] [Sri J. L. P. Roche Victoria]

" Now, we are nearing the end of the First Five-Year Plan and talking about the Second Five-Year Plan. I think the Government should review the schemes taken up under the first Five-Year Plan and complete those schemes which have not yet been completed before taking up the Second Five-Year Plan. I should like the Government to devote attention to this matter.

" Unemployment problem is engaging the attention of the Government and also of the Legislature. Unemployment should be reduced and avenues for more and more employment should be provided. I think the natural resources in the different parts of the State should be studied and developed in such a way as to provide more and more employment to the people. Taking my district of Tirunelveli, it has got some natural resources. There is scope for the development of the Tuticorin Harbour, the development of fishery along the East Coast and the development of communications. These matters are already receiving the attention of the Government. But I should like the Government to expedite some of these developmental schemes with a view to provide employment for the people living in that area. After all, the execution of these schemes will increase the national wealth of the country.

" I have referred to some important matters. With regard to other matters, I shall deal with them when the Demands for Grant relating to them come up before the House."

SRI G. VAGEESAM PILLAI:—" கனம் தலைவர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த சபை முன் சமர்ப்பித்திருக்கும் வரவு செலவு திட்டத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். கிராமவாசிகளும் இந்த வரவு செலவு திட்டத்தை சந்தோஷமாக வரவேற்கிறார்கள். கிராமப் புறங்களுக்கு சமுதாய அபிவிருத்தி திட்டம் மூலமாகவும் தேசிய விஸ்தரிப்பு திட்டம் மூலமாகவும் செலவழிக்கப்படுகிறது. மற்றும் ஸ்தல அபிவிருத்தி திட்டம் மூலமாகவும் செலவு செய்யப்படுகிறது. கிராமங்களுக்கு செலவழிக்கப்படுவதோடு முனிசிபாலிட்டிகளுக்கு இந்த அரசாங்கம் செலவழிக்கிறது. சமுதாய திட்டம், தேசீய அபிவிருத்தி திட்டம், ஸ்தல அபிவிருத்தி திட்டம் முதலிய திட்டங்களுக்கு சென்ற வருஷம் 282 லட்சம் ரூபாயும், அடுத்து வரும் வருஷத்திற்கு 347 ரூபாயும் இதற்கென்று ஒதுக்கியிருக்கிறார்கள். சிறு நீர்ப்பாசனத்திற்கு சென்ற வருஷம் 75 லட்சம் ரூபாயும் அடுத்த வருஷத்திற்கு 125 லட்சம் ரூபாயும் ஒதுக்கியிருக்கிறார்கள். மற்ற பாசன வசதிக்கு போன வருஷம் 847 லட்ச ரூபாயும் இந்த வருஷத்திற்கு 925 லட்சம் ரூபாயும் ஒதுக்கி யிருப்பது மிகவும் போற்றத் தகுந்தது. குழாய் கிணறுகள் போன்றவைகளுக்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி யிருப்பதும் போற்றத்தக்கது. இவைகளை கிராமப்பகுதியிலுள்ளவர்கள் மிகவும் வரவேற்கிறார்கள். இந்த வருஷம் ஒதுக்கியது போல் மின்சாரத்திற்கு இதுவரையிலும் ஒதுக்கியது இல்லை. இப்பொழுது 11 கோடி 40 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மற்றும் ஸ்தல அபிவிருத்தி திட்டம், சமுதாய திட்டம் முதலியவைகள் ரூ. 3,000-க்குக் குறைவாக இருந்தால் அவைகளை டெக்னிகல் **scrutiny** தேவையில்லை என்று கருதி அவைகளை அந்தந்த ஜில்லா அதிகாரிகளே செலவு செய்து கொள்ளலாம் என்ற ஒரு திட்டத்தையும் அமைத்திருக்கிறார்கள். அதனால் அப்படிப்பட்ட குறைந்த செலவுகளில் செய்யக் கூடியதிட்டங்களை உடனடியாக எடுத்துச் செய்வதற்கு வசதி ஏற்பட்டிருக்கிறது. அதிகாரி

12–05 p.m.

[Sri G. Vageesam Pillai] [3rd March 1955

களைத் தூண்டுவதற்கும் இது இடம் கொடுக்கிறது. இப்படிப்பட்ட திட்டம் இருந்தால் அந்தந்த வருஷத்திற்கு என்று திட்டமிடப்பட்ட வேலைகளை அந்தந்த வருஷத்திலேயே முடித்துவிடுவதற்கு வசதி ஏற்படுகிறது.

"அடுத்தபடியாக மூன்றுவது படிவம் வரையில் கல்விச் சலுகையை எல்லா இனத்தவர்களுக்கும் விஸ்தரிப்பது என்பது ஒரு நல்ல காரியம். அதனுல் நகரங்களில்தான் அதிகப்படியான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தச் சலுகையை நகரவாசிகள் அதிகமாக பயன்படுத்திக்கொள்ளலாம். அதனுல் நகரங்களுக்கு அப்பால் கிராமப்பகுதிகட்கு ஐந்தாறு மைல்களுக்கு அப்பால் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களும், மிடில் ஸ்கூல்களும் ஏற்படுத்த சர்க்கார் முன் வரவேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். அதனுல் கிராமங்களிலுள்ள மக்கள் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு தங்களுடைய குழந்தைகளை அனுப்பிவைத்து அதன் பலனை அதிகமாக அடையலாம். இதை சர்க்கார் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

12–03 p.m "இரண்டாவது ஐந்து வருஷத்திட்டம் தயாரிக்கும் முறை சிறந்ததொரு முறை என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்டங்கள் வாரியாக திட்டங்கள் தயாரிக்கப்படவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களிலுள்ள சிறு நீர்ப்பாசன திட்டங்கள் ஆகியவைகளை மாவட்ட லெவலில் ஆராய்ந்து சர்க்காருக்கு யோசனை சொல்லுவதற்கு மாவட்ட திட்ட போர்டுகள் நிறுவப்படுகின்றன. அம்மாதிரி செய்வதினுல் இரண்டாவது ஐந்து வருஷ திட்டத்தில் கிராமப் பகுதிகளுக்கு அதிக நன்மை ஏற்படக்கூடும்.

"கிராமாந்திரங்களில் வீடுகட்டிக் கொடுப்பதற்காக முன் வருஷ பட்ஜெட்டில் ஒதுக்கிய பணம் அதிகமாக செலவழிக்கப்படவில்லை, நான்கில் ஒரு பங்குதான் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு சௌகரியம் ஏற்படக்கூடிய நிலைமையில் பட்ஜெட் தயாரிக்கும்போது கிராம வீடு கட்டும் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் 300 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை வீடுகள் கட்டுவதற்கு பிளான் தயார் செய்யப்படவேண்டும். பத்து வருஷத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். சிடி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட் சென்ற வாரம் ஒரு வீடு கட்டுவதற்கு டிசைன் போட்டிருந்தார்கள். முன்நூற்று ஐம்பது ரூபாய் செலவில் வீடு கட்டலாம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அம்முறையில் பிளான் தயார் செய்து கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று வற்புறுத்துகின்றேன். கிராம வீடு கட்டும் திட்டங்களுக்கென்று தனியாக ஒரு டெப்டி ரிஜிஸ்ட்ரார் நியமிக்கப்படவேண்டும். ஜில்லாவாரியாக சீனியர் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டு நல்லமுறையில் திட்டங்கள் நிறைவேற்றப்படுமானுல் சேரிகளில் வசிக்கும் ஏழைக் குடும்பங்களுக்கு நல்ல வீடுகள் கட்டிக்கொள்ள முடியும். ஆகையால் சர்க்கார் இதில் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சிதம்பரம் முனிசிபாலிடி சாக்கடைத் திட்டம் இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தின் முதல் வருஷத்திலே எடுத்துக்கொள்ளப்போவதாக சர்க்காரிடமிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்பாக முனிஸிபாலிடிக்கு உத்தரவு கிடைத்திருக்கிறது. அத்திட்டத்தை இவ்வருஷத்தில் சர்வே பண்ணுவதற்கு இந்த பட்ஜெட்டில் பணம் ஒதுக்கி இருந்தால் நன்றுக இருந்திருக்கும். ஆனுல் பணம் ஒதுக்கப்படவில்லை. ஒதுக்காவிட்டாலுங் கூட இந்த வருஷத்தில் சர்வே செய்தால் இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தின் முதல் வருஷத்திலேயே அந்த திட்டத்தை எடுத்துக்கொள்ள முடியும். சிதம்பரத்திற்கு சாக்கடைத் திட்டம் இல்லாமலிருப்பது ரொம்ப நாளாக குறையாக இருக்கிறது. ஆகவே, அதைச் சீக்கிரமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

3rd March 1955] [Sri G. Vageesam Pillai]

“ என்னுடைய தொகுதியிலுள்ள சில கிராமங்களுக்கு வேண்டிய சில விவரங்களைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் சிதம்பரம் தாலுகாவுக்கு விஸ்தரிக்கப்பட்டவுடன் கிராமத்தில் உள்ள விவசாயிகளும் குறிப்பாக ஹரிஜனங்களும் சௌகரியம் அடைந்திருக்கிறார்கள். ஆனால் எங்கள் பிரதேசத்தில் நஞ்சை நிலம் அதிகமாக இருப்பதால் சேரி விஸ்தரிப்பு செய்ய முடியாமல் ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்ள இடமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதற்காக ஒரு தனித் திட்டம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஜில்லா கலெக்டரைக் கேட்டு 60, 70 கிராமங்களுக்குச் சேரி விஸ்தரிப்புத் திட்டம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நடவடிக்கை இருக்கிறது. அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கும் ஹரிஜன க்ஷேம நிதியிலிருந்து திட்டத்திற்கு தனியாக செலவழித்து வருஷத்திலே பதினைந்து, இருபது கிராமங்களை எடுத்துக் கொண்டால் க்ஷேமமாய் இருக்கும். சிதம்பரம் தாலுகாவிலுள்ள நாலைந்து வருஷங்களில் சேரி விஸ்தரிப்புத் திட்டத்தை முடிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ விருத்தாசலத்தில் ஒரு அணைக்கட்டுத் திட்டம் இருக்கிறது. அது புரொடக்டிவ் ஸ்கீம் ஆக இருக்கும். அத்திட்டத்திலிருந்து பத்து அல்லது பதினோராயிரம் ஏக்கர் ஆயக்கட்டுக்கு பாசன வசதி இருக்கிறது. அந்தப் பிரதேசம் மானம்பார்த்த பூமியாக இருப்பதால் இத்திட்டம் பலனளிக்கக் கூடியதாக இருக்கும். அத்திட்டத்தை செய்வதாக ஒப்புக்கொண்டு இந்த பட்ஜெட்டிலே 8,000 ரூபாய் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆறு மாதங்கள் முதல் ஒரு வருஷத்திலேயே கட்டி முடித்துவிடக் கூடிய ஒரு சிறிய திட்டமாகும். ஆகவே, அடுத்த பட்ஜெட் வருஷத்தில் செய்யலாமென்று விட்டு விடாமல் இந்த வருஷத்திலேயே நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

“ 100 ஆர்டீஷியன் பைப்புகளில் 25 ஆர்டீஷியன் பைப்புகள் வைக்க வேண்டுமென்று சர்க்கார் கவனத்திற்கு கொண்டு வந்தேன். அமைச்சர் அவர்கள் வந்த போதும் சொன்னேன். கவனிப்பதாகச் சொன்னார்கள். ஸ்ரீமுஷ்ணம், சேத்தியா தோப்பு ஆகிய பகுதிகளில் 25 ஆர்டீஷியன் பைப்புகள் அமைப்பதென உணவு உற்பத்தி இலாகாவால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதைச் சீக்கிரம் நிறைவேறச் செய்தால் எங்கள் தாலூகாவிலுள்ள இரண்டு பிர்க்காக்களுக்கு புஞ்சைப் பாசன வசதி ஏற்படும். புஞ்சைப் பிரதேசங்கள் ஓரளவு நீர்ப்பாசன வசதி பெறுவதற்கு வழி யேற்படும்.

“ வடிமுனைக் கிணறுகள் எங்கள் தாலுகாவில் நல்ல முறையில் தோண்டுவதற்கு முடியவில்லை. வாய்க்கால் ஓரங்களில் குழாய்க் கிணறுகள் போடலாம். இரண்டு பிர்க்காக்களிலும் 100, 200 குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் பணம் ஒதுக்கி அதற்கென தனி திட்டம் தயார் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ அண்ணாமலை சர்வ கலாசாலையில் விவசாயப் பண்ணை நல்ல முறையில் நடக்கிறது. நல்ல பொறுக்கு விதைகளை அங்கு தயார் செய்வதற்காக சர்க்கார் பண உதவி கொடுத்தால் அந்த முறையில் நல்ல பொருக்கு விதைகளை அவர்கள் தயார் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வார்கள் என்று நினைக்கிறேன். சர்க்காரும் அண்ணாமலை சர்வகலாசாலையாருக்குக் கடிதம் எழுதி அங்கு தயாரிக்கப்படும் பொருக்கு விதைகளை விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். தென்னாற்காடு ஜில்லாவில் குறிப்பாக சிதம்பரம் தாலூகாவில் அதிகமான நஞ்சை நிலங்கள் இருக்கின்றன. அந்தப் பிரதேசங்களுக்குத் தேவையான நல்ல பொறுக்கு விதைகள் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும். அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" ஆந்திர ராஜ்யம் பிரிந்து போவதற்கு முன் கோடூர் பழ உற்பத்தி நிலையம் இந்த ராஜ்யம் பூராவுக்கும் பழச் செடிகளை சப்ளை செய்து வந்தது. அதற்குப் பிறகு நமக்கு சௌகரியம் கிடைக்கவில்லை. சேலம், தென்னாற்காடு ஜில்லாக்களில் வசதியாயிருக்கக் கூடிய இடங்களில் பழப் பண்ணைகளை ஏற்படுத்தவேண்டுமென்று சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போது சொன்னேன். அம்மாதிரி பண்ணைகள் ஏற்படுத்த சர்க்கார் இன்னும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. தமிழ் நாட்டில் பழச் செடிகள் கிடைப்பதில்லை. இதில் சர்க்கார் துரிதமாக கவனம் செலுத்த வேண்டும்.

" சிதம்பரம் தாலுகாவில் போக்குவரத்து சாதனங்கள் மிகவும் குறைவு. முப்பது கிராமங்களுக்கு மேல் தீவுகள் போல் இருக்கின்றன. அந்த கிராமங்களுக்கு போவதென்றால் நடந்துதான் போய்ச் சேரவேண்டும். அதிலும் ஜலத்திலிரங்கிதான் போகவேண்டும். நஞ்சைப் பிரதேசமாக இருப்பதால் போக்குவரத்து சாதனங்கள் மிகவும் குறைவு. முப்பது கிராமங்களுக்கு ரோடு போடவேண்டுமென்று எல்லோருடைய கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறேன். சர்க்கார் கவனித்து வருகிறார்கள். சர்க்கார் இதற்காக ஒரு திட்டத்தைக் போட்டு தீவுகள் போல் இருக்கக்கூடிய கிராமங்களுக்குப் போக்கு வரத்து செய்து கொடுப்பது மிகவும் அவசியம். நம்முடைய சர்க்காரிடத்தில் பணம் இல்லாவிட்டாலும் இந்திய சர்க்காரின் உதவியை நாடியாவது ஆவன செய்யவேண்டும்.

" எங்கள் தாலுகாவில் இரண்டு, மூன்று மெயின் ரோடுகள்தான் இருக்கின்றன. மற்ற இடங்கள் களிமண் பிரதேசமாக இருப்பதால் நல்ல ரோடு இல்லாமல் போக்குவரத்து குறைவாக இருக்கிறது. சிதம்பரம் தாலுகாவில் நாலைந்து கிராம ரோடுகளுக்கு கிராவல் போடுவதற்கு வசதி செய்தால் போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்கும். வீராணம் ரோடு, புத்தூர் ரோடு, சிதம்பரம், பூந்தோட்டம் முதலிய ஊர்களுக்குப்போகும் ரோடுகளை கப்பி ரோடுகளாகப் போட்டால் பஸ் போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்கும். அதையும் சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" சேத்தியாதோப்பில் சமுதாய நலத் திட்டத்தின் கீழ் மின்சார விஸ்தரிப்பு 10 கிராமங்களுக்கு செய்யவேண்டுமென்று எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மின்சார இலாகா கமர்ஷியல் டிபார்ட்மெண்டாக 10 சத விகிதம் ரிடர்ன் வேண்டுமென்று திருப்பிவிட்டார்கள். இப்பொழுது சிதம்பரத்திலிருந்து நெய்வேலி பிராந்தியத்தில் மின்சார வசதி வேண்டுமென்று சொல்லி அந்தப் பிராந்திய மூலமாக பெரிய லயன் போட்டு மின்சாரம் எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். அதே லயனை குறைந்த செலவில் விஸ்தரித்து விடலாம். அதை எடுத்துக்கொண்டால் 10 சத விகிதம் சர்க்காருக்கு கிடைக்க வேண்டிய ரிடர்ன் கிடைத்துவிடும் என்று நினைக்கிறேன். அதைச் சீப் எஞ்ஜினியர் கவனித்து வருகிறார்கள். சர்க்காரும் சமுதாய நலத் திட்ட இலாகாவும் இந்த சௌகரியம் செய்தால் நல்லதாக இருக்கும்.

" சமுதாய நலத்திட்டத்தின் கீழ் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு 1,500 ரூபாய்தான் செலவழிக்கலாம் என்ற உத்தாவு இருக்கிறது. ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின்படி 5,000 ரூபாய் எலிமெண்டரி ஸ்கூலுக்குச் செலவழிக்கலாம். இந்தப் பாகுபாடு இருப்பதால் சமுதாய நலத்திட்டத்தின் கீழ் அதிகப் பணம் செலவழிக்க முடியாமல் இருக்கிறது. ஐம்பது-நூறு பிள்ளைகள் படிக்கக்கூடிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு ரூ. 5,000 வரையில் கட்டட கிராண்ட் கொடுக்கலாம் என்ற மாற்றம் இருக்கவேண்டும்.

" கிராமக் குடிதண்ணீர் திட்டத்தின்படி கிராமங்களில் கிணறுகள் இருக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். சில கிராமங்களில் கிணறுகளில் நல்ல ஜலம் கிடைக்காவிட்டாலும் அந்தக் கிணற்றிலிருந்து கிராம ஜனங்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இருக்கிறது. கிணறுகளில் நல்ல ஜலம் கிடைக்காவிட்டால் குளத்தை வெட்டிக்

3rd March 1955] [Sri G. Vageesam Pillai]

கொள்வதற்கு தொகை கொடுத்து குடிஜல வசதியை செய்துகொள்ளலாம் என்று பொது சுகாதார இலாகா சலுகை தரவேண்டும். புரொடெக்டட் வாட்டர் சப்ளை இருக்கவேண்டுமென்று சொல்லி கிணறுகளை வெட்டி ஜலம் கிடைக்காமல் விட்டுவிடுகிறார்கள். அதையும் கவனிக்கவேண்டும்.

"சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார் கோவில்—அரியலூர் ரயில் பாதை போடவேண்டுமென்று ஏழெட்டு வருஷங்களுக்கு முன் சர்வே செய்யப்பட்டது. அது எந்த நிலைமையில் இப்பொழுது இருக்கிறதென்று தெரியவில்லை. மத்திய சர்க்கார் உதவி ரயில்வே மந்திரி கனம் ஸ்ரீ அளகேசன் சிதம்பரத்திற்கு வந்திருந்தபோது முனிஸிபாலிடியார் கொடுத்த வரவேற்புப் பத்திரத்தில் இதையும் குறிப்பிட்டிருந்தார்கள். அதை கவனிப்பதாக அவர் சொன்னார். இது விஷயத்தில் நம்முடைய சர்க்காரும் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நெய்வேலித் திட்டம் உருவாகக்கூடிய இந்த சமயத்தில் பரங்கிப் பேட்டை போர்ட் விஷயம் கவனிக்கப்படவேண்டும். பரங்கிப் பேட்டையில் ஒரு போர்ட் இருந்தது. இப்பொழுது அது கவனிக்கப்படாமல் கப்பல் தங்க முடியாத நிலைமையில் இருக்கிறது. அந்தந் துறைமுகம் சீர்செய்ய வேண்டிய வேலையை இந்த வருஷமே எடுத்துக்கொள்ளவேண்டும். சமுதாய நலத் திட்டங்கள் தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஸ்தல அபிவிருத்தி வேலைகள் ஆகியவைகளுக்குள் சம்பந்தமான கடிதங்களுக்கு முதல் பிரியாரிடி கொடுக்கவேண்டும். அது சம்மந்தப்பட்ட வேலைகளுக்கு எஸ்டிமேட்டு போடுவதற்கு ஒரு வாரம் அல்லது பத்து தினங்கள் அவகாசம் கொடுக்கலாம். ஏனென்றால் இப்பொழுது ரொம்ப காலதாமதம் செய்யப்படுகிறது. அதைத் தவிர்க்கவேண்டும். மாதத்திற்கு ஒரு தடவை திட்ட போர்டு கூடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் கூடினால்தான் பழைய விஷயங்களையெல்லாம் முடித்து விடலாம்.

"சிதம்பரம் தாலுகாவில் ஹரிஜன நல பள்ளிக்கூடங்கள் 30 இருக்கின்றன. ஒரு ஊரில் ஹரிஜன பள்ளிக்கூடம் இருந்தால் அங்கு வேறு பள்ளிக்கூடம் கட்ட முடியாத நிலைமையில் உத்தரவு இருக்கிறது. இடத்தை விஸ்தரிக்கவும் இடம் போதாமல் இருக்கிறது. ஹரிஜனங்களைத் தவிர மற்ற ஏழை மாணவர்கள் போனால் அதில் சேர்த்துக்கொள்வதற்கு சட்டமில்லை. ஹரிஜன நலப் பள்ளிக்கூடங்களில் சரியாக இடமில்லாவிட்டால் வேறு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்ய முடியாவிட்டால் ஹரிஜன நலப் பள்ளிக்கூடங்களையே விஸ்தரித்து ஏழைப் பிள்ளைகளுக்கும் சாப்பாடு போடலாம். பள்ளிக்கூடங்கள் செவ்வனே நடைப்பெறும்."

***Sri C. Velukkan**:—"മിസ്റ്റർ ചെയർമാൻ, സർ, 1955–56 ലേക്കുള്ള ബഡ്ജററാണ് ബഹുമാനപ്പെട്ട ധനകാര്യമന്ത്രി ഈ സഭയുടെ മുമ്പിൽ അവതരിപ്പിച്ചിരിക്കുന്നതു്. 12-20 p.m. ഈ ബഡ്ജററിൻെറ ഉള്ളടക്കം ആകപ്പാടെ നോക്കിയതിൽ വളരെ മെച്ചമാണെന്നൊ തീരെ മോശമാണെന്നൊ പറയാൻ സാദ്ധ്യമല്ല. മലബാറിൽനിന്നു വന്നിട്ടുള്ള ഈ സഭയിലെ എല്ലാ അംഗങ്ങളും മലബാറിനെ ഈ ബഡ്ജററിൽ അവഗണിച്ചിരിക്കയാണെന്നു ചൂണ്ടിക്കാണിക്കുകയുണ്ടായി. അതു് കുറെയൊക്കെ ശരിയാണെന്നു പറയാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. വിവിധജില്ലകളിലെ മുനിസിപ്പാലിററികളിൽ അഴുക്കുചാൽ പദ്ധതിക്കുവേണ്ടി ഈ ബഡ്ജററിൽ തുക കൊള്ളിച്ചുകാണുന്നുണ്ടു്. അതേ അവസരത്തിൽ കോഴിക്കോട്ടു മുനിസിപ്പാലിററിയിൽ അഴുക്കുചാൽ ഏർപ്പെടുത്തുന്ന കാര്യം എത്രയോ കാലമായി ജനങ്ങൾ മുറവിളികൂട്ടിക്കൊണ്ടിരുന്നിട്ടും ഈ ബഡ്ജററിൽ വിസ്മരിക്കപ്പെട്ടിരിക്കുന്നതായിട്ടാണ് കാണുന്നതു്. അങ്ങനെ നോക്കുമ്പോൾ മലബാറിനെ ഒട്ടൊക്കെ അവഗണിച്ചിട്ടുണ്ടെന്നുതന്നെ പറയേണ്ടിയിരിക്കുന്നു.

"കൃഷിക്കാൎക്ക് പണം കടം കൊടുക്കാനെന്ന പേരിൽ ചില പദ്ധതികളെല്ലാം ഏൎപ്പെടുത്തിയിട്ടുണ്ട്. ഭൂപണയ ബാങ്ക് എന്നൊന്നുണ്ട്. അവിടെനിന്ന് കൃഷിക്കാൎക്ക് കടം കിട്ടുന്നുണ്ടോ എന്നന്വേഷിച്ചാൽ കിട്ടുന്നില്ലെന്നു സ്പഷ്ടമാണ്. സായ്പന്മാരുടെ കാലത്തു് ചായത്തോട്ടക്കാൎക്കും റബ്ബർ തോട്ടക്കാൎക്കും കടം കൊടുക്കുന്നതിനുണ്ടാക്കിയ ഒരേൎപ്പാടാണിതു്. സാധാരണ കൃഷിക്കാരനു് അതുകൊണ്ടു് യാതൊരു പ്രയോജനവുമില്ല. മലബാറിലെ ഏററവും പ്രധാനപ്പെട്ട ഒരു കൃഷിയാണ് കുരുമുളകുകൃഷി. കുരുമുളക് കൃഷിക്കാൎക്ക് ഭൂപണയ ബാങ്കിൽനിന്നും കടം കൊടുക്കുകയില്ല. കുരുമുളക് കാട്ടുതീവന്നു നശിച്ചുപോകുന്ന ഒരു കൃഷിയാണ്, അതുകൊണ്ടു കുരുമുളകിന്നു കടംകൊടുക്കാൻ നിവൃത്തിയില്ല എന്നാണ് എന്റെ ഒരു ചോദ്യത്തിന്നു് ഇയ്യിടെ ഉത്തരം പറഞ്ഞതു്. എത്ര കുരുമുളകുതോട്ടമാണ് കാട്ടുതീ പിടിപെട്ടു് നശിച്ചുപോയിട്ടുള്ളതെന്ന് എനിക്കു മനസ്സിലാകുന്നില്ല. ഇതിന്റെ അൎത്ഥം ഗവൎമ്മേണ്ടിന്നു ജനങ്ങളിൽ വിശ്വാസമില്ലെന്നുള്ളതല്ലേ ? കൃഷിക്കാൎക്കു കടം കൊടുക്കാനായി ഗവൎമ്മേണ്ടു് കോട്ടയം താലൂക്കിൽ മാത്രം ഒരു ലക്ഷത്തിമുപ്പതിനായിരം ഉറുപ്പിക മാററിവച്ചിട്ടുണ്ടെന്ന് പറഞ്ഞു. കള്ളക്കൎക്കടകത്തിൽ തങ്ങളുടെ കൃഷി സംരക്ഷിക്കാമല്ലോ എന്ന് കരുതിക്കൊണ്ടു് പൊറുതിമുട്ടിയ കൃഷിക്കാർ കടത്തിന്നു വേണ്ടി അനവധി ഹരജികൾ അയച്ചു. ആദ്യം പറഞ്ഞു കടം മടക്കിയടയ്ക്കുന്നതിനെ സംബന്ധിച്ച വിവരങ്ങൾ കിട്ടിയിട്ടില്ല, അതു കിട്ടിക്കഴിഞ്ഞേ കടം അനുവദിക്കാൻ നിവൃത്തിയുള്ളുവെന്ന്. മാസങ്ങൾ കഴിഞ്ഞു. വീണ്ടും ചോദിച്ചപ്പോൾ പറഞ്ഞു കടം കൊടുക്കുന്നതിന്റെ ചുമതല വഹിക്കുന്നതിന് ഒരു പ്രത്യേക ഉദ്യോഗസ്ഥന്റെ ആവശ്യമുണ്ടു്, ആ ഉദ്യോഗസ്ഥനെ നിയമിച്ചുകഴിഞ്ഞതിനുശേഷമേ കടം കൊടുക്കുകയുള്ളുവെന്ന്. കുറെക്കാലം കഴിഞ്ഞപ്പോൾ ആ ഉദ്യോഗസ്ഥൻ വന്നു. ആ ഉദ്യോഗസ്ഥൻ വന്നപ്പോൾ കൃഷിക്കാൎക്ക് എത്ര ജമയുണ്ടെന്നായി ചോദ്യം. കൂട്ടുപട്ടയക്കാൎക്കു കടം കൊടുക്കുന്നതല്ലെന്നും പറഞ്ഞു. ജമ തിരിഞ്ഞുവക്കുതന്നെ നിലനികുതിയുടെ പതിനഞ്ചിരട്ടിയേ കടം നൽകുകയുള്ളു എന്നായി. ഇതങ്ങ് ആദ്യമേ പറഞ്ഞുകൂടായിരുന്നോ ? കിട്ടും കിട്ടുമെന്ന പ്രതീക്ഷയിൽ കൃഷിക്കാർ ഹരജികളയച്ചു കാത്തിരുന്നിട്ട് ഒടുവിൽ ഗവൎമ്മേണ്ടു് അവരോടു് പറയുകയാണ് അവൎക്കാൎക്കും കടം കൊടുക്കുകയില്ലെന്ന്. ഇതു എന്തൊരു നീതിയാണെന്നു ഞാൻ ചോദിക്കുന്നു. പിന്നെ ചില ക്രെഡിററു ബാങ്കുകളും സൊസൈററികളുമെല്ലാം അവിടെയുണ്ടു്. അതും കൃഷിക്കാരനെ സഹായിക്കാനുള്ള ഏൎപ്പാടല്ല. നാട്ടിലെ പണക്കാൎക്കും സ്ഥാപിതതാല്പൎയ്യ

3rd March 1955] [Sri K. Madhavan Nambiar]

കാർക്കും വേണ്ടിമാത്രം പ്രവർത്തിച്ചുകൊണ്ടിരിക്കുന്ന സ്ഥാപനങ്ങളാണവ. ഇങ്ങനെ ഓരോന്നായി എടുത്തു പരിശോധിച്ചാൽ ഗവർമ്മേണ്ടിന്റെ പദ്ധതികളെല്ലാം ജനങ്ങളുടെ യഥാർത്ഥ പ്രശ്നങ്ങളെ പരിഹരിക്കുന്നതിന്നു പര്യാപ്തമല്ലെന്നതാണ് വാസ്തവം. ഗവർമ്മേണ്ടിന്റെ പണം ദുരുപയോഗപ്പെടുത്താൻമാത്രമുതകുന്ന പദ്ധതികളാണ് സകലതും. ഇങ്ങനെയാണ് ഗവർമ്മേണ്ടു പണം ചെലവാക്കുന്നതെങ്കിൽ ഈ പദ്ധതികൾകൊണ്ട് നാട്ടിനു എന്തു പ്രയോജനമുണ്ടാകാൻ പോകുന്നു എന്ന് എനിക്ക് മനസ്സിലാകുന്നില്ല.

"ഇനിയെന്റെ നിയോജകമണ്ഡലത്തിലെ ചില കാര്യങ്ങൾ പറഞ്ഞുകൊള്ളട്ടെ. എന്റെ നിയോജകമണ്ഡലത്തിൽ ആകപ്പാടെ ഗവർമ്മേണ്ടിന്റെ വകയായുള്ള ഒരേ ഒരു സ്ഥാപനം അവിടത്തെ റജിസ്റ്റർ ആഫീസാണ്. സംസ്കാരത്തിൽ വളരെ പിന്നോക്കം നില്ക്കുന്ന ഒരു പ്രദേശമാണ് എന്റെ പ്രദേശം. അവിടെ ഒരു ഹൈസ്കൂളിന്നുവേണ്ടി സഹായം ചെയ്യണമെന്നു അപേക്ഷിച്ചിട്ട് പണമില്ലെന്നാണ് ഗവർമ്മേണ്ടിന്റെ മറുപടി. മട്ടന്നൂരിലും ഇരിട്ടിയിലും പെരളശ്ശേരിയിലും ഓരോ ആശുപത്രി വേണമെന്ന് പറഞ്ഞു. അതിന്നു പണമില്ല. ഒരു രോഗബാധിതപ്രദേശമാണത്. മലേറിയ പിടിപെടുന്ന ഒരു സ്ഥലമാണത്. അവിടെ യാതൊരു ചികിത്സാസൌകര്യങ്ങളും ഏർപ്പെടുത്താൻ ഗവർമ്മേണ്ടിനു പണമില്ല. ശരിക്കു പറഞ്ഞാൽ മനസ്സില്ല. മലബാറിൽ ഒരു മെഡിക്കൽ കോളേജ് സ്ഥാപിക്കേണ്ടതിന്റെ ആവശ്യകത ഇവിടെ എത്രയോ പ്രാവശ്യം ഉന്നയിച്ചിട്ടുണ്ട്. ഗവർമ്മേണ്ട് ഇതുവരെ അതു കാര്യമായെടുത്തിട്ടില്ല. കണ്ണൂരിൽ ഒരു വിമൻസു കോളേജ് തുറക്കാനും ഇതുവരെ യാതൊന്നും ചെയ്തിട്ടില്ല. വടകര ആസ്പത്രിയുടെ എടുപ്പു എടുക്കുന്നതിന്റെ കാര്യവും തഥൈവതന്നെ. തലശ്ശേരി ബ്രണ്ണൻ കോളേജ് കെട്ടിടം പണിക്കു 67,000 ക. നാട്ടുകാർ പിരിച്ചു കൊടുത്തിട്ടുണ്ട്. പക്ഷെ ഗവർമ്മേണ്ട് ആ കെട്ടിടത്തിന്നാവശ്യമായ ധനസഹായം ചെയ്തില്ല.

"അവസാനമായി എനിക്ക് പറയാനുള്ളതു് അവിടത്തെ ഹരിജനങ്ങളുടെ കാര്യമാണ്. പണിയർ, കറിച്ചിയർ, കരിമ്പാലർ മുതലായ ഇനങ്ങളിൽപ്പെട്ട ധാരാളം ഹരിജനങ്ങൾ അവിടെയുണ്ട്. അവരെ ഉദ്ധരിക്കുന്നതിനുവേണ്ടി ഗവർമ്മേണ്ടു ഒരു സിങ്കിൾ പൈപോലും ഇതുവരെ ചെലവാക്കിയിട്ടില്ല. ചുരുക്കത്തിൽ, രാമരാജ്യത്തിൽനിന്ന് ക്ഷേമരാജ്യത്തിലേയ്ക്കും ക്ഷേമരാജ്യത്തിൽനിന്ന് സോഷ്യലിസത്തിലേയ്ക്കും കാലുവയ്ക്കാൻ പോകുന്നുവെന്ന് അഭിമാനിക്കുന്ന ഗവർമ്മേണ്ടാകട്ടെ, ഈ നാട്ടിനെ ക്ഷാമത്തിൽനിന്നു സർവ്വനാശത്തിലേയ്ക്കാണ് നയിച്ചുകൊണ്ടിരിക്കുന്നതെന്ന് ഓർമ്മപ്പെടുത്തിക്കൊള്ളട്ടെ. അതാണ് വാസ്തവം. പൊതുജനങ്ങളുടെ സഹകരണം ഇല്ലാത്തതിനാലും, ഗവർമ്മേണ്ടിന്നു ജനങ്ങളിൽ വിശ്വാസമില്ലാത്തതിനാലും ഗവർമ്മേണ്ടിന്റെ യാതൊരു പദ്ധതിയും വിജയപ്രദമാകുന്നില്ല; നാട്ടിന്റെ വിവിധ പ്രശ്നങ്ങളെ പരിഹരിക്കാൻ പര്യാപ്തമാകുന്നില്ല. ഇത്രയും പറഞ്ഞുകൊണ്ട് സമയച്ചുരുക്കത്താൽ ഞാൻ അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു.''

* **Sri A. RAMASUNDRA KARUNALAYA PANDIAN** :—" கனம் 8-45 p.m.
சபாநாயகர் அவர்களே, இச் சபையின் முன் கனம் நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பித்துள்ள 1955–56-ம் வருஷ வரவு செலவு திட்டத்தை நான் பொதுவாக ஆதரிக்கிறேன். இது இந்த சர்க்காரின் முதல் முழு வருஷ பட்ஜெட் ஆகும் என்று எண்ணுகிறேன். இதில் பல அபிவிருத்தி திட்டங்கள் சேர்க்கப்பட்டிருப்பினும் கூட, அதிமுக்கியமானதும், அத்யாவசியமானதும் ஆன திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. பட்ஜெட்டில் துண்டு விழுந்துள்ள நிதிக்கு புதிய வரி முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. நிலவரி சர்சார்ஜ் சகட்டுமேனிக்குப் போடப்பட்டிருப்பது சிறு விவசாயிகளையும், வறண்ட பகுதிகளையும் பாதிப்பதாக இருக்கிறது. தர நிர்ணயத்தின் பேரில் சர்சார்ஜ் விதிக்கப்பட்டால் முணு முணுப்புக்கே இடமிருக்காது. இதை கனம் நிதி மந்திரி அவர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். எல்லா ஏழை மாணவர்களுக்கும் 3-வது பாரம் வரை இலவச கல்வி வசதி அளிப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் இத்துடன் திருப்தி அடைந்துவிடக் கூடாது. மூன்றுவது படிவம் வரை தேசீயக் கல்வியாக நிர்ணயித்து பாகுபாடின்றி யாவருக்கும் இலவசக் கல்வி அளிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என்பதை நமது அரசியல் சட்டத்திலும் விதி வகுக்கப்பட்டிருக்கிறது.

" பொதுவாக விவசாயிகளுடைய உற்பத்திப் பொருள்களின் விலை இறங்கு முகமாகவும், விவசாயிகள் வாங்கக்கூடிய இதர பொருள்கள் விலை ஏறு முகமாகவும் இருக்கிறது. இதை சமநிலைப்படுத்த வேண்டியது அவசியம். சர்க்காரின் கடமைகளில் இதுவும் ஒன்றாகும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். விவசாயிகளுடைய கடன் வசதிக்கு திட்டவட்டமான ஏற்பாடு அவசியமாகும் என்பதை வற்புறுத்துகிறேன். விவசாயிகள் கடன் மசோதாவால் ஏற்பட்ட நிலைமையை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று ஞாபகப்படுத்துகிறேன். விவசாய பொருளாதார நிலை மோசமடையுமானல் விவசாயிகளின் நிலைமை விபரீதமடையும் என்பதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கிராமங்களில் கூட்டுறவு பாங்குகள் ஏற்படுத்தி விவசாயிகளுக்கு கஷ்டமில்லாமல் சீக்கிரத்தில் கடன் வசதிகள் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமாகும். இது பற்றி சர்க்கார் முழுகவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். விவசாயிகளுக்கு ஒரு வருஷ காலத்தில் நாலு முதல் ஆறு மாதங்கள்தான் வேலை கிடைக்கின்றன. எஞ்சிய மாதங்களில் விவசாயிகளுக்கு சிறு குடிசைத் தொழில்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இன்னும் கிராமங்களுக்கு போதிய அளவு மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டும். கிராமங்களுக்கு மின்சாரம் கிடைப்பதில் அரசாங்கம் ஆமை வேகத்திலிருந்து முன்னேறவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அபிவிருத்தி திட்டங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்களையும் பஞ்சாயத்து களையும் பங்கு கொள்ளச் செய்யவேண்டியது அவசியமாகும் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

" விற்பனை வரியால் கூட்டுறவு ஸ்டோர்ஸ்தான் பாதிக்கப்படுகின்றன. பெரிய வியாபாரிகள் விற்பனை வரியிலிருந்து தப்புவதற்கு பல முறைகளை கையாளுகின்றனர். இந்த முறையை கூட்டுறவு ஸ்தாபனங்கள் செய்ய முடியாது யென்பதையும் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகையால் கூட்டுறவு ஸ்டோர்களுக்கும், கூட்டுறவு நெசவாளர் உற்பத்தி விற்பனை சங்கங்களுக்கும் விற்பனை வரி வசூல் செய்வதிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" தென்னிந்தியாவில் மிக முக்கியமான புண்ணிய க்ஷேத்திரங்களில் ஒன்று சங்கர நயினர் கோவில் டவுனாகும்யென்பது எல்லோரும் அறிந்தது தானே. அங்கு சங்கரன் கோவில் டவுனில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் ஸ்தல மக்களும் ஆயிரக்கணக்காக வரும் யாத்ரீகர்களும் கஷ்டமடைகிறார்கள். அரசாங்கத்துக்கு இதைப்பற்றி பலகாலமாக முறையிட்டு வருகிறோம். இதற்கென பஞ்சாயத்து ரூபாயிக்கு நாலணு வீதம் வீட்டுத்தீர்வையின்பேரில் தண்ணீர் வரி வசூல் செய்து ரூபாய் 50 ஆயிரத் துக்கு மேல் பணம் வைத்திருக்கிறது. சர்க்கார் ஏழரை லட்சத்தில் குடி தண்ணீர் திட்டம் தயாரித்து, ஷ திட்டத்துக்காகும் சிலவு பூராவையும் பஞ்சாயத்து ஏற்றுக்கொண்டால் இந்த திட்டத்துக்கு முதலிடம் கொடுப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. இது அந்த பஞ்சாயத்து நிதி நிலைமைக்கு மிஞ்சியதாகும். அரசாங்கம் புனர் பரிசீலனை செய்து மேற்படி திட்டத்துக்கு சர்க்கார் பாதி மானியம் கொடுத்தால் நாலில் ஒரு பங்கை தேவஸ்தானத்தாரை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதின் மூலம் 4-ல் ஒரு பங்கும் நடப்புச் செலவையும் பஞ்சாயத்தாரை ஏற்றுக்கொள்ளச் செய்வதின் மூலம் அப்பிரதேசமாகிய சங்கரன் கோவில் டவுனில் குடி தண்ணீர் பிரச்னையை நிவர்த்தி செய்யலாம் என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறைந்த பட்சம் சங்கரன்கோவில் டவுனில் குடி தண்ணீர் பிரச்னையை கூட அரசாங்கத்தாரால் செய்து தர மறுப்பது நியாயமாகாது என்பதை வற்புறுத்துகிறேன்.

" மூன்றாவது படிவம் வரை இலவசக் கல்வி சலுகை இருப்பதை ஆறாவது படிவம் வரை கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1-வது பாரம் 6-வது பாரம் வரை மாணவர்களுக்கு விவசாயக் கல்விகள் போதிக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

3rd March 1955] [Sri A. Ramasundara Karunalaya Pandian]

“சங்கரன் கோவில் தாலூகாவில் தேசீய அபிவிருத்தி திட்டம் அமுல் நடத்தினாலும் கூட இன்னும் பல கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்த பாடில்லை. சிவகிரி, பஞ்சாயத்து விஸ்வநாதபேரி பஞ்சாயத்து, ராயகிரி இராமநாதபுரம் கிராமங்களுக்கு மின்சாரம் வெகு விரைவில் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்களிடம் ஒரு தூது கோஷ்டி சென்று ஞாபகப்படுத்தினதை கவனியாமல் இருப்பதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சேர்ந்த மரம், வீர சிகாமணி, பாம்பு கோவில் சந்தை, மீன் துள்ளி, தேவர் குளம், கரிவலம் வந்தநல்லூர், தலவன்கோட்டை நகரம், மலையடி குறிச்சி, பனைவடலி சத்திரம், மேலநீலிதநல்லூர் கிராமங்களுக்கு விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு மின்சார விஸ்தரிப்பு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் திட்டத்தில் பாசன கிணறுகள் தோண்டுவதில் இந்தப் பகுதிகளுக்கு அதிகப்படி கிணறுகள் தோண்ட ஏற்பாடு செய்ய வேண்டிக்கொள்ளுகிறேன். பசியோடு இருப்பவனுக்கு சாப்பாடு போட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்வோமாயின் அவசியமாக உதவி செய்யப்படவேண்டிய பகுதி சங்கரன் கோவில் தாலுகாவே யாகும் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

“தேசீய அபிவிருத்தி திட்டத்தில் போடப்பட்டுள்ள ரோடுகள் பராமரிப்பன்றி அழிந்து வருகின்றன. இந்த ரோடுகளின் பராமரிப்பை ஒன்று ஜில்லா போர்டார் மேற்கொள்ளவேண்டும் அல்லது அரசாங்கம் எடுத்து வேறு ஏற்பாடு செய்யவேண்டும். தேசிய விஸ்தரிப்பு திட்ட பிரதேசத்தில் ரோடுகள் போடுவதற்கு கஷ்டமாக இருப்பதால் சில விதிகளை உடனடியாக அரசாங்கம் வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு ஸ்தாபனத்தையோ அல்லது ரு காரியத்தையோ எளிதில் உண்டுபண்ணி விடலாம். ஆனால் அதற்கு அழிவு ஏற்படாமல் பாதுகாப்பதுதான் முக்கிய கடமையாகும் என்பதை மறந்துவிடக்கூடாது.

“சங்கரன்கோயில் தாலூகாவில் அநேக குளங்கள் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக வாசுதேவ நல்லூரில் பெரியகுளம் நீண்ட காலமாக மராமத்து செய்யப் படவில்லை. அதனால் 1,500 எக்கர் நிலம் பாழடைந்திருக்கிறது. அந்த குளம் மராமத்து செய்யப்பட்டால் 1,500 எக்கர் நிலத்திலிருந்து நல்ல விளைவு ஏற்பட்டு உணவு உற்பத்தி பெருகும். ஆகவே அந்தக் குளத்தை மராமத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சங்கரன் கோவில் தாலூகாவில் பாதிப்பங்கு குளங்கள் ஜமீந்தாரிப் பிரதேசத்தில் இருப்பதால் மராமத்து ஆகாமல் இருக்கின்றன. உதாரணமாக, திருமலை நாயகன் புது குடி கிராமத்தில் சமுத்திரம் குளம், வலையன் குளம், காஞ்சிறபத்தி குளம், தொண்டமன்னார் குளம் ஆகும். தலைவன் கோட்டை ஜமீன், தலைவன் கோட்டை கிராமத்தில் இருகரையான் என்ற குளம் இருக்கிறது. தற்சமயம் இது உடைகுளமாக இருக்கிறது. இந்த குளம் மராமத்து செய்யப்பட்டால் 100 எக்கர் நஞ்சை பயிர் சாகுபடி செய்யலாம். ஆயிரம் கோட்டை நெல் அதிகமாக உற்பத்தியாகும். சர்க்காருக்கு கிஸ்தி வருமானமும் அதிகமாகக் கிடைக்கும். அப்பகுதி மக்களின் வேலையில்லா திண்டாட்டத்தையும் போக்கலாம். ஆதலால் அந்த இருகரையான் குளத்தை தாமதமில்லாமல் மராமத்து செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். நிரந்தரமான நீர்ப்பாசன வசதிகள் முதலில் கவனிக்கப்படவேண்டும். மராமத்து ஆகாத குளங்கள் சீக்கிரத்தில் மராமத்து செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சங்கரன் கோவில் தாலூகா வரண்டப் பிரதேசம் நிரந்தரமான நீர்ப்பாசன வசதி இல்லை. மழையினால் குளங்கள் நிரம்பி இந்த வருஷத்தில் நஞ்சைப் பயிர்கள் சரியாக இருந்தாலுங்கூட புஞ்சைப் பயிர்கள் தீய்ந்து போய்விட்டன. தீர்வை வஜா கொடுக்கவேண்டுமென்று சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்தாற்போல் இந்த பட்ஜெட் பிரசங்கக் குறிப்பில் முக்கிய பங்குகொள்ளவேண்டியது கீரியார் அணைக்கட்டுத் திட்டம் என்பதை ஞாபகப்படுத்துகிறேன். இது ஒரு மத்தியதர திட்ட வகையைச் சேர்ந்தது. 2-வது

5 ஆண்டு திட்டத்தில் சேர்க்கக்கூடிய சில மத்தியதர திட்டங்களை கனம் நிதி மந்திரி அவர்கள் தமது பட்ஜெட் பிரசங்கக் குறிப்பில் சேர்த்திருக்கிறார்கள். அவை திருச்சி ஜில்லாவில் 2 திட்டமும் சேலம் ஜில்லாவில் 2 திட்டமும், மலபாரில் 1 திட்டமும் ஆக இருக்கின்றன. கீரியார் திட்டம் உள்ள சங்கரன் கோவில் தாலூகா அல்லது திருநெல்வேலி ஜில்லாவானது கனம் நிதி மந்திரி அவர்களுடைய ஞாபகத்தில் இல்லாமல் போய் விட்டது போல் தோன்றுகிறது. கீரியார் திட்டம் பற்றி 3 வருஷ காலமாக இந்த அசெம்பளியில் பேசியிருந்தும் கூட பட்ஜெட் பிரசங்கக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இது மனவேதனையைக் கொடுக்கின்றது. உணவு, உடை, குடியிருப்பு வசதி, ஆகியவைகள் சுதந்திர நாட்டில் மக்களுக்கு அவசியம் என்று சொல்லும்போது மேற்படி முக்கியமான தண்ணீர் பிரச்னையை தீர்க்கக்கூடிய ஒரு திட்டத்தை கவனியாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகத் தோன்றுகிறது. கனம் நிதி மந்திரி அவர்களின் பட்ஜெட் உரையை எங்கள் தொகுதியிலுள்ள மக்கள் படித்தால் உண்மையிலேயே வருத்தப்படுவார்கள். இரண்டு கோடி ரூபாய் செலவுக்குள் அந்த திட்டம் நிறைவேறக்கூடியது. கடந்த 50, 60 வருஷகாலமாக இதைப்பற்றி பேசிக்கொண்டு வருகிறார்கள், அப்படியிருந்தும் அந்த திட்டத்தை என் அரசாங்கம் விட்டுவிட்டார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. அந்தப் பகுதியில் ஒரு உப தேர்தல் நடந்தால் அந்த திட்டம் நிறைவேறும் என்று நம்புகிறேன். அத்திட்டத்தினால் ஏராளமான நஞ்சை நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும், பலரும் நிரந்தரமாக அங்கே வாழ்வார்கள். இல்லாவிட்டால் அந்த பிரதேசத்தை காலிசெய்துவிட்டு வேறு பிரதேசத்திற்கு செல்லக்கூடிய நிர்ப்பந்தமும் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். கீரியார் அணைக்கட்டு திட்டம் நிறைவேற்றப் படவேண்டும் என்று எல்லா கட்சி தலைவர்களும், அங்கத்தினர்களும் பேசியிருக்கிறார்கள். கனம் ஸ்ரீ உ. முத்துராமலிங்க தேவர் அவர்கள் அசெம்பளியில் பேசும்பொழுது கீரியார் திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரண்ட பிரதேசமாகிய சங்கரன் கோவில் தாலூகாவிற்கு பிரயோஜனமாகயிருக்குமென்று சொன்னார்கள். ஸ்ரீ கனம் பி. டி ராஜன் அவர்களும் இதை வற்புறுத்தியிருக்கிறார்கள். அந்த பிரதேசத்திலுள்ள மக்கள் வரிக் கொடுப்பதில்லையா. ஏன் அந்த திட்டத்தை 2-வது 5 ஆண்டு திட்டத்தில் எடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டார்கள் என்பதற்கு விளக்கம் தேவையாயிருக்கிறது. அப்பிரதேசத்து மக்களுடைய நலன்களை சர்க்கார் புறக்கணித்து இருப்பது விரும்பத்தக்கது அல்ல. அதனால் பெரிய விபரீதங்கள் ஏற்பட இருக்கின்றன. மூன்று வருஷ காலமாக இங்குள்ள அங்கத்தினர்கள் அதைப்பற்றி சொல்லிக்கொண்டு வந்தும் அது கவனிக்கப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அப்பகுதி மக்களின் துர் அதிர்ஷ்டமே என்று தான் சொல்லவேண்டியதாய் இருக்கிறது.

" ஒவ்வொரு வருஷமும் நிதி மந்திரி அவர்கள் சமர்ப்பிக்கும் பட்ஜெட்டின் மீது அங்கத்தினர்கள் பொது விவாதத்தின்போது சொல்லக் கூடிய ஆலோசனைகளை சர்க்கார் ஆலோசனை செய்து அவர்கள் சொன்ன ஆலோசனைகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்று மந்திரிகள் பதில் கொடுப்பதில்லை. அப்படிச் செய்தால் அது நலமாகத் தோன்றாதா? நாங்கள் சட்ட சபையில் பேசிவிட்டு தொகுதிகளுக்குச் செல்லுங்காலத்தில் நாங்கள் சட்ட சபையில் என்ன பேசினோம் அதன் மீது சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மக்களுக்கு ஒன்றும் தெரியவில்லையென்று புகார் சொல்லுகிறார்கள். ஆகையால் பட்ஜெட் விவாதம் முடிந்த பிறகாவது அங்கத்தினர்கள் சொல்லிய ஆலோசனைகளின் பேரில் சர்க்கார் எடுத்துக்கொண்ட முடிவுகள்பற்றி அங்கத்தினர்களுக்கு தெரிவிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" கீரியார் திட்டத்தை 1-வது 5 ஆண்டு திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளவில்லை 2-வது 5 ஆண்டு திட்டத்திலும் சேர்த்துக்கொள்ளவில்லை. இப்பொழுது 2-வது 5 ஆண்டு திட்டத்தில் அத்திட்டம் சேர்த்துக்கொள்ளப்

3rd March 1955] [Sri A. Ramasundara Karunalaya Pandian]

படவேண்டும் என்பதற்கு அசெம்பளியில் சர்க்கார் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நகல் தீர்மானம் கீழ்க்கண்டபடி கொடுக்கப்பட்டிருக்கிறது :—

'This Assembly recommends to the Government to address the Government of India and the Planning Commission for the inclusion of the Ghiriyar Project (Sankarankoil taluk, Tirunelveli district, in the Second Five-Year plan.'

உத்தியோகப்பற்றற்ற தீர்மானம் கொண்டு வந்தால் சர்க்காருக்கு அகௌரமாக இருக்குமென்று எண்ணுகிறேன். ஆகவே சர்க்காரே அந்த தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றவேண்டுமென்றும் 2-வது 5 ஆண்டு திட்டத்தில் கீரியார் திட்டத்தை சேர்த்துக்கொள்வதற்கு சிபார்சு செய்யவேண்டுமென்றும் மந்திரி சபையையும் கேட்டுக் கொள்ளுகிறேன். தண்ணீர் பிரச்னையை தீர்க்கவேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமையாகும். அப்படிச் செய்தால் அங்குள்ள மக்கள் இதைக் காட்டிலும் அதிக வரி கொடுப்பதற்கு தயாராக இருப்பார்கள் என்று நான் உறுதி கூறுகிறேன். சர்க்காருடன் எப்பொழுதும் விசுவாசத்துடன் இருப்பார்கள். மக்கள் பிரச்னை கவனிக்கப்படவேண்டும். கிளர்ச்சி ஏற்பட்டு அந்த கிளர்ச்சியை அடக்குவதற்கு சர்க்கார் செலவழிக்கும் தொகையைக்கூட கிளர்ச்சி ஏற்படாமல் இருக்கும் பொருட்டு நீர்ப்பாசன வசதிகளுக்கு செலவழிக்கலாமென தெரிவித்துக்கொள்ளுகிறேன். நீர்ப்பாசன வசதிகள் கவனிக்கப்பட்டால் கிளர்ச்சியே ஏற்படாது.

"இதே மாதிரி 1-வது 5 ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்ட வயலி மலையடிப்பட்டி குளத்தை இன்னும் சர்க்கார் மராமத்து செய்யவில்லை. 2 ஆண்டு காலமாக வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் இதை கவனியாமல் இருப்பது வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. ஆகவே அக்குளத்தை மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கீரியார் திட்டத்தை 2-வது 5 ஆண்டு திட்டத்தில் சேர்க்காவிட்டால் அத்தொகுதியிலுள்ள மக்கள் அடுத்தப் பொது தேர்தலில் கலந்து கொள்வார்களோ என்பது சந்தேகத்துக்கு இடமாக இருக்கிறது. மக்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பது சர்க்காரின் முதல் கடமை என்பதை மறந்துவிடக்கூடாதென்று ஞாபகப்படுத்துகிறேன். இம்மாதிரி திட்டம் கிருஷ்ணகிரியில் நிறைவேற்றப்படுவதற்காக சர்க்கார் ஒரு கோடி எழுபது லட்ச ரூபாய் சாங்க்ஷன் செய்திருப்பதாகத் தெரிகிறது. அதனுல் 7,500 ஏக்கர் நிலத்தில்தான் பயிர் சாகுபடி செய்யலாம்போல் தோன்றுகிறது. அப்பிரதேச மக்களிடமிருந்து சர்க்கார் ஒரு விதமான பிரதி பிரயோஜனத்தையும் எதிர்ப்பாராமல் அத்திட்டத்திற்கு சாங்க்ஷன் கொடுத்திருக்கிறுர்கள். ஆனுல் இந்த கீரியார் திட்டம் அதை விட மிக சிறந்த திட்டம். ஏனெனில் இத்திட்டத்திற்கு மக்கள் கண்ட்ரிபூஷன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறுர்கள். இந்த திட்டத்தினுல் 20,000 முதல் 30,000 ஏக்கர் வரை நஞ்சைப்பயிர் சாகுபடி செய்யலாம். கிருஷ்ணகிரி திட்டத்தை காட்டிலும் கீரியார் பிரதேசத்தில் அதிக ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யலாம். முக்கியமான கோடை வாசஸ்தலங்களில் ஒன்ருக ஆகக் கூடியதாக கீரியார் திட்டப் பிரதேசம் இருக்கிறது. இது ஒரு நல்ல திட்டமென்று இன்ஜினீயர்களும் ஒப்புக்கொண்டு சிபார்சு செய்திருக்கிறுர்கள். திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் அவர்களும் இந்த திட்டத்தை சிபார்சு செய்திருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் பரிசீலனைகள் முடிந்தும் கூட இதை 1-வது 5 ஆண்டு திட்டத்தில் சேர்க்காமல் இருப்பதைப்பற்றி அப்பகுதி மக்கள் வருத்தப் படுகிறுர்கள். வரண்ட பிரதேசமான சங்கரன் கோவில் தாலுக்காவில் உள்ள மக்களுக்கு தண்ணீர் வசதிசெய்துகொடுக்கவேண்டுமென்று சர்க்கார் கருதினுல் இந்த கீரியார் திட்டத்தை தாமதமில்லாமல் நிறைவேற்றினுல் தான் முடியுமென்பதை வலியுறுத்துகிறேன்.

"தற்சமயம் கைத்தரி ஜவுளிக்கு கொடுக்கப்பட்டுவரும் ரூபாய் 1-க்கு 0–1–6 அணு ரிபேட்டை 0–2–0 அணுவாக மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனுல் கைத்தரி நெசவாளர்கள் நிலைமை சிறிது கவனிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

[Sri A. Ramasundara Karunalaya Pandian] [3rd March 1955

"கடையநல்லூர் வழியாகச் செல்லும் பாப்பான் கால்வாயை நல்ல முறையில் மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனுல் சுமார் 30 முதல் 40 குளங்கள் நல்ல பலன் அடையக்கூடும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். உணவு உற்பத்தி அதிகப்படுமென்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

"ஒவ்வொரு மந்திரிகளும் அவரவர்கள் தொகுதிகளுக்கு வேண்டிய சௌகர்யங்களை செய்து வருகிருர்கள் என்பது தெரியவருகிறது. நான் சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவனுக இருந்தாலுங்கூட இதை வருத்தத்துடன் சொல்லத்தான் வேண்டியதாக இருக்கிறது. அடுத்த தேர்தல் வரப்போகிறதே என்று இப்பொழுதே அவரவர்கள் தொகுதிகளுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொண்டு வருவதாகத் தெரிகிறது. பவானி திட்டம், மணிமுத்தாறு திட்டம் ஆகிய திட்டங்களில் துரிதமாக வேலை நடந்துகொண்டிருப்பதிலிருந்து ஊகித்துக்கொள்ளலாம். தங்களது தொகுதிகளை மந்திரிகள் கவனிப்பது போல் மற்ற இதர தொகுதிகளையும் மந்திரிகள் கவனிக்கவேண்டுமென்றும் ஒவ்வொரு பகுதி மக்களுக்கு வேண்டிய தேவைகளை அறிந்து சர்க்கார் காலதாமதம் செய்யாமல் உடனடியாக அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"பழைய சட்ட சபையில் அதாவது 1937, 1946-ம் வருடங்களில் அங்கத்தினர்கள் பேச முடியாத நிலைமையில் இருந்தார்கள். இப்பொழுது 1952-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகுதான் ஒவ்வொரு மெம்பருக்கும் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது."

Mr. SPEAKER :—"அப்பொழுது கனம் அங்கத்தினர் சட்டசபை மெம்பராக இல்லை. அப்பொழுது பேச உரிமை இருந்தது." (சிரிப்பு.)

Sri A. RAMASUNDARA KARUNALAYA PANDIAN :—"சங்கரன் கோவில் மிகவும் வரண்ட பிரதேசம் என்பதை சர்க்கார் கருத்திற்கொண்டு இந்த கீரியார் திட்டத்தை 2-வது 5 ஆண்டு திட்டத்தில் சேர்ப்பதற்கு அசெம்பளியில் சர்க்கார் சார்பில் ஒரு தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சந்தர்ப்பம் அளித்த கனம் சபா நாயகர் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக."

* **Sri M. MANICKASUNDARAM** :—"கனம் மன்றத் தலைவர் அவர்களே, இந்த 1955–56-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது, நிதி மந்திரி பிரசங்கத்தை தமிழிலும் அச்சடித்துக் கொடுத்ததற்காக, மகிழ்ச்சியுடன் எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் முன் உரையில் கூறியபடியும் இந்த பட்ஜெட் விவாதத்தின் போதும் சபையிலுள்ள இருதரப்பினரும் நாட்டின் அபல நிலையை எடுத்துக் காட்டி அதற்கு ஏற்றவாறு வரவு செலவுத் திட்டம் இல்லை என்பதை எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். சுதந்திரம் அடைந்த பிறகும் கூட நாம் முன்னேற்றம் அடைவதற்கான சாதனங்கள் இல்லை என்பதை நினைக்கும்போது, வருந்த வேண்டியதாகத் தானிருக்கிறது. இந்த விவாதத்தின் போது பேசுங்கால், நம்முடன் இருந்து வரும் மலையாள, கன்னட சகோதரர்கள் அவர்களுக்கு சலுகைகள் கொடுக்கப்படவில்லை யென்றும், அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதாயும் கூறினுர்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தை கவனிக்குங்கால், இதர பிரதேசத்தை விட அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகளுக்குக் குறைவே யில்லை என்று தெரிய வருகிறது. நமது சர்க்கார் அவர்களுக்கு அநேக சலுகைகளை அளித்திருக்கிருர்கள். இருந்த போதிலும், அவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. இதில் உள் கருத்து விளங்குகிறது. ஆகவே, சர்க்கார் முன் வந்து, அவர்களுக்கு உரிமையான நாட்டுடன் அவர்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் நாமெல்லோரும் ஒற்றுமையாக யிருக்கவேண்டும். பாகிஸ்தான்

3rd March 1955] [Sri M. Manickasundaram]

பிரிவினையின்போது ஏற்பட்ட சூழ்நிலை வரவிடக்கூடாது. ‘எலி வளை யானாலும், தனி வளையாக யிருக்க வேண்டும்’. தமிழ் நாடு தனியாகப் பிரிவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன்.

“இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிலச் சீர்திருத்தம் இடம் பெறுமென்று ஏழை விவசாயிகள் எதிர்ப்பார்த்தார்கள். அதைப் பற்றி வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றும் சொல்லாதது கண்டு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். இந்த நிலச் சீர்த்திருத்தம் விரைவில் கொண்டு வரப்படுமென்று நமது ரெவின்யூ அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, தஞ்சாவூர் பண்ணையாள் சட்டத்தை இதர ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும். திருச்சி மாவட்டத்தில், லாலாபேட்டை, பஞ்சமா தேவி, குளித்தலை பிர்க்கா போன்ற இடங்களில் மிராஸ்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் தகராறு யிருந்து வருவதாக பத்திரிகை மூலம் தெரிந்து கொண்டேன். அங்கேயுள்ள கலெக்டர் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் தெரிகிறது. நமது மாகாணத்தில் நல்ல சூழ்நிலை ஏற்பட வேண்டுமானால், உடனடியாக பண்ணையாள் சட்டம் அமுலாக்க நடவடிக்கை கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுகொள்ளுகிறேன். தவிர, குளித்தலை பிர்க்காவில் பொய்யாமணி, நங்கவரம் முதலிய இடங்களில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே விவசாயிகளை அங்கே ஒரு சர்க்கரை ஆலை நிறுவப் போவதாகச் சொல்லி, மிராசுதார்கள் நிர்ப்பந்தித்து நிலத்தை விட்டு விடவேண்டுமென்று சொல்வதாகத் தெரியவருகிறது. சர்காரை ஆலைக்கு வேண்டிய கரும்பை விவசாயிகள் உற்பத்தி செய்வதாகச் சொல்லுகிறார் கள். அங்கு விவசாயிகளை வெளியேற்றுவதைத் தடுக்க வேண்டும்.

“இந்த வருட பட்ஜெட்டில் புதிதாக வரிகள் விதித்திருக்கிறார்கள். வரிகளை மேலும் மேலும் போட்டுக் கொண்டே போவதாகத்தான் தெரிகிறது. விவசாயிகளை எடுத்துக்கொண்டால், இத்துடன் அவர்கள் மீது இந்த வருடம் நான்கு வரிகள் போடப்பட்டிருக்கின்றன. வரி விதிப்பது தான் நமது கொள்கையாகப் போய்விட்டதோ என்று நினைக்கக் கூட வேண்டி யிருக்கிறது.

“வரி போடுவது தப்பு என்று நான் சொல்லவில்லை. அரசாங்கம் 9–05
ஒழுங்காக நடப்பதற்கு வரி வேண்டியதுதான். ஆனால் வரி விதிக்கும் p.m.
காலத்தில் விதித்த வரிகள் சரியாக வசூலிக்கப்படுகிறதா, அதை நாம் சரியான வழியில் செலவு செய்கின்றோமா இவ்விரண்டையும் கவனித்து அதற்குப் பின் ஒரு புதிய வரி போட்டோம் என்றால் அது ஓரளவு சரியாக இருக்கும். சர்க்காருக்குத் தேவைப்படும் அளவுக்கு இல்லாமல் அதிகமாக வரி வசூலிக்கப்படுகிறது என்று ஏற்கெனவே மக்களிடத்தில் மனக்கசப்பு இருக்கும் காலத்தில் மீண்டும் மீண்டும் ஒரே வருஷத்தில் நான்கு வரிகள் போடுவது அவ்வளவு உசிதம் அல்ல. தேவைப்பட்டால் நல்ல முறையில் நாம் வரிகள் விதிக்கலாம். தற்சமயம் விதிக்கும் வரியை பெரிதும் ஆராய்ந்து மக்கள்மீது விதிக்கவேண்டும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

“குளித்தலை லோகல் பண்டு டிஸ்பென்சரியை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜில்லா போர்டிலிருந்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறார்கள். அந்த ஊர் பஞ்சாயத்து போர்டும் ஒரு தீர்மானத்தைப் போட்டு சர்க்காருக்கு அனுப்பி இருக்கிறார்கள். குளித்தலை தாலூகா தலைமை இடம். தினசரி நானூறு வியாதியஸ்தர்கள் அந்த ஆஸ்பத்திரிக்கு வருவதாக கணக்கிலிருந்து தெரியவருகிறது. திருச்சிராப்பள்ளிக்கும் கரூருக்கும் இடையிலுள்ள 48 மைல் தூரத்திற்குள் நல்ல சர்க்கார் ஆஸ் பத்திரி ஒன்றும் இல்லை. ஆகவே குளித்தலை லோகல் பண்டு ஆஸ்பத் திரியை சர்க்கார் அவசியமாக எடுத்து நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

“கரூர் தாலூகாவிலுள்ள புகளூர் என்னும் கிராமத்தில் சர்க்கார் ஒரு வாய்க்கால் வெட்டி இருக்கிறார்கள். அதை பாபுலர் முதலியார் சானல் என்று சொல்லுகிறார்கள். ஒரு ஆண்டுக்குமுன் அந்தத் திட்டம் கைவிடப் படவேண்டும், காவேரியில் தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள்

இருந்தபோதிலும் சர்க்கார் மிகவும் ஊக்கத்துடன் வெட்ட ஆரம்பித்து இருக்கிறார்கள். நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காவேரியில் தண்ணீர் இல்லை என்று சொல்லுவது சரியல்ல. தண்ணீர் இருக்கிறது. காவேரித் தண்ணீருடன் நொய்யல் பவானி ஆற்றின் கழிவு தண்ணீர் சேர்ந்து அந்தத் திட்டத்திற்கு பூரணமான அளவு பயன்படத் தண்ணீர் வருகிறது. நல்ல முறையில் ஆராய்ந்து அங்கு பூரா பிரதேசங் களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் அதை வெட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" பல ஆண்டுகளாக குடகனூர், ரங்காஞ்சி ஆறுகளில் தேக்கம் வைத் தால் பல புஞ்சைப் பிரதேசங்களுக்குத் தண்ணீர் பாயும் என்று கரூர் விவசாயிகள் மகாநாட்டில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு பல ஆண்டுகள் முயற்சி எடுத்தும் அதன்மீது எவ்விதமான நட வடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் இத் திட் டத்தை பரிசீலனை செய்திருக்கிறார்கள். ஏதோ அவர்களுக்கு முதல் போட் டதற்கு உண்டான வட்டி கிடைக்கவில்லை, குறைந்த பட்ச வட்டியாக இருக்கிறது என்று நிறுத்திவிட்டிருக்கிறார்கள். விவசாயம் அபிவிருத்தி யடைய வேண்டுமென்றால் விவசாயத்திற்கு வேண்டிய பாசன வசதியைச் செய்துகொடுக்கவேண்டும். நம் நாட்டின் உணவுத் தேவைக்கு பிற நாட் டுக்குப் போய் பிச்சை எடுக்காமலிருக்க வேண்டும் என்றால் இம் மாதிரிப் பிரதேசத்திலுள்ள ஆற்றில் வீணாகச் செல்லும் நீரைத் தேக்கி பாசனத் திற்கு உபயோகப்படுத்தவேண்டும். அதற்கான நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" லோயர் பவானி திட்டத்தில் கரூர் தாலூகாவில் நிறையப் பாசனம் அளிக்கப்படும் என்று திட்டம் வகுக்கும் காலத்தில் தெரிவித்தார்கள். கடைசியில் இப்பொழுது பார்க்கப்போனால் அவர்கள் கரூர் தாலூகாவில் மூன்றே கிராமங்களுக்குக் கொடுத்துவிட்டு பூரா தண்ணீரையும் நொய்யலில் விட்டு அதை தஞ்சாவூருக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். ஆகையால் பவானித் திட்டமும் பூரணமான பலன் ஏற்படவேண்டுமென்று தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

" கரூர் தாலூகாவில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் இருக்கிறது. மூன்று பிர்க்காக்களில். இந்த மூன்று பிர்க்காக்களுக்கு அடுத்த பிர்க்காக்களும் குளித்தலை தாலூகா நஞ்சைப் பிரதேசங்களுக்குப் போக பாக்கியுள்ள பிரதேசங்கள் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும். இத் திட்டத்தினால் மக்களுக்கு நல்ல பயன் இருக்கிறது. அம்மாதிரியான காடாரம்பப் பகுதிகள் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டால் நாடு மிகவும் சுபிட்சமடையும்.

" மின்சார வசதிகள் கொடுப்பதற்கு நல்ல மானியம் ஒதுக்கப்பட்டிருக் கிறது. மின்சார வசதி கொடுக்கும் காலத்தில் நாம் முக்கியமாகக் கவ னிக்கவேண்டிய தென்னவென்றால் மக்களால் பிரயோஜனப்படுத்திக்கொள் ளும் மின்சாரத்திற்கு யூனிட் வரி விதிக்க வேண்டுமே யொழிய குதிரை பவர்மீது அவர்கள் ஒப்பந்தம் கொடுத்து, ஒரு குதிரை வேகத்திற்கு 50 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தி, அவர்கள் எடுத்துக் கொண்டாலும் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் ஒப்பந்த குதிரை பவருக்கு கூடிய தொகை கட்டவேண்டுமென்று விவசாயிகளை வற்புறுத்துவதினால் மின்சார வசதிகளைப் பூரணமாக மக்கள் எடுத்துக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படுகிறது. விவசாயத்திற்கு உபயோகித்த மின்சாரத்திற்கு வரி விதிக்கவேண்டுமேயொழிய கட்டாயமாகப் பலவந்தப்படுத்தி அவர்களுக்குத் தேவைப்பட்டாலும் படாவிட்டாலும் குறைந்தபட்சம் சர்க்காருக்கு ' மினிமம் காரண்டி ' கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை கூடாது. இந்த நாட்டில் உண்மையாகவே விவசாயம் அபிவிருத்தி அடையவேண்டுமென்று சர்க்கார் கருதினால் அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" ஹரிஜன நலன்களுக்கு மான்யம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் சில வற்றை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சாதாரண

3rd March 1955] [Sri M. Manickasundaram]

ஹரிஜன மாணவர்களுக்கு உணவு விடுதி ஏற்படுத்தவேண்டுமென்றால் ஹரிஜன மாணவர்கள் ஒரு ஆண்டு இருந்து அதற்குப்பின் அதிலுண்டான பணம் கொடுப்பதாக இருக்கிறது. ஹரிஜன மாணவ விடுதிக்கு ஒரு ஆண்டு வரையில் பண உதவி கொடுக்கக்கூடிய வசதியுள்ள ஒரு நபரை பிடிக்கக் கூடிய காலமா இது என்று கேட்கின்றேன். மாணவ விடுதியில் சேர்ந்த வுடன் அந்த ஹாஸ்டலைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும். அங்குள்ள மாணவர்களுக்கு உடனடியான சலுகை காட்டவேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டும். மாணவர்கள் சேர்ந்து ஆறு மாதங்கள் அங்கு சாப்பிட்டு வந்து ஒரு அதிகாரி சென்று சரியாக நடக்கிறதா என்று பார்த்து அதற்குப் பின் கொடுக்கிறோம் என்பது பெரிய அளவுக்குச் சலுகை காட்டுவதாக சொன்னாலும் உண்மையான ஏழைகளுக்குக் கொடுக்கக்கூடிய நிலவரத்தில் இல்லை என்று வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

"மத்தியதர வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகையைப் பாராட்டுகிறேன். மத்தியதர பள்ளிக்கூடங்கள் கிராமங்களில் இல்லை. அனேகமாக வசதியுள்ள இடங்களில்தான் இருக்கின்றன. உண்மையாகவே நாட்டில் கல்வி அபிவிருத்தி ஏற்படவேண்டும் என்றால் கிராமங்களுக்கு உயர்தர பள்ளிக்கூடம் ஏற்படுத்தி கொடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"பாட்டை பராமரிப்புக்காக 75 லட்ச ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தந்த ஜில்லாவிலுள்ள பாட்டை நீளத்தைக் கணக்கெடுத்து அதை ஜில்லா வாரியாக ஒதுக்கவேண்டும். அந்தந்த ஜில்லா பாட்டையின் அளவுக்கு தக்கபடி ஒதுக்கி ஒவ்வொரு ஜில்லாவும் பயனடையுமாறு செய்ய வேண்டும்."

Sri S. KANDASWAMI GOUNDER :—"கனம் சபாநாயகர் அவர்களே, 1955–56-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தமிழில் தயாரித்துக் கொடுத்ததற்காக கனம் நிதி மந்திரி ஸ்ரீ சுப்ரமணியம் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 9–15 p.m.

"இந்த சபையில் தமிழைத் தவிர வேறு பாஷை தெரியாத அங்கத்தினர்கள் பலர் இருக்கிறார்கள். மற்றவர்கள் வேறு பாஷையில் பேசும் பொழுது, 'காது இருந்தும் செவிடு; கண் இருந்தும் குருடு' என்று சொல்லுகின்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். கனம் ராஜாஜி அவர்கள் இருக்கும்பொழுதே, 'தமிழ் மொழிதான் அரசாங்க மொழி ஆக வேண்டும்; அப்படிச் செய்தால் ராஜாஜி அவர்கள் நீடுழி காலம் வாழ்வார்கள்' என்று நான் சொன்னது, எல்லா அங்கத்தினர்களுக்கும் ஞாபகம் இருக்கலாம். அதை கனம் நிதி அமைச்சர் ஓரளவுக்கு நிறைவேற்றி விட்டார்கள். தமிழ் மாகாணம் பூராவுமே இதற்காக அவர்களை வாழ்த்தும் என்று நினைக்கிறேன். என் கண்ணையும் திறந்துவிட்டார். நான் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"நான் சேலம் ஜில்லா, பெண்ணாகரம் தொகுதியிலிருந்து வந்த எம்.எல்.ஏ. அந்தத் தொகுதியிலுள்ள குறைபாடுகளை இப்பொழுது சபை முன்பு எடுத்துரைத்தால், கனம் மந்திரி அவர்கள் அதைக் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

"நானிருக்கும் தொகுதி ஒரு வரண்ட பிரதேசம். மைசூர் பக்கம் சின்னாறு என்று ஒரு ஆறு ஓடுகிறது. பஞ்சப்பட்டியில் அணை கட்டுவதாக 50 அல்லது 60 வருடங்களுக்கு முன்பு ஒரு திட்டத்தை தயாரித்து, அதை அப்படியே நிறைவேற்றாமல் விட்டு விட்டார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் 30 மைல் சதுரமுள்ள ஒரு தாலூகாவுக்கு தண்ணீர் வசதி ஏற்படும். பன்முறை நான் இதைப்பற்றி இந்தச் சட்டசபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டத்தை சர்க்கார் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளவேண்டும். அதைச் செய்யாவிட்டால் என் மனம் சாந்தி அடையாது. இனிமேல் நான் இந்த சபைக்கு அடுத்த தேர்தலில் நின்று வரும் வாய்ப்புக் கிட்டாது. அப்படிக் கிட்டினாலும் அது எனக்கு தேவை

[Sri S. Kandaswami Gounder] [3rd March 1955

யில்லை. (சிரிப்பு.) நான் ஒரு விவசாயி. மற்ற சூழ் நிலை யெல்லாம் அறிந்தவன் அல்ல. என் தொகுதி சம்பந்தப்பட்ட குறைகளை எடுத்துச் சொல்வது என் கடமை.

" கனம் முதல் அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரிக்கு விஜயம் செய்த பொழுது, சின்னாறு திட்டத்தைப்பற்றி பொதுமக்கள் ஒரு மகசர் கொடுத்தனர். மந்திரி அவர்கள் அதை கலெக்டரிடத்தில் கொடுத்தார்கள். கலெக்டர் அந்த இடத்தைப் பார்வையிடுவதற்காகச் சில அதிகாரிகளை அனுப்பினார்கள். நானும் கூடப் போயிருந்தேன். அவர்கள் எல்லாவற்றையும் பார்த்த பிறகு, கூட வந்திருந்த என்ஜினியர், 100 அடி உயரமிருப்பதால் அதை எடுத்துக்கொள்ள முடியாது என்று சொன்னார். 'கிடையவே கிடையாது, 25 அடி உயரம்தான் இருக்கும்' என்று நான் சொன்னேன். 'பிளான்' போட்டுப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்; 25 அடி உயரம்தான் இருக்கும் என்று சொன்னார்கள். அவர்களுக்குள்ளேயே விவாதம் நடந்தது. அவர்கள் எல்லோரும் நான் வந்தது நலமாயிருந்தது என்று என்னைப் புகழ்ந்தார்கள். நான் எப்படியாவது திட்டத்தை நிறைவேற்றுவார்கள் என்று நம்பினேன். சென்ற 25-ம் தேதி கலெக்டர் ஒரு 'மீட்டிங்' கூட்டினார். நானும் போயிருந்தேன். மறுபடியும் 100 அடி உயரமிருக்கிறது என்ற பல்லவியையே பாடினார்கள். 'அரை மைல் பள்ளமாக உள்ள இடத்தைச் சொல்லுகிறீர்கள். வலது பக்கம் போனால் 25 அடிக்கு மேல் போகாது' என்று சொன்னேன். அந்தத் திட்டம் அப்படியே யிருக்கிறது. எங்கள் தொகுதியில் சரியான மழையே கிடையாது. சின்னாறு திட்டத்தை சர்க்கார் நிறைவேற்றினால் எங்கள் தொகுதியிலுள்ள மக்களுக்கு நன்மை ஏற்படும். அந்த ஆற்று ஜலத்தை பாப்பாரப்பட்டி மார்க்கமாக தர்மபுரம் தாலூகாவுக்கு பாய்ச்சல் ஏற்படும்படிச் செய்யலாம். கனம் மந்திரி அவர்கள் அவசியம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

" அடுத்தபடியாக விவசாயிகள் மீது வரி போட்டிருக்கிறார்கள் நமது சர்க்கார். ஓரளவுக்கு வரி போடவேண்டியதுதான். இருந்தாலும், சர்க்கார் போடும் வரிகள் எல்லாம் விவசாயிகளைத்தான் பாதிக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன் ஏழு, எட்டு வருட காலமாகவே, விவசாயிகள் மிகவும் மெலிந்து போயிருக்கிறார்கள். அவர்களை கடன் தொல்லை வேறு வாட்டுகிறது. அவர்கள் உழைப்பில் எறும்பு முதல் யானை வரை பங்கெடுத்துக் கொள்கின்றன. எத்தனையோ வரிகளை அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆட்டு வரி, மாட்டு வரி, கோழிக்கு வரி, இப்படி எத்தனையோ வரிகள். (சிரிப்பு.) விவசாயிகள் கடவுளை நம்பி வாழ்பவர்கள். வரண்ட பிரதேசத்தில் கொஞ்சம் மழை பெய்தாலும்கூட, கடவுளை அண்ணாந்து பார்க்கக்கூடிய நிலையிலிருக்கிறார்கள். மரமும் கடவுள், பாம்பும் கடவுள், எதுவும் கடவுள் என்று கும்பிடுகிறவர்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு, அவர்கள் பாடுபட்டு விளைவித்த தான்யத்தைக்கூட அப்பொழுது இருந்த சர்க்கார் வாங்கினார்கள். எப்படி வாங்கினார்கள்? அடித்தும், உதைத்தும் வாங்கினார்கள். சர்க்காருக்குக் கொடுத்தது போக, பாக்கி இருந்ததை சாப்பிட்டு விட்டுக் காலத்தைக் கழித்துவந்தார்கள். விவசாயிகளுக்கு நான் வரி போடக்கூடாது என்று சொல்லவில்லை. இரண்டு அணாத்தானே, சுலபமாகக் கொடுக்கலாம் என்று சிலர் சொல்லலாம். ஏற்கெனவே அவர்களால் வரிச் சுமையைத் தாங்க முடியவில்லை. இதை ஆட்சேபிக்காமலிருந்தால், நாளைத் தொழிலாளிகளும் விவசாயிகளும் 'விவசாயிகளின் மீது சர்க்கார் போட உத்தேசித்திருக்கும் வரியை நிறுத்த முயற்சி செய்தீர்களா' என்று என்னைத் தூற்றுவார்கள். சென்ற தேர்தலில் என்னுடன் போட்டி போட்ட நான்கு பேர்களும் நாலா பக்கங்களிலும் தூற்றுவார்கள். இதை எதிர்க்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லையே என்று கேட்பார்கள். பாப்பாரப்பட்டி சந்தை மார்க்கெட்டில் வரி வசூல் செய்வது ஒரு முறை கிடையாது. இந்த மார்கெட் சரியாக இல்லாததினால்
9–25 a.m. அரை மைல் தொலைவிலிருந்து வரி வசூல் செய்கிறார்கள். போர்டு மாட்டுவது கிடையாது. போர்டு இல்லாததினால் இஷ்டப் பிரகாரம் வரி

3rd March 1955] [Sri S. Kandaswami Gounder]

வசூல் செய்கிறார்கள். ஒரு அணா வாங்குவதற்கு பதிலாக 2, 3 அணா வசூல் செய்கிறார்கள். ரசீதும் கொடுப்பதில்லை. இதை கனம் மந்திரி அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

“ அடுத்தபடியாக பாப்பாரப்பட்டி யூனியன் மத்தியில் பெரிய பணக்காரர்தான் இருந்து வருகிறார்கள். இப்பொழுது சட்ட சபை எப்படி அமைந்திருக்கிறதோ அதேமாதிரியாகத்தான் அங்கு இருக்கிறது. அந்த ஊரில் சுகாதாரமே கிடையாது. நல்ல ரோடு வசதிகள் கிடையாது. வேறு சலுகைகளும் கிடையாது. அங்கு வாழ்பவர்களிடமிருந்து ஒன்றுக்கு இரண்டாக வரி வாங்குகிறார்கள். அறுபது வருஷ காலமாக ரோடு போட்டுக்கொடுக்கவில்லை. கனம் மந்திரி அவர்கள் இதையும் கவனித்து வேண்டிய வசதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ விவசாயிகளுக்கு மாடு வாங்குவதற்கும், கிணறு வெட்டுவதற்கும், இன்னும் எத்தனையோ காரியங்களுக்கும் சர்க்கார் கடன் கொடுத்து வருகிறார்கள். இன்னும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ அடுத்தபடியாக காட்டு இலாகாவிலே காடுகளை அழித்துவிடுகிறார்கள். குறைந்த சம்பளம் ஊழியர்களுக்குக் கொடுப்பதால் காடு அழிய ஏதுவாகிறது. இதை நிதி மந்திரி அவர்களும், விவசாய மந்திரி அவர்களும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ அடுத்தப்படியாக படிக்காத ஏழை மாணவர்கள் அனைவருக்கும் ஜாதி மத வேறுபாடின்றி சம்பளம் இல்லாமல் படிப்பதற்கு அரசாங்கம் வசதி செய்துள்ளார்கள். இதை நான் பாராட்டுகிறேன். கடைசியாக எனது கோரிக்கை எனது தொகுதியில் நீர்ப்பாசன வசதியும், மின்சார வசதியும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.”

* SRI S. S. KOLKEBAIL :—“ Mr. Speaker, Sir, to speak or not to speak is the question before me because when I read the Budget speech of the Hon. Minister for Finance from cover to cover, I find that he does not seem to think that there are two other districts in this State, namely, Malabar and South Kanara. Of course, when I talk about this, it may look as if I am a bit parochial in my outlook and rather linguistic in my mentality. But, that is not the case. These Ministers have taken an oath in the name of our sacred Constitution that they would not make any distinction between man and man, district and district and area and area. In spite of these oaths, I find that in the entire speech of the Hon. the Finance Minister and in the entire Budget proposals no mention is made of these two districts nor has any provision whatsoever been made for them. Hence, I was hesitating whether I should speak or not. 9–30 p.m.

“ This Budget has been described by one of the Congress M.L.As. as a Tamilnad Budget, but still, I think, it does not reach even the people of Tamilnad. It only helps certain ‘ groups ’ and certain vested interests and nothing more. All of us had read in the newspapers that the Congress at its Avadi Session has undertaken to legislate on a socialistic pattern and rule over this country in a socialistic manner. First, let me just refer to the Budget proposals or rather to the voluminous books circulated to us. Have we got a socialistic pattern here? If we compare the pay of the several Gazetted Officers with that of the Non-Gazetted Officers and other Second and Third Grade Officers, we find that there is no

socialistic pattern but only a capitalistic pattern in all its ugliness. For example, we find that the Inspector-General of Police draws Rs. 2,500 per mensem whereas a police constable draws only Rs. 30 per mensem. The Chief Secretary to the Government of Madras draws Rs. 3,750 per month whereas the Non-Gazetted Officer draws only Rs. 40 per mensem. I do not want to say whether this disparity in pay scale is a 'socialistic pattern' or a capitalistic pattern but I leave it to this House, Mr. Speaker, to decide whether Congress administrators have actually implemented the resolution which they had passed with so much of pomp and glory at Avadi.

"Sir, if there is one word in the English language that would properly describe this administration or rather the Congress administration, it is the word 'inept'. This administration has exhibited an ineptness in considering what is best for all the people, an ineptness magnified by its desire and programme to benefit some area, some groups—groups that ignore the increased power of the masses, the millions of farmers who provide the food and fibre, which create the basic wealth of this State—nay this nation. In what way this Congress administration has solved the most important problem of the day—the land problem? Even the Budget speech is silent about it. Tenancy legislation is being promised from a number of platforms. The Congressmen had stated that they are going to bring in tenancy legislation but, on the contrary, they have been postponing it. Whenever any interim legislation has been brought about, I find that the Congress Members in this House are unnecessarily making long speeches most probably with a view to gain some notoriety and newspaper publicity. Really, if these hon. Members have got any say or pull with the Ministers they should ask them to bring forward the tenancy legislation immediately. There is no other party that could successfully prevail upon these Ministers and therefore I would request the Congress legislators that if they could not prevail upon the Ministers at least to bring in this important land legislation they could very well resign and get out of this House. Somehow or other they have been postponing this burning question for the last so many years. Of course, pledges are nothing to them and they are observed more in their breach than in their fulfilment. It is nothing more than that. They make these pledges only during elections and somehow succeed in getting elected. Our people, who are unsophisticated, believe in these promises and cast their votes for them."

Sri T. ANANTA PAI :—"Sir, I rise on a point of order. The hon. Member Sri S. S. Kolkebail said that those who have succeeded in the elections have adopted all sorts of methods. Does it apply to the hon. Member also, Sir?"

Sri S. S. KOLKEBAIL :—"Sir, I am sorry for my hon. friend Sri T. Ananta Pai. He came to this House with lot of butter and he also hoped that he can obtain some amenities to

3rd March 1955] [Sri S. S. Kolkebail]

his district by buttering the Ministers; but unfortunately the butter he brought got melted under the scorching sun of ' Kumbakonam '. It cannot be helped, Sir."

Sri S. PANCHAKSHARAM :—" Sir, may I know whether it is in order to say that the hon. Member Sri T. Ananta Pai came with some butter to this House and also whether the use of the word ' Kumbakonam ' is parliamentary? "

Mr. SPEAKER :—" This expression has no meaning and Kumbakonam is only the name of a place and it is quite parliamentary to use that word."

Sri S. S. KOLKEBAIL :—" Sir, I merely said that Mr. Pai's butter got melted long ago under the scorching sun of ' Kumbakonam '."

Mr. SPEAKER :—" Let not the hon. Member explain further."

Sri S. S. KOLKEBAIL :—" If only, the hon. Members, who objected, know the latitude and the longitude of ' Kumbakonam ' they would understand what I am saying. Coming to the socialistic pattern of society or the resolution recently passed at Avadi I would only say that it is not a socialistic pattern but the ' Avadi Pattern ' —the greatest show on the earth—that we are having in this Budget. Of course, at Avadi they shouted that hereafter the Congress Legislation policy will be dynamic, forward-looking and socialistic. But in the Budget, I find that there is nothing which can be called either dynamic or forward-looking. On the contrary, these proposals are reactionary and as dynamic as ' dodo ', as forward-looking as ' yesterday ' and I think as somebody said some centuries ago that one can fool some people for all time, all people for some time and not all people for all time. The Congressmen can go on making promises and hoodwink our people for a time and win one or two more elections but a day will come when they will have to rue for it.

" Since 1952, we in this Assembly have passed as many as 67 Acts and none of them for the good of the people except three or four Acts like the Tanjore Tenants and Pannaiyals Protection Act, The Malabar Tenancy (Amendment) Act, the Indebted Agriculturists (Repayment of Debts) Act and the Slum Improvement Act. There is no other Act which would help the building of a Welfare State."

Sri T. ANANTA PAI :—" What about the South Kanara Tenants Protection Act? "

Sri S. S. KOLKEBAIL :—" In the beginning of my speech, I said that there was nothing in the Budget proposals either about South Kanara or Malabar. Recently, I have read in the papers a speech made by no less a person than our Chief Minister that a port at Nagapattinam or at some other place in Tamilnad was necessary.

[Sri S. S. Kolkebail] [3rd March 1955

The Chief Minister has apparently forgotten that there are very good natural ports still undeveloped on the West Coast, that is, in Malabar and South Kanara. Malpe in South Kanara has been recommended by very many great engineers who have visited that place as a port capable of becoming one of the biggest and best ports on the West Coast, but unfortunately, neither this Government which represents our district nor the Central Government are taking any action in this regard. Even the Chief Minister of this State does not say anything about the possibility of having a port on the West Coast and hence, I ask Sir, where is the chance for us to get anything done either by the Central Government or this Government.

9–40 p.m. " Sir, if we go through the speech of the Hon. Minister for Finance made while introducing the Budget, the speech of the Governor made last year in this House and also the speech of the Chief Engineer for Electricity of this State—who is drawing a salary of Rs. 1,500 per mensem towards which I and the people of my district also contribute—they all state that this State has very nearly exhausted all the hydro-electric resources, and that there is no feasibility of executing any more hydro-electric projects. What an amount of ignorance they are displaying? If only the Chief Electrical Engineer has visited the West Coast districts he would have found several rivers flowing down the high Western Ghats which could all be dammed for the purpose of producing electrical energy, which suffice not only to meet the requirements of the districts on the West Coast but will be sufficient to flood-lit the whole of India. With this sort of parochial mental attitude or temperament, it is not worthwhile for us to continue or to remain in this State any more. The earlier we quit this State the better for us. We may say that we are against ' Balkanization ' of India but when we find there is no trust, and that we are not properly and decently treated though we also contribute to the coffers of the Government large sums of money as taxes, it is not safe for us to remain here any longer. During the last 60 to 90 years nothing has been done to my district and even during the regime of the Congress Government, which has been in power for the last nine years, the same state of affairs continue. We contribute to the coffers of this State by way of taxes to the tune of Rs. 130 to Rs. 150 lakhs and we constitute about 18 lakhs out of a total population of 3 crores in this State. From the point of view of the population and the amount of taxes collected, we expect better treatment. Now let us take up the Budget speech of the Hon. the Finance Minister and its proposals—we find that about Rs. 86 crores had been allotted under the Five Year Plan for the development of this State and out of that 86 crores not even a pie had been expended in South Kanara district under the so-called Five-Year Plan. We never felt the impinge of Five-Year Plan.

" Again Sir, about Rs. 6 crores and odd amount has been set apart during the Plan period for being spent both on the Community Projects and National Extension Service schemes, etc., and out of this amount a sum of Rs. 70 lakhs or so had been allotted

3rd March 1955] [Sri S. S. Kolkebail]

to South Kanara district. But the officers-in-charge of these schemes on account of the 'control' exercised from Madras, have been able to spend so far only about Rs. 9 lakhs and even this amount had been spent on petrol and salary of the officers, and the people are not benefited to any extent at all."

MR. SPEAKER :—"The hon. Member has got only one minute more to finish his speech."

SRI S. S. KOLKEBAIL :—"Sir, as a result of interruptions I have lost three or four minutes and I require a little more time. A number of rivers are flowing down the Western Ghats through my district and they require to be bridged at many places. My district is the only district in this State where one can find so many ferries. There have been so many representations, so many proposals before the Government for constructing bridges across them but nothing has been done so far. I am told that yesterday or the day before yesterday one of the 'new converts' to the Congress, Sri P. B. K. Raja, stated—I think he was briefed to say by some Minister—that so many things had been done for South Kanara district . . ."

THE HON. SRI B. PARAMESWARAN :—"On a point of order, Sir, no Minister would ever think of briefing any hon. Member . . ."

SRI S. S. KOLKEBAIL :—"My friend should understand the word 'brief' in the proper sense."

MR. SPEAKER :—"The hon. Member has used that word in a particular sense."

SRI S. S. KOLKEBAIL :—"Whatever may be the sense, we are entitled to get information from the Minister and it tantamounts to briefing. Suppose I ask you, Sir, to give me some information on a particular matter and if you give it, will it not amount to briefing?"

MR. SPEAKER :—"The word 'brief' used now carries a different meaning."

SRI P. RAMAMURTHI :—"I would like to get a ruling from you, Sir, on this very question. After all, the word 'brief' in the English language means only to give instructions. It is perfectly open for any Member of this House to give instructions to somebody else to speak in a particular way on a particular question. After all Ministers happen to be Members of some party and it is certainly open to them to ask a Member of their party to speak in any particular way on any question. It is in that context that the word 'brief' is used and there is nothing wrong."

MR. SPEAKER :—"I am not saying it is unparliamentary. The context in which it was used was wounding to the Hon. Minister."

[3rd March 1955

SRI P. RAMAMURTHI :—" The Hon. Minister should be more thick-skinned in these matters."

SRI S. PANCHAKSHARAM :—" There is an insinuation behind it."

(SRI S. S. Kolkebail rose to speak.)

MR. SPEAKER :—" The hon. Member's time is over. I call Sri Nalla Gounder to speak."

9–46 p.m. *SRI P. S. NALLA GOUNDER :—" கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த வரவு செலவு திட்டத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இந்த திட்டமானது பழைய முறைப்படி தயாரிக்கப்படாமல் முன்னேற்றத்துடன் நல்ல முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது. எதிர்கட்சி அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள், ஆவடி காங்கிரஸினுடைய வாசனை இதில் இல்லை என்று. சோஷலிஸ மனப்பான்மை கொண்டுதான் இது தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து வருஷ திட்டத்தை அனுசரித்து கிராமங்கள்தோறும் அவைகளை நல்ல முறைக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்துடன் காந்திய மனப் பான்மையோடு இது தயாரிக்கப்பட்டிருக்கிறது.

" சமுதாய அபிவிருத்தி திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல அபிவிருத்தி திட்டம்போல பல திட்டங்கள் இந்த இரண்டு மூன்று வருஷ காலமாக நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கிராமங்களிலும் பல நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன. பல கிராமங்களில் பாடசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் அமைத்து இன்னும் ரோடுகள் போட்டு பல நல்ல காரியங்களையும் செய்திருக்கிறார்கள். அதிகமாக டவுன்களைவிட கிராமங்களுக்குத்தான் இதனால் அதிகப்படியான பலன் உண்டு.

" நமது நாட்டிற்கு அவசியமான நீர்பாசனம், கல்வி, மின்சாரம், குடி தண்ணீர் வசதி முதலிய முக்கியமான விஷயங்களில் அதிகம் கவனம் செலுத்தி அதிகப்படியான தொகையும் செலவழிக்க திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களுக்கு மட்டுமல்லாமல் சில முனிசிபல் டவுன்களுக்கும் தண்ணீர் வசதிக்காக திட்டமிடப்பட்டிருக்கிறது. கோபிசெட்டிபாளையம் முனிசிபாலிடியில் குடிதண்ணீர் கஷ்டம் மிகவும் அதிகம். அதை நீக்குவதற்கு குடிதண்ணீர் விநியோக திட்டம் இந்த பட்ஜெட்டில் சேர்க்கப்பட்டிருப்பதற்கு எங்கள் தாலூகா வாசிகளின் சார்பாக கனம் நிதி மந்திரி அவர்களுக்கும், மற்ற கவர்ன்மெண்டார் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" ஐந்நூறு ஜனத் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமங்களிலும் ஒரு பாடசாலையை அமைக்கவேண்டும் என்ற ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஏழை மாணவர்களுக்கு மூன்றுவது படிவம் வரையில் இலவசப் படிப்புச் சொல்லிக்கொடுக்கவேண்டுமென்ற ஒரு திட்டம் இப்பொழுது கொண்டுவரப் போவதாகத் தெரிகிறது. இதை நாங்கள் ரொம்பவும் வரவேற்கிறோம். ஆகவே இதைப்போன்ற பல விஷயங்களில் நல்ல திட்டத்தைக் கொண்டு வருவதால் இது ஒரு நல்ல அறிகுறி என்று நினைக்கிறேன். ஆகவே இந்த பட்ஜெட் திட்டம் ஒரு நல்ல திட்டம் என்றே சொல்லவேண்டும். கிராமங்களில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம், தேசீய அபிவிருத்தி திட்டம், சமுதாய அபிவிருத்தி திட்டம் முதலிய திட்டங்கள் மூலம், பாடசாலை வசதிகளும், ஆஸ்பத்திரி, ரோடுகள் போன்ற நல்ல விஷயங்கள் பல நடைபெற்று வருகின்றன. கிராமங்களில் ஏற்படுத்தப்படும் இவைகளை யார் பராமரிக்கப்போகிறார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. இவைகளை பராமரிப்பது ஜில்லா போர்டா அல்லது கவர்ன்மெண்டா என்ற ஒரு பிரச்னை இருந்து வருகிறது. பராமரிப்பு விஷயத்தில்

3rd March 1955] [Sri P. S. Nalla Gounder]

அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். அரசாங்கம் இதில் கவனம் செலுத்தாவிட்டால் இப்பொழுது செய்துள்ள காரியங்கள் வியர்த்தமாக செய்ததாக முடியும்.

"மேலும் நமது அரசாங்கம் கூட்டுறவு ஐக்கிய சங்கத்திற்கு அதிக சலுகை காட்டுவதாயிருக்கிறது. சர்க்கரை, வெங்காயம் முதலிய விளை பொருள்கள் வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு கூட்டுறவு சங்கங்களுக்கும் பர்மிட் கொடுக்க வேண்டுமென்ற யோசனைகள் இருந்து வருவதாக தெரிய வருகிறது. சங்கங்களுக்கு பர்மிட் கொடுப்பது முதலில் கவனிக்கப்படவேண்டும். தனிப்பட்டவர்களுக்கு அந்த சலுகை முதலில் கொடுக்கப்பட்டு கடைசியாக அது காலாவதியாகப் போகும் தருவாயில் சங்கங்களுக்கு கொடுக்கப்படுகிறது. தனிப்பட்டவர்களுக்கு முதலில் பர்மிட் கொடுப்பதால் சங்கங்கள் பயன் அடைய முடியாமல் போகிறது. அதனால் கஷ்டத்திற்கும் உள்ளாகியிருக்கின்றன.

"நமது மாகாணத்தில் நீர்ப்பாசன வசதிக்கு என்று அனேகம் ரூபாய் ஒதிக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருஷத்திற்குள் பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் எடுத்து நடத்தப்பட்டிருக்கின்றன. அதில் லோயர் பவானி திட்டமொன்று. அது நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு சீக்கிரமாக கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதில் சில வாய்க்கால்களில் தண்ணீர் பாயக் கூடிய அளவில் இல்லை. ஒவ்வொரு கிளை வாய்க்கால்களின் கோடியிலும் சுமார் 25 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய (கொப்பு) சிறிய வாய்க்காலை குடியானவர்களே தங்களுக்குள் முடிவுசெய்துகொண்டு வெட்டிக்கொள்ள வேண்டுமென விடப்பட்டுள்ளது. அதனால் குடியானவர்களுக்குள் கலவரம் ஏற்படுகிறது. மேலும் குடியானவர்கள் தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சும் நேரத்தை நிலங்களின் விஸ்தீரணத்தை அனுசரித்து மணிக் கணக்கில் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் அதைப் புரிந்து கொண்டு தண்ணீரை பகிர்ந்துகொள்ள முடியாமல் சண்டையிட்டுக்கொள்கிறார்கள். ஸ்தல அதிகாரிகள், குடியானவர்கள் தண்ணீர் பிரித்துக்கொள்வதில் உதவிசெய்து அவர்களுக்குள் சண்டை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"நமது தமிழ் மாகாணத்தில் பெரிய திட்டங்களை விட்டுவிட்டு சிறிய திட்டங்களை எடுத்து நடத்த முன்வரவேண்டும். அவ்விதம் சிறிய குளங்களையும், ஏரிகளையும் எடுத்து சீர்திருத்தம் செய்ய முன்வந்தால் சீக்கிரத்தில் நல்ல பலனைத் தரும். முன் காலத்தில் கிராமங்களில் இருந்த குளம், குட்டைகள் பாழடைந்து கெட்டுப்போய் இருக்கின்றன. அவ்விதம் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்றவைகளை புள்ளி விவரம் எடுத்து சீக்கிரம் சீர்திருத்தம் செய்து அவைகளை உடனே நல்ல முறைக்குக்கொண்டு வந்தால் தண்ணீர் வசதி இன்னும் அதிகமாக பெருகும்.

"நமது நிதி மந்திரி அவர்கள் பட்ஜெட்டில் கிணறுகள் வெட்டுவதற்கு என்று சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். குளங்களை வெட்டி சீர்திருத்தம் செய்தால் அதில் அதிகப்படியாக தண்ணீர் நிற்க வசதி ஏற்படும். அதனால் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் லோயர் பவானி வாய்க்கால்கள் ஓடும் இடங்களில் உள்ள கிராமங்களில் ஓரம் எடுத்து தண்ணீர் தேங்கி நிற்கிறது. அங்கு தண்ணீர் தேங்குவதால் மலேரியா என்ற ஜுரம் பரவ இடம் ஏற்படுகிறது. அங்கு நிற்கும் தண்ணீர் வெளியில் போவதற்கு வசதியில்லை. அதனால் தண்ணீர் வெளியே போவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்து இந்த மாதிரியான மலேரியா போன்ற வியாதி வராமல் இருக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ரோடுகளின் வழியாய் இந்தத் தண்ணீர் ஓடுகின்றன. அங்கு பாலம் கிடையாது. அதன் காரணமாக ரோடுகளில் பாசம் பிடித்து வழுக்கல் உண்டாகிறது. அந்த வழியாகப் போகும் மனிதர்களும், கார்களும் வழுக்கி கீழே விழ ஏதுவாக இருக்கிறது. அவ்விடங்களில் பாலங்கள் கட்டவேண்டியது அவசியமாய் இருக்கிறது. அப்படிப் பாலங்கள் கட்டினால் தான் பொது ஜனங்களுக்கு சௌகரியமாய் இருக்கும்.

[Sri P. S. Nalla Gounder] [3rd March 1955

"லோயர் பவானி வாய்க்கால்கள் வெட்டுவதற்கு முன்னால் நடைபாதைகளாய் இருந்தவைகள் இப்பொழுது வடிவாய்க்கால்களினால் துண்டிக்கப்பட்டு ஜனங்கள் நடப்பதற்கு இடஞ்சலாய் இருக்கின்றன. அதிக தூரம் சுற்றிப் போகவேண்டியிருக்கிறது. அவ்விடங்களில் நடப்பதற்கு சிறிய நடைபாதை, பாலங்கள் கட்டவேண்டும். மழையின் காரணமாக மலைகளிலிருந்து பள்ளத்தின் வழியாக வரும் தண்ணீரை அந்தியூரில் குளத்தில் தேக்கி விவசாயத்திற்கு உபயோகப்படுத்திக்கொண்டு வந்தார்கள். மழை அதிகமாய்ப் பெய்யும் காலங்களில் அதிகப் பிரவாகம் ஏற்பட்டு பள்ளத்தின் கரை உடைந்து தண்ணீர் அந்த அந்தியூர் குளத்திற்குப் போவதில்லை. தண்ணீர் வேறு வழியாக ஆற்றிற்குப் போய்விடுவதால் விவசாயிகளுக்கு உபயோகப்படாமல் சேதம் அடைகிறது. நமது கவர்ன்மெண்டு இரண்டு மூன்று தடவைகள் 20 அல்லது 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்து கரையைக் கட்டினார்கள். சரியான முறையில் அந்தக் கரையைக் கட்டாததால் பணம் வீணாகிவிட்டது, மறுபடியும் உடைந்துபோய்விட்டது. உடைந்த கரையை நன்றாகக் கட்டி தண்ணீர் வீணாகாமல் விவசாயத்திற்கு பயன்படச் செய்யவேண்டும்.

"மேலும் பவானி தாலூக்காவில் அம்மாப்பேட்டை, அந்தியூர் போகக் கூடிய ரஸ்தாவில் சித்தாறு இருக்கிறது. அதற்குப் பாலம் இல்லாததால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதற்குப் பாலம் கட்ட வேண்டும்.

"அதோடு லோயர் பவானி ஏரியாவில் தோட்டக் கிணறுகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கில்லையென்று கவர்ன்மெண்டார் முதலில் சொல்லியிருந்தார்கள். பிறகு இன்ஜினீயர், மற்றும் சில அதிகாரிகள் ஆகியோர் ஒன்றுகூடி ஒரு மகாநாடு நடத்தி மின்சார மோட்டார் வைத்துக்கொள்ளலாமென்ற தீர்மானத்திற்கு வந்தார்கள். ஆனால் அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அது சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டால் நலமாக இருக்கும்.

"மேலும், இப்பொழுது மின்சார பம்புகள், வைத்துக்கொள்வதற்கு கொடுக்கவேண்டிய தொகையை முன்பணமாகவே கொடுக்கவேண்டியிருக்கிறது. அதில் தண்ணீர் இறைத்தாலும், இறைக்காவிட்டாலும், மின்சாரத்தைச் செலவு செய்தாலும், செய்யாவிட்டாலும் அந்தப் பணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றிருக்கிறது. இது சரியல்ல. மழை இன்மையால் கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தால் மின்சாரம் உபயோகப்படுத்தாதவர்களிடமிருந்து பணம் வசூலிக்காமலிருக்கும்படி செய்ய வேண்டும்.

"அடுத்தபடியாக தீர்வையில் ரூபாய்க்கு இரண்டு அணு சர்சார்ஜ் விதிக்க சர்க்கார் திட்டமிட்டுள்ளது. தற்கால நிலைமையில் விவசாயிகள்மேல் வரி விதிப்பதை நன்றாக சிந்தித்துதான் வரிவிதிக்கவேண்டும். எங்கள் பகுதியில் பருவ மழை சரியாக இல்லாததின் காரணமாக குடியானவர்களுடைய வரும்படி மிகக் குறைந்து போய்விட்டது. கண்ட்ரோல் காலத்தில் வேறு தொழிற் செய்தவர்கள் பணம் சம்பாதித்தார்கள். ஆனால் குடியானவர்கள் நன்மை அடையமுடியவில்லை. அவர்கள் கீழான நிலையிலேயே இருக்கிறார்கள். அதோடு இப்பொழுது கல்வி வரி, நிலவரி, மரணவரி 500-க்கு மேல் கந்தாயம் கொடுப்பவர்களுக்கு விசேஷ வரி எனப் பல வரிகள் போட்டுக் கொண்டிருக்கிறோம். அபிவிருத்தி வரி வேறு போடப்படுகிறது. ஆகவே, இந்தப் புது வரி போடும் யோசனையைப் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அந்தியூரில் புதுக்காடு என்ற ஊர் இருக்கிறது. 1946-ம் வருஷத்தில் சுமார் 2,500 ஏகரா நிலத்தை 368 பேருக்குப் பிரித்துக் கொடுத்து விவசாயம் செய்யச் சொன்னார்கள். சுமார் 10 வருஷ காலம் ஏழை விவசாயிகள் அந்த பூமிகளை பண்படுத்தி கிணறுகள் வெட்டி நல்ல நிலமைக்குக் கொண்டு வந்துள்ளார்கள். அவர்கள் அந்த நிலங்களிலேயே வசித்தும் வருகிறார்கள். அவர்களுக்கு வேறு நிலங்களோ

3rd March 1955] [Sri P. S. Nalla Gounder]

வீடோ கிடையாது. அந்த இடத்தை முன்னுள் மந்திரிகள் கனம் சஞ்சீவி ரெட்டி, கனம் வி. சி. பழனிசாமிக் கவுண்டர், கனம் நா கண்ண கவுடா, தற்கால ரெவின்யூ மந்திரி கனம் மாணிக்கவேலு நாயக்கர் முதலியவர்களால் நேரில் பார்வையிடப்பட்டு அந்த பூமியை 10 வருஷ காலமாக உழுத விவசாயிகளுக்கே பட்டா செய்ய உத்திரவு போடப்பட்டது. ஆனுல் சில அதிகாரிகளுக்கு அது பிடிக்காததால் அந்த உத்திரவை ரத்து செய்து கோவாபரேட்டிவ் காலனிகளாக மாற்றவேண்டும் என மறுபடி உத்திரவு பிரப்பிக்கப்பட்டுள்ளது. அது மிகவும் சரியல்ல. பாடுபட்டு பூமியை சீர்திருத்திய ஏழை விவசாயிகளுக்கே பட்டா செய்ய உத்திரவு பிறப்பிக்கவேண்டும்.

" நல்ல முறையில் தயாரித்துள்ள இந்த வரவு செலவு திட்டத்தை ஆதரித்து வரவேற்று என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன் வணக்கம்."

* **Sri A. VELOO :—"** கனம் சபா நாயகர் அவர்களே, 1955–56-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை முதன் முதலாகத் தமிழிலும் மொழி பெயர்த்துக் கொடுத்திருப்பதைக் குறித்து இச்சபை அங்கத்தினர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்கள், நானும் எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் பதினுன்கு வயதுக்கு உட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அளிக்க அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து பத்து ஆண்டுகளுக்குள் முயற்சிக்க வேண்டும் என்று உள்ளது. நாம் சுதந்திரம் அடைந்து ஏழு ஆண்டுகளுக்குமேல் ஆகியும் கல்வித்துறையில் நாம் முன்னேறவே இல்லை. இந்த ஆண்டு முதற் கொண்டு, மதம், இனம், ஜாதி என்ற பாரபட்சமில்லாமல் ஏழ்மை ஒன்றை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு எல்லோருக்கும் மூன்ருவது பாரம் (எட்டாவது வகுப்பு) வரையில், இலவசமாகச் சம்பளம் இன்றி கல்வி கற்கச்சலுகை அளித்திருப்பது மிகவும் பாராட்டுதலுக்குரிய காரியமாகும். கல்வி பரவாத இடங்களில் கட்டாயக் கல்வி முறையை **(Compulsory Education)** அமுல் நடத்த தக்கவழி வகைகள் வகுக்கபடவேண்டும். கல்வி ஒரு சமூகத்தின் முதுகெலும்பு போன்றது. கல்விதான் மனித வாழ்க்கையை வளமாக்குகிறது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கல்வியை இந்நாட்டில் பரப்புவதற்கும் பணி புரிபவர்கள் ஆசிரியர்கள். இவர்களுடைய வறுமை நிலைமையை நாம் போக்குவதற்கு முன்வராத வரையில் கல்வியின் தரத்தையும் மக்களுடைய வாழ்வில் வளத்தையும் எந்த வகையிலும் உயர்த்த முடியாது. ஆகவே ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்த முயற்சிக்கவேண்டும்.

" நம் நாடு விவசாய நாடு. நூற்றுக்கு எண்பது பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள். விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த நாம் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்தியாவின் உயிர் நாடியான கிராமங்கள் வாழ்க்கை செழிக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையிலே சமுதாய நலத் திட்டங்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவைகளை அமைக்கப்பட்டிருப்பதோடு அவற்றின் நடைமுறைக்காக வரவு செலவு கணக்கிலும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பல திட்டங்களின் மூலம் 1. கிராம மக்களுக்கு போக்கு வரத்துக்கு ஏற்ற பாதை, 2. சுகாதார நிலை முன்னேற மருந்து மருத்துவமும், 3. குடிப்பதற்கும் குளிப்பதற்கும் நல்ல நீர் நிலையங்கள், 4. தபால், மின்சாரம் போன்ற வசதிகளும் கிராம மக்கள் அன்றாடச் செய்திகளை அறிந்துகொள்ள வசதியும் போதிய கல்வி யறிவும் இத்திட்டங்களின் மூலம் அளிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இங்கே முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டியது யாதென்ருல் ஏழைகளும் ஏழை ஹரிஜனங்களும் கவனிக்கப்படாமலேயே விட்டுவிடப்படுகிருர்கள் **என்பதை** இச்சபையின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன். இங்கு ஹரிஜனங்களைப் பற்றி பேசுகிறவர்கள் அவர்கள் அடையும் உண்மையான துன்பங்

களையே எடுத்துக் கூறுகிறார்கள். எடுத்துச் சொல்லுகின்ற முறையிலே—ஆத்திரமடைந்து பேசுவதால், வேகமாகப் பேசி விடுகிறார்கள்: அவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற முறை தவறே ஒழிய, உண்மையிலேயே கிராமப் புறங்களிலுள்ள மக்கள் இன்னல்களும் தொல்லைகளும் விவரிக்க முடியாத வைகளாகும். ஏழைகள் படுகின்ற கஷ்டங்களும் அவர்களுக்கு இழைக் கப்படும் அநீதிகளும் தவிர்க்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் இச்சபை முன்பு கூறப்படுகின்றது. ஆனால் உண்மை நிலையை எடுத்துக் கூறும் போது வருத்தமும் ஆத்திரமும் சிலர் அடைகிறார்கள். 'வயிறார உண்ட பேர் வாழ்த்துவதும் நொந்தபேர் திட்டுவதும் எங்கள் உலகம்' என்றார் தாயுமானார். ஆகவே, கஷ்டப் படுகிற மக்கள் தங்கள் கஷ்டங்களை எடுத்துக் கூறும்போது ஆத்திரமடைவதில் பயனில்லை. கஷ்டங்கள்தான் நிவர்த் திக்கப்படவேண்டும். சில நாட்களுக்கு முன்பு, இச்சபையில், கனம் இரத் தினம் அவர்கள் ஹரிஜனங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றிக் கூறியபோது, கனம் நிதி அமைச்சர் அவர்கள் அவசரப்பட்டு, 'ஹரிஜனங்கள் என்பதற்காக எதைவேண்டுமானாலும் பேசலாம்—எதை வேண்டுமானாலும் செய்யலாம்' என்று நினைப்பது தவறு என்று கூறினார்கள். உண்மை யில் அங்கு நடந்ததைப்பற்றி சரிவர விசாரணை செய்யாமலேயே கூறி விட்டார். இப்படி பொறுப்பான பதவியிலுள்ள மந்திரி கூறலாமா? ஹரிஜனங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்றால் அதைப் பற்றி விசாரிக் காமல் ஆத்திரப்படுவதில் பிரயோசனமில்லை. உதாரணமாக கனம் இராஜ கோபாலாச்சாரியார் அவர்கள் காலத்தில் ஹரிஜனப் பிள்ளைகளுக்குக் கல்வி நிலையங்களில் ஆரம்பத்தில் அவர்கள் வந்து சேரும் வரையில் 15 சதம் ஒதுக்கிவைக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்கள். பள்ளிக்கூடங் களில் மற்ற பிள்ளைகளுக்கு இடம் கிடைக்காமல் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்தைக் கொடுக்கும்படி கேட்டால் தலைமை ஆசிரியர்கள் சர்க்கார் உத்தரவுபடிதான் நடக்க வேண்டும்—என்று கூறி ஹரிஜனப் பிள்ளைகளுக்குச் சலுகை காட்டி வந்தார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் 'அரசன் எப்படியோ அப்படியே குடிகளும்' என்கிறார்களே அது போல் இராஜாஜியின் அன்பின் காரணமாக பல சலுகைகளும் கிடைத்தன. ஆனால் கனம் நிதி மந்திரி அவர்கள் ஹரிஜனப் பிரச்னையைப் பற்றி வேண்டா வெறுப்போடு கூறுவாரேயானால் அரசாங்கத்திலுள்ள மற்ற சிப்பந்தி களும் கீழ்த்தர உத்தியோகஸ்தர்களும் ஹரிஜனங்களிடத்தில் எவ்வாறு நடந்துக் கொள்ளுவார்கள் என்பது நான் கூறாமலேயே தெளிவாகிறது.

"சபா நாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் எவ்வளவு வெறுப்புணர்ச்சியோடு சொல்லுகிறார்களோ அதைப்போலத்தான் ஹரி ஜன நல வேலைகளைச் செய்கிறவர்களும் அவர்களுடைய பொறுப்பை தட்டிகழிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு ஸ்தல அபிவிருத்தி, தேசீய அபிவிருத்தி இவைகள் நடக்கும் இடங்களில் ஹரி ஜனங்களுடைய நிலைமையைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். என்னு டைய தொகுதியிலே, தேசீய விஸ்தரிப்புத் திட்டம் அமுலிலிருந்து வரு கிறது. இத்திட்டத்தின்படி கிராமங்களுக்கு அத்தியாவசியமான பாதை, குடி தண்ணீர் வசதிபோன்றவைகளுக்கு செலவாகும் மொத்தத் தொகையில் பாதிப் பணம் கிராமவாசிகள் கொடுக்க முன் வந்தால்தான் அந்த வேலைகள் செய்து கொடுக்கிறார்கள். ஏழைகளாகிய ஹரிஜனங் கள் தங்களுக்கு பாதை, கிணறு, மதகு முதலியவைகள் வேண்டு மென்றுஜில்லா ஹரிஜன நல அதிகாரிக்கு மனுச் செய்து கொண்டால், அவர் **(Development Officer)** டெவலெப்மெண்ட் ஆபீஸருக்கு அனுப்பி விடுகிறார். டெவலெப்மெண்ட் ஆபீஸர் 50 சத வீதம் செலவாகும் தொகையில் கொடுப்பதற்கு முன் வந்தால்தான் வேலை செய்து தரப்படும் என்று கூறி விடுகிறார். ஆகவே, ஹரிஜனங்கள் ஹரிஜன நல இலாகா வாலும், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தாலும் உதவிபெற முடியாமல் போய்விடுகிறது. இன்னும் சில இடங்களில் டெவலப்மெண்ட் ஆபீஸருக்கு கிராமத்திலுள்ள ஆசிரியரைக்கொண்டு மனு எழுதினாலோ 'நீர் உமது வேலையைக் கவனித்துக்கொள்ளும்' என்றும் மனு எழுதக்கூடாதென்ற முறையிலே பயமுறுத்துகிறார். கிராமத்தில் படித்தவரான ஆசிரியரிடத்திலே

3rd March 1955] [Sri A. Veloo]

மனு எழுதாமல் வேறு யாரிடத்தில் ஏழை ஹரிஜனங்கள் போய் எழுத முடியும்? தேசீய விஸ்தரிப்பு திட்டப்படி ஒரு வேலையைக் கவனிப்பதற்கு முதலில் அபிவிருத்திக் கமிட்டி சிபார்சு செய்யவேண்டும். அபிவிருத்தி கமிட்டியிலோ படிக்காதவர்களையும் தங்களுக்கு வேண்டியவர்களையும் நியமித்திருக்கிறார்கள். கமிட்டி நியமனம் பற்றி டெவலெப்மெண்ட் ஆபீஸர், கலெக்டர் முதலியவர்களிடத்தில் கூறினால் கவனிப்பதாகக் கூறுகிறார்களே தவிர பயன் கிடைப்பதாக இல்லை. ஹரிஜனங்களுக்கும் உதவியும் கிடைப்பதில்லை. வீடுகள் கட்டுவதற்குக் கடன் கொடுப்பதாக உத்தரவுபோட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவுப்படி, தேசீய விஸ்தரிப்புத் திட்டம் நடக்கும் இடங்களில் ரூ. 250 கடன் வாங்கினால் 5 வருஷங்களிலும் ரூ. 500 வாங்கினால் 20 ஆண்டுகளிலும் ரூ. 750 வாங்கினால் 25 ஆண்டுகளிலும் திருப்பிக்கொடுக்கலாமென்றும் இருக்கிறது. இச்சபையில் அன்று கனம் விவசாய மந்திரி 'கடன் கொடுப்பதில் யாருக்கும் வித்தியாசம் காட்டமுடியாது எல்லோருக்கும் ஒரேவிதமான சட்டம்தான் என்று குறிப்பிட்டார்கள்' இந்தக் கடன் வாங்குவதற்குள்ள நிபந்தனையைக் கவனிப்போமானால் கடன் வாங்கும் தொகையினளவைப் போல் ஒன்றே கால் மடங்குக்கு ஜாமீனும் வீடுகட்டும் இடமும் கட்டப்படுகின்ற வீடும் ஜாமீனாகத்தரப்படவேண்டும் என்று கூறப்படுகிறது. இதை மந்திரி அவர்கள் நன்றாகச் சிந்தனை செய்து பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நிபந்தனைகளின்படி எந்த ஹரிஜனனாவது நன்மைபெற முடியுமா? இந்த உத்தரவு விளம்பரத்திற்காகவா அல்லது வட்டளவில் இருக்கவேண்டும் என்பதற்காகவா என்பதை அறிய விரும்புகிறேன். ஹரிஜனங்களுக்கு வீடுகட்டுவதற்குக் கடன் கொடுத்துதவுவது உண்மையான நல்ல எண்ணத்தோடு இருந்தால் ஹரிஜனங்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக விதிவிலக்குச் செய்தாலொழிய இக்கடன் கொடுக்கும் உத்தரவு மூலம் யாதொரு பயனும் இல்லையென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஹரிஜன நல இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை தேசீய விஸ்தரிப்புத் திட்டம் நடக்கும் இடங்களில் 50 சத விகிதத்தைக் கொடுக்கும்படி செய்து ஹரிஜனங்களிடமிருந்து பணம் வாங்காமலேயே பாதை, கிணறு முதலியவைகள் அமைத்துக்கொடுக்க உத்தரவு பிரப்பிக்க வேண்டும்.

"இன்னும் சில இடங்களில் ஹரிஜனங்கள் குடி தண்ணீர் இல்லை என்று மனுச் செய்து கொண்டால் அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் இப்போது 'பூஞ்சோலை', தேசீய விஸ்தரிப்புத் திட்டப்படி அமைக்கலாம் என்று அதற்குப் பணம் ஒதுக்கி வேலை செய்ய முன் வருகிறார்கள். இவற்றையெல்லாம் எடுத்துச் சொன்னால் ஆத்திரமும் கோபமும் அடைகிறார்களே! குறைகள் நீங்க ஏதாவது செய்தால்தானே நல்லது.

"ஹரிஜனப் பிள்ளைகளும் கல்விச் சலுகையும் பற்றி அரசாங்கம் 'எல்லா ஹரிஜனப் பிள்ளைகளுக்கும் பகல் உணவு அளிக்கப்படுகிறது.' இந்த ஏற்பாட்டிற்குப் பின்னர் அதிகமான பிள்ளைகள் பள்ளிக்கு வருகிறார்கள். அவர்களுடைய சுகாதார நிலையிலும் நல்ல அபிவிருத்தியிருக்கிறது என்று **Harijan Welfare Administration Report**-ல் எழுதப் பட்டுள்ளது. ஆனால் அதே சமயத்தில் ஜில்லாபோர்டார் ஹரிஜன் பிள்ளைகளுக்காக மத்தியான உணவு தஞ்சை ஜில்லாவிலே கொடுத்து வந்ததை சென்ற ஆண்டிலிருந்து நிறுத்திவிட்டார்கள். அதன் காரணமாக பல மைல்களுக்கப்பாலிருந்து ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் தங்கள் படிப்பையே நிறுத்திவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தஞ்சை ஜில்லா ஹரிஜன நலக் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானம் போட்டும் தனிப்பட்டவர்களும் சர்க்காருக்குத் தெரிவித்தும் இன்னும் ஒன்றும் கவனிக்கப்படாமலேயே இருப்பதை எடுத்துச் சொல்ல வேண்டியதாகத்தானே இருக்கிறது. உத்தியோகங்களில் சிலவற்றிற்காவது ஹரிஜனங்களுக்கு பிரத்தியேகமான சலுகைகள் கொடுக்கப்படவேண்டும். ஹரிஜன பிற்பட்ட இனத்தவர்களில் ஜில்லா முன்சீப் உத்தியோக நியமனத்தில் மூன்று ஆண்டுகள் வக்கீல்

தொழில் பார்த்தவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஹரிஜனுக்கும் பிற்பட்ட இனத்தவர்க்கும் இந்த விதி விலக்கு அளித்து இவர்களுக்கு மாத்திரம் இரண்டு ஆண்டுகளிருந்தால் போதும் என்று உத்தரவை ரிலாக்ஸ் **(Relax)** செய்தால் நலமாக இருக்கும். இதைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். உத்தியோகங்களில் இந்த இரு வகுப்பினரும் மிகவும் குறைவாயிருக்கிறார்கள். எல்லா உத்தியோகங்களிலும் ஒரு குறிப்பிட்ட காலவரையிலும் ஒரு **Moratorium** (மாரடோரியம்) உத்தரவு பிறப்பித்து இந்த இனங்களில் உள்ளவர்களையே நியமிக்க (குறைந்தது ஐந்தாண்டுகளுக்காவது) ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

" நிலக் சீர்த்திருத்தத்தைப் பற்றி வெகுவாகக் கூறிக்கொண்டே வந்திருக்கிறார்கள். தற்போது சர்க்காருக்கே சொந்தமான லட்சத்து ஐம்பதினாயிரம் ஏக்கருக்கு மேற்பட்டு இருக்கும் புறம்போக்கு நிலங்களை ஏழை ஹரிஜனங்களுக்குக் கொடுத்தால் அவர்கள் பொருளாதார நிலை உயர ஏதுவாகும். ஆகவே, சர்க்கார் இதை உடனடியாகக் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மாகாண சர்க்கார் உத்தியோகம் பார்க்கும் கெஜட் பதிவு இல்லாத **(N.G.Os.)** வர்களுடைய சம்பளத்தையும் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர் சம்பளத்தையும் பார்த்தால் மிகவும் அநீதியாகவிருக்கிறது. மத்திய சர்க்கார் **(Last grade)** கடைசித்தர உத்தியோகஸ்தரின் சம்பளமும் நமது ராஜ்யத்தில் **Graduate** பட்டம் பெற்றுள்ள உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இதிலுள்ள அநீதி தெரியவரும். இதைத் திருத்தி மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தைப்போல் நமது ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் கொடுக்கப்படவேண்டும். ஹைவேஸ் **(Highways)** மேஸ்திரிகளுக்கு மற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுக்கப்படவேண்டும்."

10-16 p.m. **Sri A. K. SUBBIAH** :—" கனம் சபா நாயகர் அவர்களே! இந்த சபையில் விவாதத்திலிருக்கும் வரவு செலவு திட்ட சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ராஜ்யத்தில் இருக்கக் கூடிய விவசாயிகள் கடன் பளுவால் கஷ்டப்படுகிற இந்த காலத்தில், வரிமேல் வரி போடுவது பெரிய அநியாயமாகும். சென்ற இரண்டு வருட காலமாக இந்த சபையில் வரிபோட்டு மக்களை வாட்டும் கொள்கையை எதிர்த்து வந்திருக்கிறோம். எங்கள் எதிர்ப்பை மீறி, சர்க்கார், மக்கள் மீது வரி போட்டுக்கொண்டேவருகிறது. உண்மையில் இது ஜனங்களுக்காக நடத்தப்படுகிற சர்க்காரா? என்று கேட்கிறேன். பெரிய நிலப் பிரபுக்கள்மீது ஏன் விவசாய வருமான வரிப்போடக்கூடாது. அப்படி வருமான வரிபோட வேண்டுமென்று நாங்கள் பல முறை கூறி வந்திருக்கிறோம். சுமார் 10 ஏக்கர் நிலத்திற்கு மேல் நிலமுள்ளவர்களுக்கு வருமானத்தின் அடிப்படையில் வரி போடலாமென்று அபிப்பிராயப்படுகிறேன்.

" இப்பொழுது போடப்பட்டிருக்கும் வரியானது நிலப்பிரபுக்களை பாதிக்காது, காரணம், அவர்கள் தங்களுடைய நிலங்களை குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். குத்தகைதாரர்களிடம் மா. ஒன்றுக்கு ஒரு மூட்டை, அதிகமாய் வசூலித்தால் அவர்களை ஒன்றும் பாதிக்காது. ஆகவே ஏழை விவசாயிகளைதான் பாதிக்கும் என்று சொல்லுவதற்கு ஆசைப்படுகிறேன்.

" வேலையில்லாத் திண்டாட்டம், நம் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. லட்சக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் திண்டாடி கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், நிலப் பிரபுக்கள், விவசாயிகளை நிலத்திலிருந்தும், பண்ணையிலிருந்தும், வெளியேற்றி வருகிறார்கள். ஆகையால்தான் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. கூலி விவசாய தொழிலாளிகளுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்கும் நிலத்திலிருந்து வெயேற்றப்படுவதை தடுப்பதற்கும் அரசாங்கம் உடனடியாக சட்டம் செய்தாகவேண்டும்.

3rd March 1955] [Sri A. K. Subbiah]

‘ நில சீர்த்திருத்தம் பற்றி மந்திரிகளும், காங்கிரஸ் தலைவர்களும், பிரமாதமாக பிரசாரம் செய்து வந்தார்கள். ஜில்லா போர்டு தேர்தல் காலத்தில், தங்கள் கட்சி ஜெயிக்கவேண்டுமென்பதற்காக பிரசாரம் செய்தும், நில சீர்திருத்த கமிட்டியென்று ஒரு கமிட்டியும்போட்டு, பிரசாரம் செய்தார்கள். பத்திரிகைகளில் எழுதி வந்தார்கள். தேர்தல் முடிந்தவுடன் அதைப்பற்றிய பேச்சை விட்டுவிட்டார்கள். பட்ஜெட் கூட்டத்தில் நிதி மந்திரியவர்கள் நில சீர்த்திருத்தம் பற்றி பேசுவார்கள் என்று எதிர்ப்பார்த்த மக்கள் ஏமாந்து விட்டார்கள். நில சீர்திருத்தத்தைப்பற்றி சர்க்கார் கவலைப்படுவதாக தெரியவில்லை.

“ சென்ற சில தினங்களுக்குமுன் முடிவடைந்த தேனாம்பேட்டை காங்கிரஸ் எக்ஸிபிஷனில் சர்க்கார் நீர்பாசன ஸ்டாலில் செங்கற்பட்டு ஜில்லா, காணியாறு திட்டம் என்று ஒரு திட்டத்தை போட்டு இந்த திட்டம் ஐந்து ஆண்டு திட்டத்தில் சேர்த்துகொள்ளப்படுமென்றும், திட்டம் அமுலுக்கு வந்தால் சுமார் 1,200 ஏக்கர் நிலம் பாய்கால் வசதி பெறுமென்றும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3,000 செலவாகுமென்றும் திட்டங்கள் கொடுக்கப்பட்டிருந்தது.

“ தஞ்சை ஜில்லாவில் தண்ணீர் வடிவதற்கு வசதி செய்துக்கொடுத்தால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நல்ல முறையில் விளைவுக்கு வரும். குறிப்பாக திருத்துறைப்பூண்டி தாலூகாவில், கந்தபரிச்சான் வாய்க்காலுக்கு வடிகால் வசதி இல்லாததால் 1,800 ஏக்கர் நிலம் வருடா வருடம் தண்ணீரில் மூழ்கி பயிர்கள் பாழாகிவிடுகின்றன. இந்த வடிகால் வசதியை செய்துகொடுக்க வேண்டுமென்று பல வருடங்களாக அந்தப் பகுதி மக்கள் கோரிவருகிறார்கள். சென்ற சபையில் அங்கத்தினராயிருந்த திரு. வேதரெத்தினம் பிள்ளையவர்களும், இது விஷயமாய் கோரி வந்திருக்கிறார்கள், இந்த கந்தபரிச்சான் வடிகால் திட்டத்தை இந்த வருடமே எடுத்துக்கொண்டு, நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ திருத்துரைப்பூண்டி, மன்னார்குடி தாலூகாக்களில், வேதாரணியம், வடுவூர் ரேஞ்சுகள், காடரம்பலம், பிரதேசங்கள், அவைகளுக்கு நீர்பாசன வசதிகள் செய்துக்கொடுக்க வேண்டும். அரசியல் பாகுபாடு காட்டாமல், கம்யூனிஸ்டுகள் ஜெயித்த பகுதிகளுக்கு அபிவிருத்தி வேலைகள் செய்து தருவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

“ ஹரிஜனங்களின் நிலைமைகளைப் பற்றி சில வார்த்தைச் சொல்வதற்கு விரும்புகிறேன். ஹரிஜனங்கள் சொல்ல முடியாத அளவுக்கு கொடுமைப் படுத்தபடுகிறார்கள். குடியிருப்பதற்கு சொந்தமாக மனைகள் கிடையாது. நடப்பதற்கு பாதை கிடையாது. பிணங்கள் எடுத்துச் செல்ல முடியாது. இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டு வருகிறது. முன்னால் மந்திரியாயிருந்த கனம் வி. சி. பழனிசாமி கவுண்டர் அவர்களே, தஞ்சையிலும், மலபாரிலும், அங்கே இருக்கக்கூடிய மிராஸ்தார்கள், ஹரிஜனங்களை மனைகளிலிருந்து வெளியேற்றுவது உண்மை என்று ஒப்புக்கொண்டார்கள். மனைகளை சொந்தமாக்கும், மூன்றாண்டு திட்டம், ஒன்று சர்க்கார் கொண்டுவருமென்று ஒப்புக்கொண்டும் அம்மாதிரியான திட்டம் கொண்டு வரப்படவில்லை, பெரும்பாலும், மிராஸ்தார்கள்தான் மனைகளை சொந்தப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகையால், ஹரிஜனங்கள் மிராஸ்தார்களின் தயவில் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தாலும் கோவில் நுழையும் திட்டத்தாலும் சுதந்திரம் கொடுத்து விட்டோம் என்று சொல்லப்படுகிறது. உண்மையிலேயே இந்த திட்டங்கள் அமுலாக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுத்து மனைகளை, சொந்தமாக்கி நடைபாதை வசதிகள் செய்துக்கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ஹரிஜன குழந்தைகள், மிராஸ்தார்கள் வீட்டில் மாடு மேய்க்க வேண்டும். அப்படி மாடு மேய்க்க வில்லை என்றால் ஹரிஜனங்களை மனைக்கட்டிலிருந்து வெளியேற்றப்படுவார்கள், ஆகவே மிராஸ்தார்கள்

பிரியத்திற்குத்தான், கட்டுப்பட்டு நடந்தாக வேண்டும். ஹரிஜன அபிவிருத்திக்காக எவ்வளவு ரூபாய் அதிகமாக ஒதுக்கினாலும், ஹரிஜன குழந்தைகள் படிக்க முடியாது. அடிமை படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

" போலீஸார்கள், ஹரிஜன சேரிகளுக்கு செல்லக்கூடாதென்று ஒரு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸார்கள் சேரியில் புகுந்து செய்யும் கொடுமைகள் சொல்லமுடியாது. அந்த அளவுக்கு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். சேரிகளுக்கு போடப்பட்டிருக்கும் ரோடுகளை சீர்படுத்திக் கொடுப்பது கிடையாது. தஞ்சை ஜில்லா போர்டாருக்கு சொந்தமான ரோடு ஒன்று சித்தமல்லியிலிருந்து, கவர்னர் சந்தானம் அவர்கள் கிராமமாகிய கும்மட்டிதிடலுக்கு போகிறது. எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் போட்ட ரோடு பாழடைந்து கிடக்கிறது வண்டியும் போக முடியாது, ஜனங்களும் நடக்க முடியாது. ஜில்லா போர்டாரிடம் ரோடு போடச் சொன்னால் பணம் கிடையாது என்று சொல்லி விடுகிறார்கள். ஹரிஜன மாணவர்களுக்கு ஜில்லா போர்டார் நடத்தும் உயர்நிலைப்பள்ளியில் மாலை உணவு கொடுத்து வந்தார்கள். அதையும் நிறுத்திவிட்டார்கள். ஆகவே தஞ்சை போர்டுக்கு அதிகமான தொகை பணம் ஒதுக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன்."

*Sri M. KANDASWAMY PADAYACHI :—" கனம் சபா நாயகர் அவர்களே, நமது நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் 1955-56 வருஷத்திய வரவு செலவு திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச முன் வந்துள்ளேன். இந்த ஐந்து வருஷ திட்டத்தை நடத்தும்போது நமது மாகாணத்தில் மழை இல்லாத காரணமாக இருந்தாலும் இரண்டு மூன்று வருஷங்களில் செய்ய வேண்டியதை இந்த வருஷமே செய்து முடிக்க முன் வந்ததைக் கண்டு நான் சந்தோஷப்படுவதோடு அது ரொம்பவும் வரவேற்கத்தக்கது என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

10-30 p.m. " இந்த ஐந்து வருஷ திட்டத்தின் கீழ் புதியதாகக் கொண்டுவரப்படும் நீர்ப்பாசன வேலைகளையும் மின்சார வசதிகளையும் நகரங்களில் செய்வதைவிட கிராமங்களில் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வர வேண்டும்.

" முதலாவதாக நீர்ப்பாசன திட்டத்தை எடுத்துக் கொண்டால் அதில் பெரிய பெரிய திட்டங்களை எடுத்து நடத்துகிறார்கள். அவைகள் எல்லாம் மெச்சத்தக்க திட்டங்கள். அதில் ஒன்று கீழ்பவானி திட்டம். கீழ் பவானி திட்டத்தில் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் மேட்டுப்பாங்கான பிரதேசத்திற்கு நீர் பாய்வதற்கு வசதி செய்து கொடுத்ததைக் கண்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். மற்றுமுள்ள மேட்டுப்பாங்கான நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" தென்னாற்காடு திருக்கோவிலூர் தாலூகாவில் உளுந்தூர்பேட்டை ஒரு மேட்டுப் பாங்கான இடம். கள்ளக்குறிச்சி, கொங்கு நாடு முதலிய பிரதேசங்கள் மேட்டுப் பிரதேசம். அவைகளுக்கெல்லாம் நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால் வசதியாக இருக்கும். அப்படிச் செய்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்ளுகிறேன்.

"எங்கள் பிரதேசத்தில் அநேக பயிர்கள் எல்லாம் தண்ணீர் இல்லாமல் மழை இல்லாமல் காய்ந்து போய்விட்டன. குளங்களிலும் ஏரிகளிலும் தண்ணீர் கிடையாது. ஏரிகள் உடைந்து போய் ரோடுகள் எல்லாம் மூடிப் போய்விட்டன. ஒரு வருஷத்திற்கு வேண்டிய பயிர்களைக் கூட எழுப்ப முடியாமல் தண்ணீர் எல்லாம் போய்விட்டன. அதனால் மழை பெய்யும் காலங்களில் அந்தத் தண்ணீரை ஏரிகளுக்கு விட்டு வைத்தால் சௌகர்யமாக இருக்கும்.

3rd March 1955] [Sri M. Kandaswamy Padayachi]

"அடுத்தபடியாக மின்சாரம். மின்சார வசதி நகரங்களுக்கு மட்டும்தான் செய்து கொடுக்கிறார்கள். கிராமங்களில் விவசாயம் செய்வதற்கு அதிகப்படியான மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது. அதனால் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கும் படியாக நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். உளுந்தூர்பேட்டையில் இப்பொழுது மின்சார வசதி செய்து கொடுக்கப் போவதாக தெரிகிறது. அதிலிருந்து கள்ளக்குறிச்சிக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க தயாராக இருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. திருக்கோவிலூரிலிருந்து சுமார் 20 மைலுக்கு மின்சாரத்தைக் கொண்டுபோனால் நடுவிலுள்ள கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்து விடலாம். அதனால் மேட்டுப் பாங்கான இடமாக இருக்கும் இடங்களில் தண்ணீர் வசதி இல்லாததால் மின்சார உதவியினால் தண்ணீர் வசதி செய்து கொண்டு விவசாயம் செய்வதற்கு சௌகர்யமாக இருக்கும். மற்ற திட்டங்களையும் ஏற்று நடத்த சௌகர்யமாக இருக்கும்.

"அடுத்தப்படியாக நெய்வேலி திட்டம், அதாவது பழுப்பு நிலக்கரியை சுரங்கங்களிலிருந்து எடுக்கப் போகிறார்கள். அதனால் நம்முடைய ராஜ்யத்திற்கு வருமானம் வருவதற்கு வழிகோலியாக இருக்கிறது. நாம் இப்பொழுது 80 லட்சம் ரூபாய் செலவு செய்த பிறகு அதை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ளப்போவதாகத் தெரியவருகிறது. ரொம்பவும் சந்தோஷம். ஆனால் அவர்கள் வருகிற வருமானத்தில் நாலில் ஒரு பங்கு நமக்கு கொடுப்பது என்றால் அது ரொம்பவும் விசனிக்கத் தக்கது. பாதி வருமானத்தையாவது கொடுத்தால்தான் நல்லது. அப்பொழுது ஜனங்களுக்கு வசதியாக இருக்கும். அத்துடன் சேலம் ஜில்லாவில் இரும்புக்கனி இருப்பதாக தெரிய வருகிறது. இங்கு இரும்பு தொழிற்சாலையை அமைத்தால் அதற்கு இந்த பழுப்பு நிலக்கரியை உபயோகிக்க சௌகர்யமாக இருக்கும்.

"அதோடு குடி தண்ணீர் வசதி. கிராமங்களில் ஜனங்கள் குடி தண்ணீர் வசதியின்றி கஷ்டப்படுகிறார்கள். அதனால் தொத்து நோய் ரொம்பவும் பரவி வருகிறது. நரம்புச் சிலந்தி போன்ற வியாதி பரவுகிறது. ஆகவே ஒவ்வொரு கிராமத்திற்கும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது ரொம்பவும் முக்கியமாகும். குடி தண்ணீர் வசதி செய்துகொடுத்து விட்டால் தொத்து நோய் பரவுவதைத் தடுத்து விடலாம்.

"பஞ்சப் பிரதேசங்களிலுள்ள விவசாயப் பயிர்களுக்கு ஒரு வித நோய் பரவி வருகிறது. குறிப்பாக மணிலாக் கொட்டைப் பயிருக்கு ஒரு வித கம்பளி பூச்சி விழுகிறது. அதற்கு எந்த விதமான மருந்தும் காலாகாலத்தில் கொடுப்பதில்லை. ஒரு சில இடங்களில் இரவில் போய் அந்தப் பூச்சி பிடிக்க வேண்டும். இதற்கு சர்க்கார் தக்க ஏற்பாட்டைச் செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு டெமான்ஸ்ரேட்டரை வைத்தாவது பயிர்களில் பூச்சி விழாத வாறு பார்த்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும்.

"அடுத்தபடியாக பல இடங்களில் ரோடுகளின் குருக்கே மரங்கள் விழுந்து போக்கு வரத்துக்கு தடை விளைவிக்கிறது. திருவண்ணை நல்லூரில் இம்மாதிரி ரோடின் குருக்கே மரம் விழுந்து போக்கு வரத்து தடைபட்டிருக்கிறது என எழுதிக் கொடுத்த போதிலும் கூட மரம் அகற்றப் படவில்லை. இதை உடனடியாக கவனித்து போக்கு வரத்து ஸ்தம்பிக்காமலிருக்கும்படி செய்யவேண்டும். 10–35 p.m.

"500 பேர்களுக்கு மேல் ஜனத் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பள்ளிக்கூடம் இருக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன். இல்லாவிட்டால் நாம் அளித்திருக்கக் கூடிய இலவசக் கல்வியினால் கிராம மக்களுக்கு அதிகப் பயன் இராது. மேலும் கிராம மக்களுக்கு எப்படி வோட்டுச் செய்வது என்றே தெரிய வில்லை. முன்பாவது சின்னங்களைக் காட்டி வோட்டு வாங்கினோம். ஆனால் இப்பொழுதோ

பெயருக்கு எதிரில் 'மார்க்' பண்ண வேண்டியிருப்பதால் அவசியம் கிராமங்களிலுள்ள பெண் மணிகளுக்கெல்லாம் கல்வி கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். கிராமப்புறங்களில் அவசியம் 5 மைலுக்குள் ஒரு ஹைஸ்கூல் இருக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாகும். அப்பொழுதுதான் மூன்றும் பாரம் வரையில் இலவச மாகக் ஏழை கிராம மக்கள் படித்துப் பயனடைய முடியும்.

"மேலும் விலைவாசிகள் ஒரேயடியாகக் குறைந்து வரும்போது நாம் நில வரி, தண்ணீர் தீர்வை ஆகிய எல்லாவற்றின் மீதும் ரூபாய்க்கு 2 அணு சர்சார்ஜ் விதிப்பது சரியல்ல என்பதே என் அபிப்பிராயம். இல்லை யென்றால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லின் விலை மூட்டை 15 ரூபாய்க்குக் குறையாமலிருக்கும்படியாக உத்திரவாதம் செய்தால் இந்த வரி போட்டால் விவசாயிகளால் கொடுக்க முடியும். இதை அர சாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—"The House is adjourned to to-morrow till 8-30 a.m."

The House then adjourned.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Appendix I.

[Vide answer to starred question No. 1040 asked by Sri A. Ratnam at the meeting of the Legislative Assembly held on 3rd March 1955, page 317 supra.]

(*a*) During the year 1953–54 Co-operative Milk Supply Societies in the State were given a free grant of Rs. 8,160 and a loan of Rs. 7,19,093 besides the following other concessions which the Government have sanctioned to these societies from time to time, viz.,—

(1) In respect of contract for the supply of milk to the State hospitals, jails, etc., Government have ordered that their rates even if they are slightly higher than those quoted by other tenderers should be accepted provided the rates quoted by the societies do not exceed their retail rates.

(2) The Milk Supply Co-operatives have been exempted from depositing earnest money while making tenders and from the payment of security deposit varying from 5 to 10 per cent of the total value of articles tendered.

(3) Government have ordered that sales tax should be collected only at a single point, viz., at the point of actual sale of milk to the consumers. All the primary Milk Supply Co-operatives affiliated to the Co-operative Milk Supply Unions were, therefore, exempted from the payment of sales tax.

(4) The Milk Supply Co-operatives have been permitted to remove grass free of cost from the reserve forests and ensilage it for use in summer months.

(5) Veterinary officers have been directed to inspect periodically the milch cattle belonging to the milk supply organizations and the milking centres maintained by them free of charge and also to check their milk records.

(6) Government have stationed breeding bulls at certain Government Veterinary institutions. The animals belonging to the members of milk supply institutions are entitled to free services.

(7) Government sanction subsidy to deserving milk supply societies to meet 50 per cent of the cost of breeding bulls to be purchased by them and maintained for the benefit of their members.

(8) Municipal councils and district boards have been permitted to construct pucca sanitary cattle shed and rent them on easy terms to milk supply societies.

(9) Loans are sanctioned for the purchase of milch animals as also for the purchase of motor lorries to facilitate the transfer of milk.

(10) The Government provide staff free of cost to supervise financially weak societies in deserving cases.

(*b*) 56,963.

Appendix II.

[Vide answer to starred question No. 1051 asked by Sri K. Aranganathan at the meeting of the Legislative Assembly held on 3rd March 1955, at page 327 supra.]

At present only a pilot lignite quarrying project is in progress to determine the economic fertility of a large-scale integrated scheme for the mining and utilisation of lignite. During the mining of lignite, fire clay, white clay and water will also be obtained. Lignite can be processed to yield raw lignite briquettes, carbonised briquettes, carbonised dust, tar, phenol, nitrogenous fertilisers, motor spirit, diesel oil and sulphuric acid.

Fire clay is suitable for manufacturing fire bricks, stoneware pipes, etc., and white clay is suitable for manufacturing crockery, low and high tension insulators, sanitaryware, etc., and for use as fillers in the textile, rubber and paper industries and for medicinal compositions. Water which will be available in fairly large quantities from the artesian aquifer will be adequate for the industrial plants proposed to be located at Neyveli, such as, Thermal Station, Fertiliser Plant, Briquetting Plant and for water-supply for the colony. Any surplus which may be available could be used for irrigation.

Lignite can be made into briquettes which can be used as fuel for industrial plants at the spot. The lignite can also be carbonised and transported to long distances for use as industrial and domestic fuel. During the carbonization of lignite briquettes, tar can be obtained and used as liquid fuel in boilers and furnaces and will also serve as raw material for making various chemicals including sulphur and motor spirit and diesel oil. Fractional distillation of lignite can yield oils which will be suitable for use as wood preservatives and disinfectants and also pitch which can be used as a constituent of road tar and as a source for electrode carbon used in the electro-chemical industries like aluminium production, etc. Another product obtained by processing lignite is montan wax, which can be used for manufacturing polishes, insulating materials, gramaphone records, wax, papers, etc., and for explosives.

3rd March 1955]

APPENDIX III.

[Vide answer to starred question No. 1055 asked by Sri E. T. Kunhan at the meeting of the Legislative Assembly held on 3rd March 1955, page 330 supra.]

(*a*) The answer is in the negative.

(*b*) There are 160 Harijan Welfare School teachers in the Malabar district. All these teachers have not been paid the increments due to them from 1947 onwards.

The pay of all these teachers was refixed in 1947. When some arrear bills of teachers were sent to the Accountant-General in 1950–51 for pre-audit, he stated that the pay refixation statement of 1947 should be got approved by him before the arrear bills were passed. This was under correspondence for some time between the Collector and the Accountant-General and the pay refixation statement could be got approved by the Accountant-General only in 1953. The increments were then sanctioned and some supplemental bills prepared. This work could not be attended to more expeditiously for want of special staff in the office of the Collector of Malabar. The Accountant-General further wanted that the Huzur Treasury voucher numbers of all the old bills should be furnished in the supplemental bills. When some of the supplemental bills were sent to the Accountant-General for pre-audit he returned them stating that he would depute an inspection party to Malabar shortly and that all the audit would be done at the concerned drawing office itself, so that the work might be done without inconvenience and delay. Accordingly a Test Audit Accountant deputed by the Accountant-General has checked the pay refixation statement with the service registers concerned. The Accountant-General has also since approved the pay refixation statement in respect of certain teachers and the rest are reported to be under check.

The employment of two lower division clerks has been sanctioned to expedite the work.

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS